
புலவர் கதை

முதற் பாகம்

பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்
மணி. திருநாவுக்கரசு முதலியார்
எழுதியது.



உமாதேவன் & கம்பேனி
16, செம்புதாஸ் தெரு
ஜார்ஜ் டவுன், சென்னை.

 1947 [விலை அணா 12

Approved by the Text-Book Committee, Madras
for class use.
Vide Page 10, Part II of the list of Approved Books-
Supplement to Part I-B of the Fort St.
George Gazette dated 9-10-1945

Printed at The Jupiter Press, Ltd., Madras,
(Paper Issue Card No. Q. H. MS. 391—2000 copies—47.

68-2

பாயிரம்

இஃது ஓர் ஆராய்ச்சி நூல் அன்று; தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடல், விநோத ரச மஞ்சரி முதலிய நூல்களையும் வழிவழி வந்த கேள்விகளையும் அடியாகக் கொண்டு கற்பவருக்கு மனவெழுச்சியும் தமிழ்ச்சுவையும் உண்டாக வேண்டுமென்னும் கருத்தான் எழுதப்பட்டது. இதன்கண்ணுள்ள பாடல்களை, அவற்றின் அழகும் நயமும் அறிந்து, நெட்டுருச் செய்தல் எவ்வாற்றானும் சிறந்தது. இதிற் கொள்ளப்பட்ட நடை தமிழறிவைப் பெருக்குவதற்குத் தகுதியானது. தமிழகம் இதனை ஆதரிக்குமென நம்புகின்றேன்.

இங்ஙனம் :

அன்பன்,

மணி. திருநாவுக்கரசன்.

பொருளடக்கம்

புலவர் கதை

முதற் பாகம்

---

1. அவ்வையார்

'கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும், மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார் யார்
நல்லான் பிறக்குங் குடி?'

—விளம்பி நாகனார்

கல்வி அழகே அழகு. இவ்வழகு இல்லையாயின் எத்தகைய வனப்பும் பயன்படாது. அது மண்ணாற் செய்த பாவைக்குச் சுதை தீற்றி நிறமூட்டியதுபோல விளங்குமேயன்றிப் பொருளாக அறிஞரால் கருதப்படாது. கல்வி இல்லாத மாந்தர் கூறுஞ் சொல்லும், நுட்பமுடையதாயினும், ஆன்றோராற் கொள்ளப்படமாட்டாது. கற்றுவல்ல புலவர் சொல்லிலே நறுமணம் வீசும். அவர் மனம் திருத்தப்பட்ட செம்புலம்போலச் சிறந்து திகழும். அவர் உள்ளம் விரிந்து பரந்து நிற்கும். அவர் அறிவு நுணுகி விரியும். அவர் நடை பிறருக்கு மகிழ்ச்சியை விளைவித்தலோடு தமக்கும் ஓர் அணியாய்த் துலங்கும்.

இத்தகைய கல்வி ஒருவர் பங்கன்று. இதனைச் சிறுகுடிலில் வாழும் ஒரு வறியவனும் பெறலாம். இவ்விழுச் செல்வம் சந்தானமாகப் பெறற் பாலதன்று. இதற்குச் சிறந்த குலம், உயர்ந்த பதவி முதலிய பேதங்களில்லை; ஆண்

பெண் என்ற பாற்பகுப்பும் இல்லை. ஆடவர் கல்வி அறிவிற் சிறந்து திகழ்தல் போன்றே பெண்டிரும் மிகுந்து விளங்கலாம். பெண்பாலாருக்கே அன்றி ஆண்பாலாருக்கும் ஓர் அபிஷேக ரத்தினம்போல மிளிர்ந்த அவ்வையார் என்னும் அருந்தமிழ் மூதாட்டியாரைத் தமிழகத்தில் அறியாதவர் இலர். பெண்மக்கள் கலை நிரம்பி நின்றமைக்கு எடுத்துக் காட்டாக எவரும் அவ்வையாரையே சுட்டுவர். இச்செல்வியின் நாப்புலமையும் அருளுடைமையும் ஆடவரும் மூக்கின் உச்சியிலே தம் சுட்டுவிரல் சேர்க்குமாறு செய்துவிட்டன. இவர் பாடிய பாக்கள்தோறும் சொற்சுவையும் பொருட் சுவையும், இனிய பழத்தின் சுவை எங்கும் பரந்திருத்தல் போல நிரம்பி நிற்கின்றன. உயர்ந்த குறிப்புகள் ஆங்காங்கு மின்னுகின்றன; இவை கற்போர் உள்ளத்தில் பசுமரத்தாணி அறைந்தாற்போலப் பதிகின்றன. இக் கலைமகளார் தோன்றி ஆண் மக்கள் எல்லோரையும் தமது வளங் கெழுமிய கவிகளின் இனிமையால் அடிமை கொண்டுவிட்டார். இவரைப் பற்றி வழங்கும் கதைகள் அளப்பில. இவர் வரலாறு காலமென்னும் காரிருளால் கவியப்பெற்றதேனும், கேள்வி வழியாக வழங்கிவரும் கதைகளை ஒரு முறைப்படுத்தி ஈண்டுக் கூறுவோம்:

இத்தெய்வத் திருமகளார் யாளிதத்தன் என்னும் முனிவருக்கு அரும்புதல்வியாகத் தோன்றினர். அவருடன் உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, திருவள்ளுவர் என்னும் அறுவரும் பிறந்தனர். யாளிதத்த முனிவர் தமது மனைவியுடன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அவ்வையாராகிய அருமந்த மகவு பிறந்தவுடன், அதனை அங்ஙனே இட்டு, விட்டுச் செல்லத் துணிந்த தாய், அச்செல்வச் சிறு மதலையின் பாலொழுகும் அழகிய அளிவரும் முகத்தை நோக்கி, “அந்தோ! கருங்கன் மனமுடையவர்களும் தாம் பத்துத் திங்கள் சுமந்து பயந்த குழவியை விட்டுப் பிரியத்

துணிவரோ? உலகத்தில் 'கன்றைவிட்டுப் பிரியும் தாய்' என்று, பிரியக்கூடாத நிலைமைக்குப் பெரியோர் எடுத்துக் காட்டாக இயம்புவரோ? இக் குழந்தையின் மெல்லிய இளந்தளிரைப்போன்ற மேனி வெங்கதிரால் வாடுமே! விலங்குகள் எவையேனும் இதன்மேல் நடந்துசெல்லுமே! இதன் இனிய விழிகள் என்னையே நோக்குகின்றனவே," என்று செல்வதற்குக் காலெழாமலும், மேற்சொல்வதற்கு நாவெழாமலும், பதை பதைத்து யாளிதத்த முனிவர் கோபத்திற்கு அஞ்சி, அச்சம் ஒருபா லிழுப்ப, குழந்தை மேல் ஓடிய அன்பு மற்றொருபால் உள்ளத்தோடு உயிரையும் ஈர்க்கக் கண்ணீர் சொரிந்து நின்றாள். இதனைக் கண்ட அப் பச்சிளங் குழவி தெய்வத் திருவருளால் அன்னையின் கண்ணீரைத் தன் அழகிய கையால் துடைத்து, அல்லலைத் தீர்ப்பதுபோலப் பின்வரும் இனிய கவியை இசைத்தது:

> இட்டமுடன் என்றலையில் இன்னபடி என்றெழுதி
> விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ?—முட்டமுட்டப்
> பஞ்சமே ஆனாலும் பாரமவ னுக்கன்றாய்,
> நெஞ்சமே அஞ்சாதே நீ.

இச்செய்யுளைக் கேட்ட தாய் ஈன்றஞான்றினும் பெரிதுவந்தாளாய்த் தனது அருமைக் கண்மணிக்கு ஐயன் திருவருளிருத்தலால், யாதுந் தீங்கு நேராதெனத் துணிந்து, அழுகைக் கண்ணீர் மாறி ஆனந்தக் கண்ணீர் வழியப் புன்னகை துளும்ப, அத்திருமுலையைப் பார்த்த வண்ணம் தெய்வத் திருவருளை வழுத்திக்கொண்டு, முனிவர் பின்னே கற்பு நடை வழுவாப் பொற்பு நடையுடன் சென்றாள்.

பெற்றோரால் விடப்பட்ட அவ்வருமகவு தனது பாட்டின் சுவையைப் பிற்காலத்தார் சுவைத்து இன்புறுவதுபோலத் தாமரை மலரைப் போலச் சிவந்து அழகிய

சிறிய அடியின் பெரிய விரலைச் சுவைத்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது அவ்வழிச் சென்ற பாணன் ஒருவன் பழுமரத்தின் கீழ், யாருங் கால்வைத்து நடக்கலாகாத வேர்களின் இடையிலே பொருந்தியிருந்த ஓரிடத்தில் மெல்லிய தளிர்களைப் பாயலாக விரித்து, அதன்மேல் கிடத்தப்பட்டிருந்த அருள் சிறந்த குழந்தையைக் கண்ணுற்றான். அதனைப் பார்த்தவுடன் அவனுக்கு என்றும் உணராத ஓர் இன்ப உணர்ச்சி உதித்தது. அம்மதலை அவனைத் தாவிச் செல்வதைப்போல் தனது கைகளையும் கால்களையும் அசைத்தது. உடனே அப்பாண்மகன் அருள்சுரந்த மனத்தினனாய்த் தன்னிரு கரங்களாலும் அதனை வாரி எடுத்துக் கொண்டான்; உச்சிமோந்தான்; பவழம்போன்ற வாயிற் பல்லாயிரம் முத்தம் வைத்தான். பின்னர் அவன் வேறொருவரும் காணாதபடி அதனைத் துகிலால் மறைத்துக்கொண்டு கடுக நடந்து தன்னில்லத்தை யடைந்தான். அடைந்தவன், காதற்கிழத்தியை விளித்து, "பெண்மணியே! நம் பிள்ளைக் கலியைத் தீர்க்கக் கண்ணுதற் பெருமான் அருள் செய்தது இது. இம்மகவின் அழகொழுகும் வடிவத்தினையும் அன்பொழுகும் திருக்கண்களையும் இன்பொழுகும் செவ்வாயினையும் காணுக," என்று கூறித் தன் மனைவியின் கரத்துக்கு நேரே அதனை நீட்டினன். அவளும் அக்குழந்தையை இரு கைகளாலும் வாங்கி, அதன் முகத்தை உற்று நோக்கினள்; அவள் உள்ளம் நெக்குவிட்டது; உடம்பு சிலிர்த்தது; விழிகள் அன்பு நீரைப் பொழிந்தன; மார்பில் பால் சுரந்தது. உடனே அவள் அக்குழந்தைக்குப் பாலூட்டினள். அது வயிறார உண்டு பசி தீர்ந்தது. பாணனும் பாணிச்சியும் தாம் பெறாது பெற்ற செல்வப் பேற்றை எண்ணி யெண்ணித் திருவருளைச் சிந்தித்துக் கண்ணை இமை காப்பதுபோல அக்குழவியைப் பாதுகாத்து வந்தனர்.

இவ்வாறு அம்மகவு நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்து ஐயாட்டைப் பருவம் அடைந்தது. அப்போது பாணன், இயற்கையிலேயே பாட்டுப்பாடும் தொழிலேயே குலத்தொழிலாகக் கொண்டிருந்தமையான், தன் அருமை மகளுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினன். 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' என்றபடி அந்நங்கைக்குக் கல்வி தானே வளர்வதாயிற்று. அன்றியும் அச்செல்வி தெய்வத் திருவருள் கைவரப் பெற்றவளாதலின், அவளுக்குத் தான் கற்கும் கல்வியனைத்தும், முன்னே தான் கற்றவைகள் நினைப்பூட்டப்பட்டவை போலத் தோன்றின. அங்ஙனம் அப்பெண்மணி பாணருக்கு இயற்கையாகவுள்ள ஆடல் பாடல் முதலிய தொழில்களில் தேர்ச்சியடைந்தாள்; தமிழ்ச் செய்யுள் இயற்றப் புகுந்தாள். அப்பாட்டுக்களின் செவ்வியை அறிந்த நன்மக்கள் எல்லோரும் இம்மாதரசியைப் போற்றுவாராயினர்.

பேதும்பைப் பருவங் கடந்து நம் தமிழ்ச் செல்வி மங்கைப் பருவம் அடைந்தாள். மங்கைப் பருவம் அடைந்ததும், உலக வாழ்வை அடையும் விருப்பம் தனக்கு இன்மையைத் தன் பெற்றோருக்குப் பன்முறை புலப்படுத்தியும், அன்னோர் தம் புதல்வியின் உறுதிச் சொல்லைப் பொருள் செய்யாது அவளைத் தக்க வரன் ஒருவனுக்கு மணஞ்செய்விக்க விழைந்தார். அப்போது பெண்ணைப் பார்ப்பதற்காக மணமகன் வீட்டினின்றும் சிலர் போந்தனர். அவரைக் கண்டவுடன் பெற்றோர் தம் மிளங்குமரிக்குப் புனைவன புனைவித்தும் பூட்டுவன பூட்டுவித்தும் அலங்கரித்தனர். அவ்வம்மை அவற்றையெல்லாம் களைந்து, ஒரு புறத்தே எறிந்துவிட்டுத் தான் ஒரு கிழிந்த பழஞ்சேலையை உடுத்திக்கொண்டு, முக்காடிட்டுக் குனிந்து, தண்டொன்று கையிற்றாங்கி, நிலத்தை நோக்கிய வண்ணம் நின்றனள். இக்கோலத்தைப் பெண் பார்க்க வந்த பாவையர் கண்டு

மருண்டு தமது கருத்துத் தவிர்ந்து சென்றனர். இச்செய்தி யாண்டும் பரவியபின் ஒருவரும் அம்மங்கையை மணப்ப தற்கு முற்போந்திலர். பெற்றோரும் அவ்வெண்ணத்தை அறவே ஒழித்தனர். நந்தந் தமிழ்த்தேவியும் அன்றுமுதல் முதுமைக் கோலத்தையே புனைந்து வாழ்வாளாயினள்; செய்யுள் செய்தலையே தனக்கு உரிய வேலையாகக்கொண்ட னள்; கற்றலும், கவி செய்தலுமே தொழிலாகக்கொண்டு தமிழ் நாடு முழுவதும் திரிந்து, தனது நாவின் சுவையால் முடியுடை வேந்தரும், சிற்றரசரும் வேண்டிப்பெறும் நட் புடையளாய் வாழ்ந்து வந்தனள். கிழக்கோலம் பூண்ட நாள்தொட்டுத் தாய் என்னும் பொருளைத் தரும் அவ்வை என்னும் பேர் இவளுக்கு வழங்கலாயிற்று; எங்கும் அவ்வையார்! அவ்வையார்! என நன் மதிப்புடன் யாவ ராலும் அழைக்கப்பட்டுத் தனது கீர்த்தி தமிழ்நாடெங்கும் பரவ இனிதிருந்தனள்.

இங்ஙனம் அவ்வையார் வாழ்ந்து வருங்கால், அவரை விருந்தினராக விரும்பி யேற்று இன்னுரையாடி மகிழ் வெய்துவோர் பலர். கல்விச் செல்வர் நுண்ணறிவுடன் சொல்லும் சொற்களினும் சுவை மிகுதி பயப்பது உண்டோ? ஆதலின், அவ்வையாராகும் அருந்தமிழ் மணி யைத் தம்பால் இருத்திக்கொள்ள விழையும் வேந்தரும் பலர் உளராயினர். ஆனல் அவ்வையாரோ ஓரிடத்திலேனும் பொருந்தி யிருக்கமாட்டார். அவர் மனதுக்குத் திரிந்து வாழும் வாழ்க்கையே இசைந்தது. ஒரு பற்றுமின்றி உடம்பையும் மிகையாகக் கருதும் உண்மைத் துறவிகள் ஓரிடத்தே அமர்ந்து உறைதல் அருமையன்றோ! அப் போது பாரி என்னும் மன்னவன் ஒருவன் இருந்தான். அவன் புலவர்க்கு வரையாது வழங்கும் வள்ளல். அவ னுடைய மலை பறம்புமலை: அவனைப்பற்றிக் கபிலர் என் னும் பெரும்புலவரும்,

'பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர் ;
பாரி ஒருவ னும்அல்லன்,
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.'

எனப் புகழ்ந்து பாடியுள்ளார். அவன் அவ்வையாரிடம் பெருங்கேண்மை உடையவன் ; அவனிடம் அடிக்கடி அவரும் போய்ச் சின்னாள் வைகுதல் உண்டு. அவ்வேந்தன் தமிழரசியாகிய அவ்வையாருக்குப் பொற்பூ முதலிய பரிசில் அளித்துச் சிவிகை மீதேற்றிச் சிறப்பிப்பான். அவனுக்கு அவ்வையாரை விட்டுப் பிரிவதென்றால் உயிர் உடலை விட்டுப் பிரிவதுபோற் றோன்றும். அதனால் அவருக்கு எப்பொழுதும் ஊருக்குப் போக விடைதாராது காலந் தாழ்த்துக் கடைமுறையாகப் பரிசு தந்து வருத்தத்தோடு அனுப்புவான்.

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.'

என்பது பொருளுரை யன்றோ? ஒருமுறை அவ்வாறு அவன் அவ்வையாருக்கு விடை யளித்து அனுப்பியதும் அவன் மனம் ஒரு நிலைப்படவில்லை; அதனால் அவன் நெடிது வருந்திப் பின்னர்த் தன் ஏவலாளர்களை விளித்து, "அவ்வையார் கொண்டுபோகும் பரிசிற் பொருள்களைப் பறித்துக்கொண்டு வருவீர்," என்று கட்டளையிட்டான். அவரும் அவ்வாறே செய்ய, அவ்வையார் மீண்டும் பாரியிடம் வந்து சின்னாட்கள் தங்கிச் சென்றனர். பாரியும் அச்செயலைத் தானே புரிந்தமையைச் செந்தமிழ்ச் செவிலிக்குப் புலப்படுத்தினான். அவரும் அவனது அன்பின் பெருக்கைக் கண்டு ஆராக் கனிவு கொண்டனர்.

அவ்வையார் பழையனூர் என்னும் ஊரிலே வாழ்ந்திருந்த காரி என்னும் வேளாளனிடத்தும் கெழுதகைமை

உடையவர். அவனும் இவ்வம்மையாரைவிட்டுப் பிரிய விருப்பம் இல்லாதவன். ஒருகால் அவ்வையார் அவனிடம் சென்று, சில நாள் தங்கிப் பின்னர் அவ்வூரை விட்டுச் செல்வதற்கு அவனுடைய ஒருப்பாட்டைக் கேட்டனர். அவன் அவர் செல்லுதலைத் தவிர்க்க எண்ணித் தனது கையிலிருந்த களைக் கட்டினை அவ்வையாரிடம் தந்து, "அம்மையே, இதனைக் கைப்பற்றி இக் களைகட்ட நிலத்தை அளப்பாயாக," என்று கூறி மறைந்தான். பின் அவ்வை யார் அவன் வருகையை எதிர்பார்த்துப் பார்த்துக் கடையில் போதலைத் தவிர்த்தார். அதுகண்ட காரி கழிபே ருவகை அடைந்து, அவ்வையாரிடம் பொழுதுசாயப் போந்து தனது சூழ்ச்சியைச் சொல்லி இன்புற்றிருந்தான். அவ்வையார் அவன் அன்பின் திறத்தைத் தமது உள் ளத்தே பொதிந்து வைத்தனர்.

அக்காலத்திலேயே தகடூரை ஆண்டிருந்த சேரமான் மாவேண்கோ என்னும் அரசர் பெருந்தகையும் அவ்வையா ருக்கு உற்ற நண்பினன்; ஒரு முறை அவ்வையார் அவனு ழைச் சென்றார்; அவனே பெரு விருந்து ஒன்று அன்று செய்தான்; அவ்விருந்துக்குப் பலப்பலர் போந்திருந்தனர். அவருள் ஒருவருக்கு இடம் கிட்டாமற் போயிற்று; அப் பொழுது உண்ணுதற்கு அமர்ந்திருப்பவருள் எவரேனும் ஒருவரை எழுப்பித் தீரவேண்டியதாயிற்று; அது தெரிந்த சேரமான், 'யாரை எழுப்பலாம்?' என உன்னித் தனக்கு ஆருயிர் நண்பாகிய அவ்வையாரையே விளித்துத் தன் பக் கல் இருத்திக்கொண்டு, பிறர் ஒருவரை அவ்விடத்தே அமர்வித்தான். இறுதியிலே அவன் அவ்வையாரோடு ஒருங்கிருந்து அளவளாவி உண்டான். இந் நிகழ்ச்சி தமிழ்ச் செல்வியின் உள்ளத்திலே ஊன்றி நின்றது.

சிறிது காலஞ் சென்ற பின்னர், வள்ளலாகிய பாரியின் பெரும் புகழைக் கேட்டுக் கேட்டுச் செவிடுபட்டு, அழுக்

காறு கொண்டிருந்த தமிழ் நாட்டு வேந்தர், அவன் அரும் பெருந் தவத்தாற்பெற்ற ஆயிழையாரைத் தமக்குள் மணம் புரிய வேண்டுமென ஆர்வங் கூர்ந்து தனித்தனி மகட் கொடை வேண்டினர். பாரியோ அவர்தம் பண்பின்மையை யும் தீயொழுக்கத்தையும் வெறுத்தவனாதலின், தன் செல் வப் புதல்வியார் அவரை மணம்புரிய இசையானாய் மறுத்து விட்டான். இதனால் அவ்வேந்தர், முன்னரே இருந்த பகை மேலும் மூளப் பெற்றாராய்ப் பாரியின் பறம்பு மலை யைச் சூழ்ந்து முற்றுகை யிட்டனர். பாரி தனது வீரத் தால் பன்னெடு நாட்கள் அஞ்சாது காத்து நின்றான்; அவ னது அவைக்களப் புலவராகிய கபிலர், தாம் வளர்த்து வந்த கிள்ளைகளை விடுத்து அவை நெற்கதிர்களைக் கொண்டு வரச் செய்ய, அவற்றை உண்டு சின்னாட் கழித்தான். அப் புலவர் பெருமான் சற்றும் அஞ்சாது பாரியைப் புகழ்ந்தும், மூவேந்தரை இகழ்ந்தும், பாடிய அருஞ் செய்யுட்களும் வேந்தர்க்கு எரியுங் கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோ லிருந்தன. கடைசியில் அளவு கடந்த சேனைகளோடும் துப்புரவுகளோடும் இருந்த மூவேந்தர் வெற்றிகொண்டு, பாரியையும் கொல்வித்தனர். போர் தொடங்கியது முதல் முடிவுகாறும் அவனுடன் இருந்து அல்லற்பட்ட வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலர் அவன் பெருந்தவத்தாற் பெற்ற அங்கவை, சங்கவை என்னும் மங்கையர் இருவரை யும் அழைத்துக்கொண்டு, நட்புக் கடன் கழிக்க எண்ணி, விச்சிக்கோ, இருங்கோவேள் என்னும் மன்னர் இருவரிடம் சென்று அவரை மணம் புரியுமாறு வேண்டினர். அவ் விருவரும் மூவேந்தருக்கு அஞ்சி மறுத்தனர். அதன் மேல் தம் ஆருயிர் நண்பர் பிரிவு மேன்மேலுஞ் சுடத் தாங்க மாட்டாராய் அப்பாவையரைப் பார்ப்பாரிடம் சேர்ப்பித்து, "இவ்விருவரையும் நீங்கள் பெற்ற மக்களைப் போலப் பாதுகாமின்; இறைவன் திருவருளால் இவருக்குத்

தக்க மணமகன் வாய்ப்பின் அவன்பாற் படுத்துமின்," எனக் கூறிச் சென்று, சிறிது காலஞ் சேர நாட்டிலே வதிந்து, பின் பாரியின் பிரிவாற்ருமல் திருக்கோவலூரில் வடக் கிருந்து பட்டினி கிடந்து, இறைவன் திருவருளிலே உறைந்து நின்று, தமக்குரிய நண்பன் பொருட்டு அரிய உயிரையுந் துறந்தார்.

இஃது இங்ஙனம் இருப்ப, அவ்வையார் பாரிக்கு நேர்ந்தவற்றை யெல்லாஞ் செவி வெதும்பக் கேட்டுத் துன் பக்கடலுள் மூழ்கி ஊர் ஊராய்த் திரிந்துகொண்டிருந்தார். அப்போது அவர் ஒருநாள் திருக்கோவலூரை அடைய, மழை பொழிவதாயிற்று; அம்மழையில் நனைந்து விரைந்து ஓரகத்தை அடைந்தனர்; அவர் உடுத்திருந்த ஆடை ஈர மாக, அம்முதியார் உடம்பு குளிரால் நடுங்கிற்று. அவ்வில் லத்திலேதான் பாரிமகளிர் தங்கியிருந்தனர். அவ்விளம் பாவையர் இருவரும் உடனே தம்மிடம் இருந்த நீலச்சிற் ருடையை அவ்வையாருக்கு அளித்து, அவர் மேனியி னுள்ள ஈரத்தைத் துடைத்து உபசரித்தனர். அதனுல் குளிர் நீங்கி இன்புற்ற அவ்வையார் அம்மகளிர் தமக்குச் செய்த உதவியை நினைத்து நோக்க, மூன்றுபேர் செய்த அருஞ்செயல்கள் முன்னே தோன்றின; அவை மூன்றும் இவ்வனிதையர் செய்த ஒரு செயலுக் கொப்பாகுமெனப் பின்வருமாறு ஒரு வெண்பாக் கூறினர்:

பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரி கொடுத்த களக்கட்டும்—சேரமான்
வாராயோ என்றழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றடைக்கு நேர்.

அப்பால் அத்திருமக்கள் இருவரும் வாழையின் கீழ்க் கன்றுங் கனியுதவுமாறுபோல அவ்வையார் பசியைத்தணிப் பிக்க முயன்று தம்மாட்டு இருந்த இலைக்கறியோடு கூடிய அன்னத்தைப் படைத்துத் தமது பண்டை நிலைமையை

எண்ணி வருந்திக், குறைபாட்டை யெல்லாம் அன்பால் நிறைவித்துக் கண்ணீர் உகுத்து நின்றனர். அவர்தம் பேரன்பை நோக்கிய அவ்வையார், உடனே,

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறையிட்டுப்—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்;
கடகஞ் செறியாதோ கைக்கு?

என்னும் அழகு மிகுந்த கவியைச் சொல்லி அவருக்கு மகிழ்வை யூட்டினர். பின்னர்ச் சிறிது நேரத்திற்குள் மழை நிற்க, வானம் வெளுத்தது; முழுமதி ஒழுகு கதிர்களைப் பரப்பிப் பட்டப்பகல்போல் ஒளிர்ந்தது. அதனைத் துன்னெனக் கண்ட பாரி பயந்த பொற்பாவையர் இருவரும் தாம் சென்ற திங்களில் இருந்த நிலைமையையும் இத்திங்களிலே இருக்கும் நிலைமையையும் எண்ணிக் கண்ணீர் வெள்ளம் பாய,

'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்; எங்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எங்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே'

என்னும் பாட்டைப் பாடினர். அது செவியுள் நுழைந்த அளவிலே அவ்வையார் அவ்விருவரும் பாரிமக்க ளாதலை உணர்ந்து அவரைக் கட்டித் தழுவி, ஓவென அலறி அழுதனர்: அதன்பின் ஒருவாறு தேறி அவர் தமக்கு ஆறுதல் உரைத்து, அவ்விருவரையும் மன்னர் இருவரும் மணம் புரிந்துகொள்ள மறுத்தமையையும் கபிலர் உயிர் துறந்தமையையுங் கேள்வியுற்றுப் பெரிதும் வருந்தி, அவரை எங்ஙனமேனும் மன்னவன் ஒருவனுக்கு மணஞ் செய்விக்க வேண்டுமென எண்ணித் திருவருளை வழுத்தி நின்றார்.

பின்பு, அவர் திருக்கோவலூரை ஆண்டிருந்த மலேய மான் தெய்வீகன் என்னும் மன்னவனை அடுத்துப் பாரி மகளிரை மணஞ்செய்து கொள்ளும்படி கேட்டனர். அவன் பாரியின்பால் மூவேந்தர்க்கும் உள்ள பகைமையை எடுத் துக்காட்டி, அம்மகளிரை மணஞ் செய்துகொள்ளின் தனக்கு ஏதம் விளையுமென அவ்வையாருக்கு அறிவித்தான். அதற்கு அவ்வையார் மூவேந்தர் பகையையுந் தீர்த்து அம் மூவரையும் மணவினைச் சடங்குக்கு வருவிப்பதாக உறுதி மொழி கூறித் தெய்வீகனை மணத்துக்கு உடன்படுத்தினர். அதன்பின் அவ்வையார் தமது உபாசனு தெய்வமாகிய விநாயகமூர்த்தியின் அருளைப் பின்வரும் செய்யுளால் வேண்டி, மண ஓலை எழுதத் துவங்கினர் :

ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்!—பரிவுடனே
கண்ணுலை வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

மண ஓலை மூவேந்தருக்கும் பின்வருமாறு தீட்டப்பட்டன:

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.

புகார்மன்னன் பொன்னிப் புனலுடையன் சோழன்
தகாதென்று தானங்கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள்.

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியச ரோன்பானுள்
ஈண்டு வருக இயைந்து.

சேர சோழ பாண்டியர்கள் அவ்வையார் திருமுகத்தைக் கண்டதும், யாதுங்கூறுதற்கு அஞ்சித் தத்தம் நகரங்களை விடுவித்து, நாற்படைகளும் தம்மைச் சூழ்ந்துவரத் திருக்கோவலூரைச் சேர்ந்தனர்.

மணம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அவ்வையார் அரசர்களை நோக்கி, "வேந்தர் பெருமக்களே, இக்கிழவியைப் பெருமைப்படுத்தியதற்காக மிகவும் மகிழ்கின்றேன். நானிடும் உணவையும் அன்புடன் உண்டு என்னைச் சிறப்பிக்க வேண்டும்," என்று கூறினர். அது கேட்ட வேந்தர் நகைத்து, "அம்மையே, நாங்கள் விரும்பிய பொருளைத் தருவதாயின் நாங்கள் உணவுகொள்ளுவோம்; இன்றேல் எங்கள் கையையும் நனைக்க மாட்டோம்," என்றனர். அப்பொழுது "உமக்கு வேண்டுவது யாது? சொன்மின்," என அவ்வையார் கேட்க, அரசர், "எங்கட்குப் பனம்பழம் வேண்டும்" என்றனர். அது கேட்ட அவ்வையார் "பனம் பழம் கிடைக்கும் காலம் இஃது அன்றாயினும், அதனைத் தருவித்துக் கொடுத்தல் எனக்கு அரிதன்று," என்று கூறி அங்கே இருந்த ஒரு பனந்துண்டை எடுத்து நிலத்தில் நட்டு, மேல்வரும் பாட்டைப் பாடினர்.

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்தநின் றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

உடனே அப்பனந்துண்டு வெண்குருத்து விட்டுப் பச்சோலை சலசலத்து நுங்குக் கண் முற்றி அருந்தமிழ்ச் செல்வி விழைந்தவாறு மூன்று கனிகளைப் பயந்தது. முடியுடை மன்னர் மூவரும் அவ்வையாரின் அற்புத ஆற்றலைக் கண்டு, அச்சமும் வியப்பும் ஒருங்கே கொண்டனர். மணத்

துக்கு வந்திருந்த ஏனைய மக்களும் இன்பவாரிதியில் திளைத்தனர்.

பின்பு அவ்வைப்பிராட்டியார் ஆங்குக் குழுமியிருந்த மக்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி பெருகவும், வறிஞர் எல்லோரும் வயிறார உண்டு தேக்கவும், பெண்ணையாற்றை நோக்கிப் பாலும் நெய்யும் பெருகி வருமாறு,

முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா.

என்னும் அரும்பா ஒன்று அறைந்தனர். அன்றியும் நல்கூர்ந்த மாந்தர்க்குச் செம்பொன்னை மாரிபோல் வழங்க வேண்டுமென்னும் அருள் மீதூர வருணனை நோக்கிப் பொன்மாரி பொழியும்படி,

கருணையால் இந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல்—பெருமணத்து
நன்மாரி தாழ்கொண்ட நன்னீர் அதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.

என்னும் யாப்பு ஒன்று இசைத்தனர். இவ்வற்புதங்கள் நிகழக் கண்ட மாந்தர் வியப்பு எடுத்துரைக்கற் பாலதோ? தெய்வீகன் திருமண நாள் தெய்விகமாகவே விளங்கிற்று. அவன் அவ்வையாரைப் பாரி மகளிரோடு அடிவணங்கி நின்றான். அப்பொழுது அன்பின் செல்வி மனமகிழ் பூத்து,

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயலரிசி ஆகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்குந் திருக்கோவ லூர்.

என்னும் இனிய கவியால் அவன் செங்கோ லோச்சும் சேதிமா நாட்டையும் திருக்கோவலூரையும் சிறப்பித்துக்

கூறி, அங்கவை, சங்கவை என்னும் அழகு பொலிந்திலங்கும் நங்கையர் இருவரையும் வாழ்த்தி, அவர்தம் திருக்கரங்களைத் தமது அருங்கரத்தால் பற்றித் தெய்வீகனிடம் கொடுத்து,

"குன்றுபோல் வீறு குணமுடையார் தம்முடன் நீ
இன்றுபோல் என்று மிரு"

என்று வாழ்த்தினர். தெய்வீகன் இன்பக் கண்ணீர் சொரிந்தான். பாரி மகளிர் அவ்வையார் செய்நன்றியை எண்ணியெண்ணி உருகினர். தமிழ் நாட்டு வேந்தர் மூவரும் அவ்வையார் ஆற்றலை நோக்கி இறும்பூ துற்றனர். மக்கட் கூட்டம் அவ்வையார் கலைமகளார் அவதாரமே யெனப் பலபடப் பாராட்டிச் சென்றது. பின்னர் வேந்தரும் பிறரும் அவ்வையார்பால் விடைபெற்றுத் தத்தம் இல்லம் ஏகினர்.

அப்பால் அவ்வையார் அங்கவை, சங்கவை என்னும் பாரி மகளிர் இல்வாழ்க்கையைக் கண்டு இன்பந் துளும்பச் சின்னாள் திருக்கோவலூரிலிருந்து, பின்னர் அதனைவிட்டுப் பெயர்ந்து சென்றனர்.

திருவண்ணாமலைத் தாலூக்காவில் பெண்ணையாற்றங் கரையிலேயுள்ள புல்வேளூர் என்னும் ஊரில் பூதன் என்பவன் தனக்கு வரகுச்சோ றிட்டபோது அவன் அன்புக்கு வியந்து,

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரவென் றேபுளித்த மோரும்—பரிவுடனே
புல்வேளூர் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.

என்னும் யாப்பை இசைத்தனர். அன்றியும் அவன் வயலுக்குக் கிணற்று நீர் தானே ஏறிப்பாய எண்ணி, 'அழியா வாழையும் ஒழியாக் கிணறுமாக' என்று கூற, உடனே

கிணற்றுநீர் ஏறிப் பாய்ந்தது. அதுகண்ட பூதன் இறும்பூதடைந்து அவ்வையார் திருவடிகளை வணங்கினன்.

மற்றொருகால் அவ்வையார் பழையனூர்க் காரிக்கு ஆடு வாங்கிக் கொடுக்க வாதவன், வத்தவன், யாதவன் என்னும் மூவரிடத்தும் போய்க் கேட்க, அவருள் இருவர் பின்னை என்றும் நாளையென்றும் போக்குக் கூற, ஒருவனே இல்லையென உறுதியாக மொழிந்தான். அந்நிகழ்ச்சியை உள்ளிட்டுத் தமிழ் மூதாட்டியார்,

வாதவர்கோன் பின்னை யென்றான் ; வத்தவர்கோன் நாளை
யென்றான் ;
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான் ;—ஆதலால்,
வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் இல்லை யினிது.

என்னும் செய்யுளைப் பாடினர். பின்பு அவர் சேரனிடஞ் சென்று ஆடொன்று தரும்படி கேட்க, அவன் ஒரு பொன் ஆடு கொடுத்தான். அது கண்ட அவ்வையார், சேரமான் இழிந்த பொருளாகிய ஆட்டைக் கல்வி யாசியாராகிய அவ்வையாருக்கு வழங்கலாகாதென உன்னிப் பொன் ஆடு தந்தான் என்பதைக் கருதி அவனை நோக்கி, இருபொருள் பட, "சேரா உன்னுடு பொன்னுடு" என வாழ்த்தி அவன் பெருமையைப் பின்வரும் வெண்பாவால் விளக்கினர்.

சிரப்பால் மணிமௌலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு கேட்கவே பொன்னுடொன் றீந்தான் ;
இரப்பவர் என்பெறினுங் கொள்வர் ; கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்.

ஒருநாள் அவ்வையார் பசி முடுக வருந்தி ஒருவன் மனைக்குட் புகுந்தனர். அவன் ஈயாங்கை விதிரா வன்கண்ணனாதலின் அவருக்கு உணவில்லையெனக் கூறி விடுத்தான். ஆனல் அவன் மனைவியோ விருந்துபுறந்தரும் பெருங் குணச் செல்வி. அவள் அவ்வையாரை அழைத்துச்

சென்று, கணவன் அறியாமே முகமன் கூறி, பலவகைக் கறிகுழம்புடன் அறுசுவை யன்னம் ஊட்டினுள். அத்தகைய அருங்குணம் படைத்த அப்பாவைக்குத் தன் இயல்புக்குப் பொருந்தாத கணவன் ஏற்பட்டு இருத்தலை வெறுத்துப் பிரமனை நோக்கி பின்வரும் பாடலைப் பாடினர்.

அற்ற தலையி லருகிற் றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றல்
மரமனையா னுக்கிம் மனையாளை யீந்த
பிரமனையான் காணப் பெறின் ?

மற்றொருகால் அவ்வையார் கயவனொருவனைக் கண்டு அவன் செல்வத்தின் சிறப்பினையும் பிறவற்றையும் குறித்துக் கவி கூற, அவன் தன்னிடத்தில் ஏதுமில்லையென வெறுங் கையை விரித்தான். அவன் உலோப குணத்தைக் கண்ட அவ்வையார், வினோதமாக அவனைப் பாடியதைத் தமது குற்றமாக ஏற்றி,

கல்லாத ஒருவனைநான் கற்று யென்றேன் ;
காடேறித் திரிவானை நாடா என்றேன் ;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன் ;
போர்முகத்துக் கோழையைநான் புலியே யென்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை ; [றேன் ;
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன் ;
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான் ;
யானுமென் றன் குற்றத்தா லேகின் றேனே.

என்னும் கவியைக் கூறினர்.

ஒருகால் சோழன் ஓர் அழகிய ஆடையைப் பார்த்துக் கொண்டு அவ்வையார் கூறிய சொற்களில் கருத்தைச் செலுத்தாது இருந்தான். அது நோக்கிய அவ்வையார் அதனைப் பார்த்து, "அழிவெய்துவதாகிய அவ்வாடையில்

கருத்தைச் செலுத்தாமல் என்றுங் கிழியாத என் பாட்டை நோக்குவாயாக,'' என்னும் பொருள்பட,

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்கு ணைந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா !
என்றுங் கிழியாதென் பாட்டு.

என்னும் பாட்டைப் பாடினர்.

தமிழ்க்கு வரம்பாகிய நம்பெருமாட்டியாரைப் புல்லறிவாளர் சிலர் குறுகித் தம்மேல் அவர் ஒரு புகழ்ப்பாப் பாடல் வேண்டுமென வற்புறுத்தினர். அவ்வம்மை அவர் தம் பேதைமைக்கு எண்ணியிரங்கி, அவர் பயனில்லாதிருத்தலைப் பொருளாக அமைத்துப் பின்வரும் இனிய அகவற் பாவினைப் பாடினர்.

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய என்றன் பனுவல் வாயால்
'எம்மைப் பாடுக' என்றனிர் ; நும்மையிங்கு
எங்ஙனம் பாடுகென் யானே ? வெங்கண்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர் ;
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர் ;
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர் ;

*　　*　　*　　*　　*

அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தேரீர் ;
உடீஇர் ; உண்ணீர் ; கொடீஇர் ; கொள்ளீர் ;
ஒவ்வாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.

இது செவிமடுத்த அறிவிலிகள் வாய்பொத்திச் சென்றனர்.

பின்பு நம் செந்தமிழ்ச் செல்வியாகிய அவ்வையார் ஒருகால் தகடூரிலே அரசுபுரிந்திருந்த அதிகமான் நெடுமான் அஞ்சி என்னுங் கோமானைப் பரிசில் கருதிக் கண்டனர்.

அவனே அருந்தமிழ்ச் சுவையை அறிந்து நுகரும் ஆற்ற லுடையவனாக இருந்தும், ஏதோ காரணத்தால் அவருக்குப் பரிசில் தாராது காலம் நீட்டித்தனன். அப்போது அவ்வை யார் பெரிதும் சினந்து, அவன் வாயில் காப்போனை நோக்கி, "வாயிலோய், நெடுமான் அஞ்சி தன் தரத்தையும் என் தரத்தையும் அறியான் போலும்! அவனையின்றி எமக்குப் பரிசு தருவார் இலரோ? யாம் எத்திசைக்குச் செல்லினும் எமக்குத் தகுந்த சோறு கிடைக்கும்," என்று கூறி விரைந்து சென்றனர். அஃதறிந்த அஞ்சி, அஞ்சி அவ்வை யாரை யணுகித் தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டுமென வேண்டி அவர் உடுத்திருந்த நீர்ப்பாசியொத்த உடையைக் களைந்து, புதுமடியைத் தந்து புனைவித்தான்; அன்றியும் அவரைத் தன் கோயிலுக்கு அழைத்துச்சென்று அவருக்கு வெள்ளிக் கலத்தில் நல்லடிசில் ஊட்டினன்; இன்னும் அவ ருக்குச் செந்நெல்லைப் போரோடு கொடுத்து வேறு பொருள்களையும் வழங்கினான்.

சிறிது காலம் சென்ற பின் அதிகமானுக்கு முனிவர் ஒருவர் பிணி மூப்புச் சாக்காட்டை ஒழிக்கவல்ல ஓர் இனிய அரிய நெல்லிப் பழத்தை அவன்மீது வைத்த அருட்பெருக் கால் ஈந்தனர். அவன் அமிழ்தம்போன்ற அத்தீங்கனியை,

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'
'அமிழ்தெனின்,
தாமே தமியர் உண்டலு மிலரே.'

என்னும் பொருண் மொழிகளை நினைவு கூர்ந்து, தன்னினும் உலகத்துக்குப் பயன்படத் தக்கார் ஒருவருக்கு அதனை அளிக்க வேண்டுமென உட்கொண்டு, சேமித்து வைத்திருந் தான். அதனைப் பெற்ற சின்னாட்கெல்லாம் அவ்வையார் அவனைக் காணச் சென்றனர். அவரைக் கண்டவுடன் அதிக மான் முகமும் அகமும் மலர்ந்து வரவேற்று, இன்னமுது

படைத்து அந்நறுங்கனியை எடுத்துவந்து அதனியல்பைக் கூறின், ஒருகால் அவ்வம்மையார் தமக்கென வாழாப்பிறர்க் குரியா ளாகலின் அதனை மறுத்தலுங் கூடுமென நினைந்து, அதுபற்றி யாதும் கூறாது அவர் பரிகலத்திட்டான். அவ் வம்மை அத்தெய்வத் திருக்கனியை நுகர்ந்து இன்புற்றபின் அதிகமான் அதன் தன்மையைக் கிளந்து கூறத் தமிழரசி அவனது வள்ளன்மைக்கு வியந்து மகிழ்ந்து,

நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத லின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே!

என்னும் அழகிய செய்யுளைப் பாடினர். அதுமுதல் அவ்வை யாருக்கும் அதிகமான் அஞ்சிக்கும் நட்பு கனிந்து நின்றது.

இங்ஙனம் அவனுடன் நட்பு செய்திருந்த காலத்தில் அவனைப் பலபடியாகப் புகழ்ந்து, அவன் கொடைச் சிறப் பையும் வெற்றிச் சிறப்பையும் எங்கும் பரப்பினர். அஞ்சி யோடு பெருஞ்சேரல் இரும்பொறை போர் செய்ய வந்த பொழுதும், அவ்வஞ்சி கோவலூரை வென்றபொழுதும், அவன் சேரல் இரும்பொறையுடன் செய்த போரில் விழுப் புண்பட்டு நின்ற காலையும் அவனைப் புகழ்ந்து பாடினர். அன்றியும், அதிகமான் அவரைத் தொண்டைமானிடத்துத் தூதாக ஒருகால் அனுப்பினன். அப்போது அவ்வையா ருக்குத் தொண்டைமான் தனது படைக்கலச் சாலையைத் திறந்துகாட்டித் தன் ஆற்றலைப் புலப்படுத்தினன்; அஃ தறிந்து அவ்வையார் தொண்டைமானை நோக்கி, "உன் னிடத்திலுள்ள படைக்கலங்கள் அழகாக மாலை சூட்டப் பட்டு நெய்யிடப்பட்டுக் காவலோடு கிடக்கின்றன. எமக்கு

அரசனுகிய அதிகமான் படைக்கலங்களோ பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லனது கொட்டி லிடத்திருக்கின்றன,'' எனப் பொருள்படும் செய் யுளைக் கூறி அவன் செருக்கை அடக்கினர். பின்னர்ச் சிறிதுகாலம் செல்ல, அதிகமான் இங்நிலவுலக வாழ்வை நீத்துப் பொன்னுலக வாழ்வை யடைந்தான். அப்போது அவ்வையார் மனம் உருகி, அவன் பிரிவையாற்ருது கையறு நிலையாகப் பல பாக்கள் பாடினர். அதிகமானை ஈமத்தில் கிடத்தியபோது, அவன் புகழ் அவனுடைய உடல் அழி யினும் என்றும் மாயாது என்னும் கருத்தை யமைத்தும், அவன், நடுகல்லுக்குப் பீலியைச் சூட்டித் தேறலை உகுத்த பொழுது, 'மலைநாடு முழுவதுங் கொடுப்பவும் கொள்ளா தவன் இச்சிறு கலத்திலே சொரியும் தேறலையோ கொள்ளு வான்,' என்றும்,

இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே.

என "அவன் இல்லாமற் கழிகின்ற காலையும் மாலையும் எனக்கு இனி இல்லாதொழிக. யான் உயிர்வாழுநாளும் அவன் இன்மையால் ஒரு பலனும் படாமையால் ஒழிக,'' என்றும் பாடினர். அதன்பின் அவன் தம்மிடத்து வைத் திருந்த அன்பை நன்கு புலப்படுத்தி அவன் இறந்தமையால்,

இனிப்பாடுநருமில்லை; பாடுநர்க்கு ஒன்று
ஈகுநரு மில்லை.

என்று உருகிப் பாடினர்.

மற்றொருகால் அவ்வையார் கொண்கான நாட்டுத் தலைவனும் எழில் மலைக்கு உரியனுமாகிய நன்னன்பாற் சென்று பருகு பாலன்ன நற்றமிழ்ப் பாக்களை அவன் நய மறு செவியில் உகுத்தனர். அவன் குறுகினும் வெள்ளிய

மனமுடையான் ஆதலின், அவற்றைப் பாராட்டாது அஃறிணைப் பொருள்களில் ஒன்றைப்போ லிருந்தான். அதன் மேல் வெஞ்சினங் கொண்ட அவ்வையார்,

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயும் அன்றுநின் கொற்றம்—மருடீர்ந்த!
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள.

என்னும் செய்யுளைப் பாடி வெறுத்துச் சென்றனர்.

அவ்விடம் விட்டுச் செந்தமிழ் நங்கை செல்வுழி, ஒரு சிற்றூரிலே தங்கினர். அவ்வூரின் புறஞ்சேரியில் குறவன் ஒருவன் வாழ்ந்திருந்தான்; அவனுக்கு மனைவியர் இருவர்; அவர்களுள் இளையாளிடத்து அவனுக்குக் காதல் மிகுதியும் உண்டு. அவன் பெற்ற மகவைப்போல ஒரு பலா மரத்தை வளர்த்து வந்தான்; ஒரு நாள் அவ்வூரை விட்டு அவன் வேற்றூருக்குச் செல்ல வேண்டியதாயிற்று. அதனல், அவன் தன் மனைவியர் இருவரையும் நோக்கி, "நான் அன்போடு வளர்த்து வரும் இப்பலாவைக் கவலையுடன் பாதுகாப்பீராக," எனக் கூறிச் சென்றான். இளையாளோ இதுதான் தக்க வாய்ப்பு என்று கொண்டு தானே அப்பலாமரத்தை வெட்டுவித்து மூத்தாள்மேல் பழி சுமத்தினள். மூத்தவள் ஒன்றும் அறியாதவளாய் இடிதேளிட்டாற்போல இளையவள் சுமத்திய பழியையும் அவள் சொல்லை நம்பித் தன் கணவன் தன்னை ஒறுப்பான் என்னும் செயலையும் எண்ணிக் கடவுளை வழுத்தித் தன் தீவினைக்கு நொந்து வருந்திக் கொண்டிருந்தாள். அப்போது அவ்வழியே சென்ற அவ்வையார் அவளைக் கண்டு, அவள் அழுங் காரணத்தை வினவி, அவள் கண்ணீரை மாற்றி உடனே,

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பாய் உயர்மரமாய்—சீரிய
வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோல் நிற்கப் பணி.

என்னும் செய்யுளைப் பாடத் திருவருட் செயலால் அது பழமைபோலக் காணப்பட்டது. அதுகண்ட மூத்தாள் பேருவகையிற் றிளைத்து, அவ்வையாருக்குத் தன்பாலிருந்த தினையரிசியை ஒரு கந்தையில் முடிந்து கொடுத்து அனுப்பினாள். அதனைப் பெற்றுக்கொண்ட தமிழ்ப் பாவை வழி நடந்த வருத்தத்தாலும், களைப்பாலும் உறையூரில் சோழன் அரண்மனை வாயிலிலே தங்கியிருந்தனர். அப்போது அவ்வழிப்போந்த சோழன் அவ்வையாரைக் கண்டு அவர் அந்நேரத்திலே ஆங்குப் போந்திருந்த காரணத்தை வியப்புடன் வினவ, அவர்,

கால்நொந்தேன் நொந்தேன்; கடுகி வழிநடந்தேன்;
யான்வந்த தூரம் எளிதன்று;—கூனன்
கருந்தேனும் கண்ணுந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக் கெங்கே யிடம்?

என்று விடை யிறுத்தனர். பின் சோழன் அவர் கையிலே வைத்திருந்த முடிச்சைக் கண்டு, "இஃது யாது?" எனக் கேட்க, அவ்வையார்,

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழ! கேள்:
உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்.

என்று பாடினர்.

பின் அவர் ஒரு சமயம் ஏழைக் குடியானவன் ஒருவனைக் கண்டு, பசிக்குத் தமக்குச் சோறு தரும்படி வேண்டினர். அவன் நல்ல குணமுடையவன்; வெடுக்கென ஒரு சொல் வழங்காதவன். ஆனால் அவன் பிடாரியைப் பெண்டு

கொண்டவன் போலத் தன் மனைவியால் துன்புற்று வந்தான். அவ்வையாருக்கு அமுதூட்ட வேண்டுமென்பது அவன் விருப்பம். அவ்விருப்பு மனைவிக்கு வெறுப்பை விளைவிக்கும் என்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனால் அவன் அவளிடம் மெல்லச் சென்று, அவளுக்கு இனிய சொற்களைக் கூறி, முகத்தைத் திருத்தி, ஈரோடு பேன் வாங்கி விருந்து வந்ததென வாய் குழறச் சொன்னான். அது செவியில் புகுமுன்னர் அத்தீயவள், "உனக்கு விருந்தும் ஒரு கேடா? உனக்குப் படைக்கிறது மல்லாமல் ஊருக்கும் படைக்கவா? ஆ, அவ்வளவு ஆணவமா? உன் ஆணவத்தை அடக்குவேன் பார்!" என்று ஆடிப் பாடிப் பழமுறத்தால் அவனைச் சாடினாள். அவன் ஓடி வெளியே போதலைக் கண்ட அவ்வையார் அவன் நிலைமையைக் கண்டு,

இருந்து முகந்திருத்தி ஈரோடுபேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப,—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

என்று ஒரு செய்யுள் கூறலும், அவன் தன்னைப் பசிக்கு அன்னம் கேட்டவர் புலமை மிக்க அவ்வையார் என்றுணர்ந்து, அவமதிப்பையும் பாராது மீண்டும் தன் இல்லாளிடம் சென்று, "நம்மை அன்னங் கேட்ட அம்மை அவ்வையார்" என்றுரைக்க, அவள் அவரை அழைத்துச் சோறிட்டாள். அவ்வுணவை அவ்வையார் நோக்கியவளவில் அவருக்கு அதன்மேல் மனஞ் சென்றிலது; அவள் கொடுஞ் செயலோ அவர் உள்ளத்திலே அழுந்தியிருந்தது. அதனால்,

காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே!
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே!—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எறிகின்ற தையையோ!
அன்பில்லாள் இட்ட அமுது.

என்று பாடி அவ்விலையில் வாளா கை நனைத்து எழுந்து சென்றனர். அப்போது அத்திருமகளாரோடு சென்ற ஏழை அவர் மலரடிகளை வணங்கி, "என் அன்னையே, நான் இந்தக் கட்டை, நீங்கி எங்ஙனம் நலமுறுவேன்?" எனக் குறை யிரந்து விண்ணப்பிக்க, அம்மையார், அவனை அருளோடு நோக்கி, அவன் எவ்வாற்ருனும் துறத்தலே தகுதியெனத் துணிந்து, கீழ்வரும் செய்யுட்களைப் பசுமரத்தாணி அறைந்தாற்போலக் கூறினர்.

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—
[தொண்டா !
செருப்படிதான் செல்லாதுன் செல்வமென்ன செல்வம்?
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் ; சற்றேனும்
ஏறுமா ருக இருப்பாளே யாமாயிற்
கூருமற் சன்னியாசங் கொள்.

ஏசி இடவின் இடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று ;—நேசமிலா
வங்கணத்தின் நன்று வலியபகை ; வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று.

இவற்றைக் கேட்ட ஏழை அன்றே துறவுக்கோலம் பூண்டு சென்ருன்.

ஒருகால் அவ்வையார் காடும் மலையும் செறிந்த ஒரு வனத்தின் வழியே சென்றுகொண்டிருக்கையில் குறிஞ்சி நிலவேந்தனும் செந்தமிழ்ப் பெருமானுமாகிய முருகவேள் அருள் முகிழ்ப்ப, அவ்வையார்பால் ஓர் ஆடலைக் கருதி மாடுமேய்க்கும் சிறுவனுகத் திருவுருத் தாங்கி, பெரியதோர் நாவன்மரத்தின் குறியதோர் கிளையிலிருந்து விளையாட்டயர்ந்திருந்தனன். அது கார்காலத் தொடக்க மாதலின்,

நாவல் மரங்களெல்லாம் செல்வர் செழுமையுற்றாற்போலப் பழுத்திருந்தன. அவ்வையார் முருகப் பெருமான் ஏறி யிருந்த மரத்தடியில் வந்து அவனைக் கண்டு, “அப்பா, இப்பழங்களைக் கண்டதும் என் வாய் ஊறுகின்றது. அவற் றில் நறிய பழம் சிலவற்றை எனக்குப் பறித்துத் தருக,” என்றனர். செவ்வேள், ‘நன்று, நன்று, கிழவி தானாகவே அகப்பட்டுக்கொண்டாள்’ எனத் தனக்குள் கிளுகிளுத்து, “பாட்டி., உனக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?” என்றான். அதுகேட்ட தமிழ்த் தாயாகிய அவ்வையார்க்குச் சுட்ட பழமென்றும் சுடாத பழமென் றும் மாடு மேய்க்கும் பையல் சுட்டியதன் கருத்துத் தோன் றாமல் அவன் வாயிலாகவே அதன் பொருளை உணர விரும்பி, “சுடாத பழம் வேண்டும்,” என்றனர். உடனே குமரன் சில செங்காய்களைப் பறித்து அவ்வையார் முன் எறிந்தான். அவற்றைக் கண்டு ஏமாந்த பண்டிதர் சிரோ மணி அவனை மீண்டும் நோக்கி, “காளையே, எனக்கு இப் போது சுட்ட பழம் வேண்டும்,” என்றனர். சொல்லலும் அறுமுகங் கரந்த கள்வன் பல கனிந்த நறுங் கனிகளைப் பறித்து அவ்வையார் முன் எறிந்தான். அவற்றுள் ஒன்றை எடுத்து அவ்வையார் பார்க்க, அதில் ஒரு பக்கத்தில் நுண் மணல் ஒட்டிக் கொண்டிருந்தது. அதனை நீக்குதற்கு அருந்தமிழ்க் கிழத்தி மெல்லென ஊதினள். அதனைப் பார்த்துக்கொண்டே இருந்த உமையாள் சிறுவன், “பாட்டி, பழம் மிகவும் சுடுகின்றதோ!” என நகைப்புடன் கேட் டான். அக்கணமே அவ்வையாருக்குச் சுட்டபழம் என் பதன் கருத்து நாவற்பழம் மணலால் பற்றப்பட்டு ஊதப் பட்டதேயாம் எனத் தன்னெனத் தோன்றிற்று. கேவ லம் ஒரு மாடு மேய்க்குஞ் சிறுவனுக்குமுன் தமது விழுப் புலமையும் நுண்ணறிவும் புறங்காட்டிய செயலை உன்னி அவ்வையார் தலை கவிழ்ந்து நாணி,

கருங்காவிக் கட்டைக்கு நாணுக் கோடாலி
இருங்கதவித் தண்டுக்கு நாணும்;—பெருங்காணிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண்.

என்று ஒரு செய்யுள் கூறி வருந்தினர். அஃதுணர்ந்த பெருமான் தனது மெய்யுருவங்கொண்டு அவ்வையார் முற்போந்து, "செந்தமிழ்ச் செல்வீ, கவலற்க. உன்னோடு விளையாட விரும்பி வந்தேன். உன்னிலும் சிறந்த புலவரும் உளரோ?" என்றுரைத்து அவரைத் தேற்றி, "அம்மையே, உலகத்தில் கொடியது எது? இனியது யாது? பெரியது என்பது என்ன? அரியது என்ன?" என நான்கு வினுக்களைத் தொடுத்தனன். அவற்றை விடுக்கும் முகத்தான் தமிழ்க் கோமகளார் கீழ்வரும் அரும்பாடல்களை அருளிச் செய்தனர்.

1. கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது;
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணுக் கொடுநோய்;
அதனினுங் கொடியர் அன்பிலாப் பெண்டிர்;
அதனினுங் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே.

2. இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது;
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

3. பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;

நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன் ;
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன் ;
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம் ;
குறுமுனி யோ, கல சத்திற் பிறந்தோன் ;
கலசமோ, புவியிற் சிறுமண்
புவியோ, அரவினுக் கொருதலைப் பாரம் :
அரவோ, உமையவள் சிறுவிரல் மோதிரம் ;
உமையோ, இறைவர் பாகத் தொடுக்கம் ;
இறைவரோ, தொண்ட ருள்ளத் தொடுக்கம் ;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே ;

4. அரியது கேட்கின் வரிவடி வேலோய் ;
அரிதரிது மானிட ராத லரிது ;
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது ;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது ;
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது ;
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

இவற்றைச் செவிக்கமுதெனக் கேட்ட முருகன் அவ்வை யாருக்கு வாழ்த்துக் கூறி மறைந்தருளினன். அவ்வையார் அவன் அன்பிலே தலைப்பட்டு மனமுருகித் தம் நிலை யழிந்து நின்றார்.

திருவள்ளுவர் தாம் பாடிய திருக்குறள் நூலைத் தம் தமக்கையாராகிய அவ்வையாரிடம் தர, அவர் அதனைப் பிரித்துப் பார்த்து அஃது அறம், பொருள், இன்பம் என முப்பால் ஆதலைக் கண்டு, அதன்மேல் நான்காம் பாலாகிய வீட்டுப் பாலையும் சேர்த்துச் சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி,

ஈதல் அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்னும் பாட்டைப் பாடினார். அதன்பின் திருவள்ளுவரோடு மதுரைக்குச் சென்று ஆங்கு இருந்த சங்கப் புலவர்கள் செருக்கை யடக்க, அவர்களை நோக்கித் தம்முடைய ஐந்து விரல்களையும் குவித்தும் மூடியும் சற்றே திறந்தும் சுட்டு விரலை மட்டும் நீட்டியும் பின் ஐவிரல்களையும் அகலத் திறந்தும் சில குறிகளைக் காட்டி, "இவற்றின் பொருளமைத்து ஒரு வெண்பாக் கூறுமின்," என்றனர். அவர்களில் ஒருவர் தவிர, மற்றவர் எல்லாரும் விழித்தனர். அவ்வொருவரும் அக்குறிகளுக்குப் பொருந்தாதவாறு ஒரு செய்யுள் சொல்லினர். அவ்வையார் அது பொருந்தாமையை விளக்கிக் காட்டி, அவர்கள் வெட்கும்படி மேல் வரும் கவியைக் காட்டினர்:

ஐயமிடுமின்; அறநெறியைக் கைப்பிடிமின்;
இவ்வளவே னும்மன்னம் இட்டுண்மின்;—தெய்வம்
ஒருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்.

பின் திருவள்ளுவர் குறள் ஒன்றுக்குமே இடந் தந்து ஏனைப் புலவர் எல்லாரையும் பொய்கையிலே வீழ்த்திய கன்மாப் பலகையால் தமது புலமையின் அளவு அறியப் பெற்றாராய்ச் சங்கப் புலவர் செருக்கொழிந்து திருவள்ளுவரையும், அவர் செய்த திருக்குறளையும் வியந்து நயந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டைப் பாடினர். அப்போது இடைக்காடர் என்னும் புலவர் திருக்குறளின் சொற்சுருக்கத்தையும் பொருட் பெருக்கத்தையும் அமைத்துக் குறளுக்குக் குறளிலேயே சிறப்புக் கூறவேண்டுமென வெண்ணி,

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

என்று பாட, அவர் பக்கலிருந்த அவ்வையார், உடனே அதனைச் சிறிது மாற்றித் தமது கருத்துக்கு அது பெரும் பான்மையும் ஒத்திருத்தலைப் புலப்படுத்தி,

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

என்று கூறி முடித்தனர். அனைவரும் அவ்வையாருடைய மதிநுட்பத்தை மிக வியந்து பாராட்டினர்.

ஒருநாள் சோழன் தன் அவைக்களப் புலவர்களைப் பார்த்து, "நீவிர் நாளை வைகறைக்குள் நாலுகோடி கவிகளைப் பாடி வரல் வேண்டும்," எனக் கட்டளையிட்டான். அவர்கள் எல்லோரும் ஓரிடத்தே ஒருங்கு குழுமி, "அந்தோ, என் செய்வோம்! நான்கு கோடி கவிகள் பாடுவது அவ்வளவு எளிதா? நாம் அனைவரும் சேர்ந்து பாடினும் இயலாதே. இனி நமக்குப் பிழைப்பில்லை," என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு வாடி யிருந்தனர். அக்காலை அவ்வழியே சென்ற அவ்வையார் அப்புலவர் குழுவைக் கண்டு, "புலவீர், ஏன் வாடுகின்றீர்? நுமக்கு நேர்ந்தது யாது?" எனக் கேட்க, அவரும் தமக்கு நேர்ந்த இக்கட்டை இயம்பினர். உடனே அவ்வையார், "இதோ நான்கு கோடி கவிகளை நான் பாடுவேன். நீங்கள் மகிழ்வீராக," என மொழிந்து,

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும்.

என்னும் செய்யுளை விரைவுடன் முடித்து அவர் கையில் ஈந்தனர். அவரும் அதனைக்கண்டு "இது மூக்கைத் தொட்ட கதையாக முடிந்தது எனினும், இதனை அரையன் ஒப்புக் கொள்ளுவானோ" என்று சிறிது ஐயங்கொண்டனர். மறு நாள் அப்புலவர்கள் அதனைக் கொண்டுபோய் அரசனுக்குக் காட்ட, அவன் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டான். அதனால் எக்களிப்பு எய்திய புலவர்கள் அவ்வையார் இருக்குமிடம் தேடிச் சென்று அவர் பொன்னடி வணங்கிப் பூசித்தனர்.

ஒருகால் அவ்வையார் பாண்டி நாட்டிலே முல்லை நிலத் தின் வழியாகப் போய்க்கொண் டிருக்கையில், அவரைப் பசிநோய் என்னும் பாவி பற்றிக்கொண்டான். அப்போது அவர் அங்கும் இங்கும் நோக்க, ஓர் இடையன் ஆடு மேய்த் துக்கொண்டிருந்தான். அவனைக் குறுகி, அவர், "அப்பா, எனக்குப் பசி தலை சுற்றுகிறது. சிறிது கூழ் தருவாயாகில் உன்னை என்றும் மறவேன்," என்றனர். அவனும், தான் சிறு குடுவையில் தனக்கென வைத்திருந்தகூழை அவருக்கு அன்போடு அளித்தான். அதனால் பசிதீர்ந்து உடம்பு குளிர்ந்த அவ்வையாருக்கு உள்ளமும் குளிர்ந்து சீவ கலை வந்தது. அப்போது அவர் அவன் பெயரை நூலிற்பொறிக்க எண்ணி, அவன் பெயர் யாது என வினவினர். அவன் ஒன்றும் அறியாத காட்டுப் பூச்சி யாதலால் "நான் அதனை மறந்தேன்," என்றான். அதன்பின் அவ்வையார், "உன் ஊர்ப் பெயரையாவது சொல்," என்று கேட்டார். அவன் மறதி ஒன்றைமட்டும் மறவாமல் மற்றெல்லாவற்றையும் மறந்தவனாதலின், "அதனையும் மறந்தேனே!" என்றான். அப்பால் அவ்வையார், "உன் ஊரிலுள்ள அடையாளங்களை யேனுஞ் சொல்," எனக் கேட்க அவன், "என் ஊரிலே ஐந்து வேலமரமுண்டு," என்றான். அவன் பேதைமைக்குப் பெரிதும் இரங்கிய அவ்வையார், அவன் தன் பெயரையும் தன் ஊர்ப் பெயரையும் மறந்ததனால் அவனுக்கு அசதி என்

னும் பெயரையும், அவன் தனது ஊரிலே ஐந்து வேலமரங்கள் உண்டு என்றமையால் அதற்கு ஐவேல் என்ற பெயரையும் அமைத்துக்கொண்டு, அசதிக்கோவை எனப் பெயரிய ஒரு நவரசம் சொட்டும் பிரபந்தத்தை அருளிச் செய்து, அவன் புகழைத் தமிழ்ப் பறையால் முழக்குவித்தனர். அப் பாட்டுக்களெல்லாம் அகரத்தையே முதன்மையாகக் கொண்டு, மோனை நலம் முழுதும் வாய்ப்பப்பெற்று மிளிர் தலைநோக்கும் அறிஞர், அந்நூல் முற்றும் கிடைக்காமைக் காகத் தம் நெஞ்சம் நீராய் உருகுவர் என்பது திண்ணம். அவற்றுள் ஒரு கவியை இங்குத் தருவோம் :

ஆடுங் கடைமணி யைவே லசதி யணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யாடந்த வாசை நிகழ்ந்தரிதால் ;
கோடுங் குளமுங் குளத்தரு கேநிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.

சோழன் குலோத்துங்கனுக்கு மணம் நடைபெற்ற காலத்தில் பாவலரனைவரும் அவன்மேல் பாமாலைகளைப் புனைய, அவ்வையார் வரப்புயர என ஒரு சொற்றொடரை மட்டுங் கூறி வாளாவிருந்தனர். அதன் கருத்தறியாத சோழன் ஒட்டக்கூத்தரை நோக்க, அவர் உடனே,

வரப்புயர நீருயரும் ; நீருயர நெல்லுயரும் ;
நெல்லுயரக் குடியுயரும் ; குடியுயரக் கோலுயரும் ;
கோலுயரக் கோவுயரும்.

என்று அவ்வையார் கருத்தை இனிது விளக்கினர்.

அம்பர் என்னும் ஊரிலே வாழ்ந்திருந்த சிலம்பி என்னும் கணிகை ஒருத்தி கல்வியிற் பெரியவராகிய கம்பரால்பாடல் பெற்றால், தனக்குப் பெருஞ் செல்வம் வருமெனக் கருதி, ஒருநாள் அவரை அணுகி, அவரைத்தன்மேல் பாடவேண்டுமென வணங்கிக் கேட்டுக்கொண்டாள். உடனே கம்பர் அவளை நோக்கி, " ஆயிரம் பொன் கொடுத்தால் ஒரு பாட்

டுப் பாடுவேன்,'' என்றனர். அதைக் கேட்டு அக்கணிகை வருந்தி, தான் அதுகாறும் ஈட்டிவைத்திருந்த பொருள் எல்லாவற்றையும் விற்று, ஐந்நூறு பொன்னாக்கி, அதனைக் கொண்டுபோய் கம்பர்பால் அளித்து, "புலவர் பெருமானே, அடியாளிடம் இருந்த பொருள் இவ்வளவே, இதனை அருள்கூர்ந்து ஏற்றுக்கொண்டு, என் நிலைமைக்கு இரங்கி, என்மேல் ஒருகவி பாடவேண்டும்,'' என்று ஏக்கற்று நின்று கேட்டாள். அவரோ ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டு என்று கூறி,

'தண்ணீருங் காவிரியே ; தார்வேந்தன் சோழனே ;
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே.'

என அவள் வீட்டுத் தெருச்சுவரின்மேல், எழுதிவிட்டுச் சென்றனர். அது கண்ட கணிகை தன் கருத்தும் நிறைவேறாமல் கையில் இருந்த பொருளும் பறிபோய் ஊணுக்கும் உடைக்கும் அல்லல் உழந்துகொண்டிருந்தனள். சிறிது காலஞ் சென்றபின் சிலம்பியின் நல்லூழ் வயத்தால் அவ்வையார் அவள் வீட்டை யடைந்து சுவரின்மேல் எழுதியிருந்த பாட்டைப் பார்த்துச் சிலம்பியை அதன் வாலாற்றைக் கூறும்படி கேட்டார். அவளும் நடந்தவை யாவும் அவருக்கு நவின்றனள். அதன்மேல் அவ்வையார் அவளைத் தன் பசி தீர்ப்பதற்குச் சிறிது கூழ் கிடைக்குமா? எனக் கேட்க அவளும் விரைவிற் சென்று கூழ் கொடுத்து அவருடைய இளைப்பை ஆற்றினள். அப்புறம் அவ்வையார் அப்பாட்டின் பின் இரண்டடியை பின்வருமாறு தாமே எழுதி முடித்து, அக்கணிகைக்கு வேண்டும் பொருளும் விரைவில் கிடைக்குமெனக் கூறிச் செல்வுழிச் சென்றனர்.

—பெண்ணாவாள்

அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

பின்னர்த் தமது பாட்டை முற்றுவித்தவர் அவ்வை யார் எனச் சிலம்பியால் தெரிந்து கம்பர், 'கூழுக்குப் பாடிக் குடியைக் கெடுத்தாள்' என்றுரைத்துச் சென்றூர். அது முதல் கம்பருக்கு அவ்வையார் மீச்செலவைச் சிறிது அடக்க வேண்டுமெனத் தோன்றிற்று. அதன் பொருட் டுக் காலம் வாய்க்குமெனக் கருதி யிருந்தார். ஒரு நாள் அவ்வையார் எதிர்படக் கம்பர், 'ஒருகால் நாலிலேப் பந்தலடி' எனச் சொல்லி அவ்வையாரைப் பொருள் கேட்க, அவர் கம்பர் குறித்தது ஆரைக்கிரை என்பதைப் புலப்படுத்தி அவர் கூறியதில் அடியென இழிவுச் சொல் காணப்படுத லின் அதற்குப் பதிலாக அவர் வெட்கமுற,

எட்டேகா லட்சணமே ! ஏமனே றும்பரியே !
மட்டில் பெரியம்மை வாகனமே !—முட்டமேற்
கூரையில்லா வீடே ! குலராமன் தூதுவனே !
ஆரையடா சொன்னுயது.

என்று பாடினர். கம்பர் நாணி இனிக் கிழவியினிடத்தில் வாய் கொடுக்கலாகா தெனத் துணிந்து வாளா விருந்தனர்.

சோழன் தன் கோப்பெருந்தேவி வேண்டுகோளுக் கிணங்கி அரண்மனையில் கம்பருக்கு ஒரு விருந்து வைத் தான். கம்பரும் சோழனும் விருந்துண்டு களித்துத் தாம் பூலம் தரித்துக்கொண்டு இனிதிருக்கையில், சோழன் அவரை நோக்கி, "கவிச்சக்கரவர்த்தியே, உலகத்தில் இன்பத்திற் சிறந்தது யாது?" என வினவினுன். அவன் வினவியதும் கம்பர்,

'கங்கைநீர் அதனின் மிக்க கடவுள்நீர் எங்கு மில்லை ;
வெங்கதிர் ஒளியே யன்றி வேருெளிர் ஒளியு மில்லை ;
எங்கணும் தாயைப் போல இனியதோர் உறவு மில்லை;
மங்கையர் சுகமே அன்றி மறுசுகம் இல்லை மன்னு !'

என்று கூறிக் குலோத்துங்கனை உவப்பித்தனர். அப்பொ ழுது அவ்வையார் அங்குத் திடுமெனத் தோன்றினர்.

அவர் செவியில் இப்பாட்டின் இறுதியடி விழுந்ததும் அதனை முழுதும் குலோத்துங்கனுல் கேட்டறிந்து, அப்பா முற்றும் குற்றமென மொழிந்தனர். அஃது எங்ஙன மெனச் சோழன் கேட்க அவ்வையார்,

விண்ணினின் மழையே அல்லால் வேறொரு நதியுமில்லை ;
கண்ணின் ஒளியே யல்லால் காணுமோர் ஒளியுமில்லை ;
எண்ணிடிற் பொருளைப்போல இனியதோர் உறவு மில்லை ;
உண்ணிடிற் சுவையே யல்லால் ஒருசுகம் இல்லை மன்னு !

என்று நுட்பமாகச் சொல்லிச் சோழனை வியப்பச் செய் தனர். கம்பர் மெல்லென நழுவிச் சென்றூர். அவர் சென்ற பிறகு சோழன் அவ்வையார் வாயைக் கிளறி, அதனுல் இன்புறக் கருதித் தன் தேவியையும் அழைத்து அரு கிருத்தி, அவ்வையாரை நோக்கிக் கம்பரைப்போல' பார காவியம் பாடுவோர் உளரோ என்றுன். அதற்கு உத்தர மாக அறிவாட்டி,

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்:-யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண் ;
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் ;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ;—நித்தம்
நடையு நடைப்பழக்கம் ; நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.

இவற்றை அவ்வையார் பாடி முடிக்கச் சோழன் கம்பர் பாட்டை மீண்டும் வியந்து கூற, அவ்வையார்,

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும் ;
விரனிறைய மோதிரங்கள் வேண்டும் ; அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் ; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

என்று உடனே கூற, அதன்மேல் சோழன் அவர் வாக்கு வன்மையைப் புகழ, அவ்வையார்,

காணாமல் வேணதெல்லாங் கத்தலாம் ; கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே ;—நாணாமற்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

என்னும் செய்யுளைக் கூறிச் சோழனும் அவன் தேவியும் பிறரும் இன்பக் கடலிலே நிலைக்கச் செய்தனர்.

அவ்வையாருக்கும் கம்பருக்கும் ஒருவர் ஒருவர் நன்கு அறியாமையாலும் கம்பருக்கு இருந்த புலமைக் காய்ச்சலாலும் நேர்ந்த பகை முறுகி வளராமல் நீங்குவதற்கு ஒரு காலம் வாய்த்தது. சோழன் ஒருநாள் கம்பருடன் வேட்டைக்குச் சென்றான். அவ்வையாரும் அவர் சென்ற சிறிது நேரம் தாழ்ந்தபின் சோழனைத் தேடிக் கொண்டு ஆங்குச் சென்றனர். சென்றவர் சோழனை நோக்கி,

கல்வி யுடையீர் ! கருங்கா னகத்திடையே
நெல்வி யிலையுதிர்ந்து நிற்பதேவன் ?

என்றார். அது கேட்ட கம்பர்,

—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு.

என்று விடை இறுத்து அவ்வையார் பாட்டை முடித்தனர்.

அதுபோழ்து அவ்வையார் புலவர்பெருமானைநோக்கி, "கம்பரே, கற்றாரைக் குறித்துப் பொதுவாக நான் கொடுத்த வினவிற்கு நீர் விடை கூறி என் பாட்டை முடித்தீர். இதுபோன்றே சிலம்பியின் வேண்டுகோளுக்கு இணங்கி நீர் பாடிய செய்யுளை நான் முற்றுவித்தேன். அத்

தகைய செயல் புலமை நிரம்பிய மாந்தருக்குள் இயல்பாக இருக்கவும் அதனைப் பொருது நீவிர் என்மேல் மனவருத் தங் கொண்டது, நும் கல்விக்கும் அறிவிற்கும் அழகு அன்று,'' என்று நல்லறிவுச் சுடர் கொளுத்தினர். அவ்வை யார் கூறிய சொற்கள் சாதுரியமும் மாதுரியமும் பொருந்தி இருந்தமையால் புவிச்சக்கரவர்த்தியாகிய சோழனும் வியந் தான். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் அவ்வையாரோடு மகிழ்ந்து குலாவிக் கலந்து கொண்டனர். அது முதல் இவ்விருவரும் ஒருவரோடொருவர் அன்பு பூண்டு அளவளாவினர்.

பாண்டியன் தக்க புலவரை ஆதரிக்கும் பொருட்டும், தமிழ்க் கல்வியை வளர்க்கும் பொருட்டும் மாற்றுயர்ந்த செம்பொன்னல் செய்யப்பட்ட நான்கு பருத்த சங்கிலி களில் இணைக்கப்பட்ட ஓர் ஊசற் பலகையை யமைத்து அதன் மீமிசைப் பொற்குவியலை யிட்டு, 'இச்சங்கிலிகள் அற்று விழும்படி செய்யுள் செய்வார் உளராகில் அவருக்கு இப்பொற்குவை பரிசாகும்,' எனச் சாற்றி எங்கும் பறை யறைவித்தான். அது தெரிந்த புலவர்கள் ஆசையைப் பெற ஆசையுற்றாரேனும் செய்யுள் செய்து சங்கிலியை இறச் செய்தல் தம்மால் இயலாத கருமம் என வெண்ணி அஞ்சி நின்றனர். ஒருவர்க்கும் துணிவு பிறந்திலது. அத னல் பொற்குவை பன்னெடு நாட்களாகத் தூங்கிக்கொண் டிருந்தது. அவ்வழிப்போந்த அவ்வையார் இச் செயலை யறிந்து உட்புகுந்து, பின்வரும் நான்கு செய்யுட்களையும் பாட ஒவ்வொரு செய்யுளுக்கு ஒரு சங்கிலியாக நான்கு சங்கிலிகளும் இற்று விழுந்தன.

ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்தொன் றாம்புலவர்;
வார்த்தை பதினா யிரத்தொருவர் ;—பூத்துமலர்த்
தண்டா மரைத்திருவே ! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

தண்டாம லீவது தாளாண்மை ; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை ;—அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது காற்கூலி ; பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமேல், அவன்குடி
எச்சம் இறுமேல் இறு.

சென்றுமு துண்பதற்குச் சேய்வ தரிதென்று
மன்றுமு துண்பான் மனைவாழ்க்கை—முன்றிவில்
துச்சி லிருந்து துடைத்தெழுகண் ணீராலேழ்
எச்சம் இறுமேல் இறு.

வழக்குடையார் நிற்பவரும் பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின்—வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் துடைத்தெருகண் ணீராலேழ்
சுற்றம் இறுமேல் இறு.

பின்னர் அப்பொற் குவியலைப் பெற்றுக்கொண்ட அவ்வையார் வறிஞர்க்கு அதனை வழங்கினர். அது தெரிந்த பாண்டியன் அவரை அடைந்து அவர் புலமையைப் பாராட்டிச் சீராட்டினன்.

ஒருகால் அவ்வையார் ஒரு காளிகோயிலிற் சென்று முதுமைப் பருவத்தின் தளர்ச்சியால் காலை முடக்கிக் கொண்டிருக்க முடியாமல் அம்மையின் திருமுன்னர்த் தமது கால்களை நீட்டிக் கொண்டிருந்தனர். அப்போது ஆண்டிருந்த பூசாரி ஒருவன் அவரைப் பார்த்து, “ஓ, கிழவியே, உனக்கு அறிவு இருக்கிறதா? பழுத்து நரைத்திருக்கிறாயே, சுவாமிக்கு முன் கால் நீட்டலாமா?” என்றான். அவன் கடுஞ் சொற்களைக் கேட்ட அவ்வையார், “ஏ மூடா, சுவாமி இல்லாத இடத்தை எனக்குக் காட்டு ; அங்கே நான் கால் நீட்டுகிறேன்,” என்று கூறினர். அப்பொழுது அங்கே இருந்தவர் சிலருக்கு அவ்வையாரைத் தெரிந்திருந்தமையால் அவர்கள் அவரைக் கண்டு வணங்

கினர். அவர்கள் வணங்கினதைக் கண்ட பூசாரி தான் செய்த குற்றத்திற்காகக் கன்னத்தில் அறைந்து கொண்டு தண்டாகாரமாக அவர் காலில் விழுந்தான். அவ்வையாரும் அவன் செயலுக்கு மகிழ்ந்து வாழ்த்தினர்.

உறையூரிலே குலோத்துங்க சோழன் வேத்தவைப் புலவராக வீற்றிருந்த ஒட்டக்கூத்தர் சிறிது கல்விச்செருக் குடையவர். அவர் எவரையும் பொருட்படுத்தாமல் பாவலரை மட்டந் தட்டுதலையே தமது மகிழ்ச்சிக்குரிய வேலையாக மதித்திருந்தனர். அவர் கல்விக் கடவுளாகிய அவ்வையாரையும் பொருட்படுத்தல் இல்லை. அவர் செருக்கை அடக்க வேண்டுமென்று அவ்வையாருக்கும் விருப்பம் உண்டு. அவர் குலோத்துங்க சோழன் கோப் பெருந் தேவியாகிய பாண்டியன் மகளுடன் ஸ்திரீ தன மாகச் சேர்ந்த புகழேந்திப் புலவரையும் அலைக்கழித்துத் துன்புறுத்தினர். ஒருகால் அவ்வையார் குலோத்துங்கன் அவையில் புகழேந்திப் புலவருக்கு மட்டும் மதிப்புக் காட் டிக் கூத்தரை அவமதித்தனர். அப்போது கூத்தர் வெகுண்டு அவ்வையாரை நோக்கி, "கிழவி, என்னை நீ அவமதித்த காரணம் யாது?" என அவ்வையார், "நும் மினும் புகழேந்திப் புலவர் சிறந்தவர். அதனால் நும்மிரு வருக்குமுள்ள ஏற்றத் தாழ்வை எனது செயலால் புலப் படுத்தினேன்," என்றனர். அது கேட்ட ஒட்டக்கூத்தர் அவ்வையாரைச் சினந்து நோக்கி, "நீவிர் எம் இருவரில் எவ்வாறு வேற்றுமை கண்டீர்? நம் புலமை நீர் அறியுந் தரத்ததோ?" என்றார். அது கேட்ட அவ்வையார் "கூத்தரே, நீர் சிறந்த புலவராயின் சோழனைப் பாட்டு டைத் தலைவனாக அமைத்து, நற்றாயிரங்கல் என்னுந் துறை யில் ஈற்றடியில் சந்திரன் பெயர் மூன்று இடங்களில் பொருந்திவர, ஒரு பாட்டுப் பாடுக" என்றனர். உடனே கூத்தர் விரைந்து,

'வெள்ளத் தடங்காச் சினவாளை
        வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்
        துளியோ டிறங்குஞ் சோணாடா!
கள்ளக் குறும்பர் குலமறுத்த
        கண்டா! அண்டர் கோபாலா!
பிள்ளை மதிகண் டப்பேதை
        பெரிய மதியு மிழந்தாளே.'

என்னும் பாட்டைப் பாடினர். அதனை அவர் முடித்தவுடன் அவ்வையார் அவர் பாட்டில் மூன்று சந்திரன் வரவேண்டியதற்கு இரண்டே சந்திரன் வந்திருத்தலைக் கண்டு சந்திரன் பரியாயப் பெயராக அவர் பெய்துரைத்த மதியென்னுஞ் சொல்லையே எடுத்துக்கொண்டு இரு பொருள்பட "ஒட்டா ஒரு மதி கெட்டாய்," என்று கூறிப் புன்முறுவல் பூத்தனர். பின்பு அங்கிருந்த புகழேந்தியாரை நோக்கி, "நீர் பாடுக" எனப் பணிக்க அவர் வணக்கத்துடன்,

'பங்கப் பழனத் துழுமுழவர்
        பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
        தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா!
கொங்கர்க் கமரா பதியளித்த
        கோவே! ராச குலதிலகா!
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
        மெலிந்த பிறைக்கும் விழிவேலே.'

என அவர் கேட்டவாறே விரைவில் பாடி முடித்தனர். கூத்தர் வெட்கினர். சோழன் அவ்வையார் அறிவை மெச்சினன்.

ஒருகால் அவ்வையார் ஓரூரின்கண் இருட்டிவிட்டமையால் தங்க வெண்ணி, ஆண்டுள்ளாரை எங்கேனும் படுக்க இடங்கிடைக்குமா எனக் கேட்க அவர்கள், அவரை

நோக்கி, "அம்மா, இவ்வூருக்கு மேற்பால் ஒரு சாவடி உளது; அங்கு எத்தனை பேர் வேண்டுமானாலும் இனி திருக்கலாம்; ஆனால் அவ்விடத்தே ஒரு பேய் இருக்கிறது; அஃது அங்குச் செல்வோர் எவரையும் நடுயாமத்தே போந்து அறைந்து செல்கின்றது," என்றனர். அதனைக் கேட்ட அஞ்சா நெஞ்சம் படைத்த கிழவி, 'பேயைப் பேய் அறையுமா' என்று புன்னகையுடன் மொழிந்து அச்சாவடிக்கே சென்று ஓரிடத்தில் தரையே பாயலாக வும் கையே தலையணையாகவுங் கொண்டு படுத்துறங்கினர். வழக்கம்போல ஆங்கண் உறைந்திருந்த கழுது அவ்விரவில் முதல் யாமத்தில் அவ்வையார் அருகே எற்றெற்றென்னும் ஒலியுடன் வந்தது. அதனை யறிந்த செந்நாச் செல்வி அப்பெண் பேயை உற்று உறுத்து நோக்கி,

வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாள்என்று
எற்றோமற் றெற்றோமற் றெற்று.

என ஒரு தொடர்பைச் சொல்லினர். அதனைக் கேட்ட பேய் கல்விக் கண்ணுடைமையால் கருத்துத் திருந்தப்பட்ட தாதலின் 'நம் முற்பிறப்பின் குறிப்பை உள்ளடக்கிப் பாடிய இவள் அருளுடைச் செல்வியே; இவளை யாதும் செய்யலாகாது' என வுன்னிச் சென்றது.

மீண்டும் இரண்டாம் யாமத்தே, அது பேயானதால் தன் தகைமைக் கேற்ப முன்னைய நிகழ்ச்சியை மறந்து, அவ்வையாரைக் குறுகி எற்றெற்றென்று வந்தது. அப் பொழுது அருந் தமிழ் அன்னை ஓர் உலகநீதியை அமைத் துப் பின்வரும் தூக்கைக் கூறினர்:

கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை-அரும்பகலே

இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரென்று
எற்ருமற் றெற்ருமற் றெற்று.

இதைக் கேட்ட பைசாசம் பையச் சென்று ஒடுங்கிற்று. திரும்பவும், அஃது அங்ஙனே போதா, அவ்வையார்,

வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால்—ஆனபொழுது
எய்த்தோம் இளைத்தோமென் றேமார்ந் திருப்போரை
எற்ருமற் றெற்ருமற் றெற்று.

என்ஞெரு செய்யுள் செப்ப, அது சென்றடங்கி நான்காம் யாமத்தே முற்போந்தவாறே ஆர்த்துக்கொண்டு வந்தது. அச்சமயம் அவ்வையார் மேல்வரும் யாப்பை அறைந்தனர்:

எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்ருக் கிடையேபோற்—பெண்ணுவார்
பொற்ருெடி மாதர் பொருதோள்மேற் சாராரை
எற்ருமற் றெற்ருமற் றெற்று.

இப்பாவைச் செவியுற்ற அலகை அவ்வையாரை அணுகி அடங்கி ஒடுங்கி நின்றது. அதன் நிலைமையைக் கண்ட அன்புடை நங்கையார் அகநெகிழ்ந்து, "அந்தோ! நின் வரலாறு என்னை? அறைகுதி," என்று வினவினர். அவ்வேளை அவ்வாவேசம் வாய்விட்டலறிக் கண்ணீர் சொரிந்து தேம்பித் தேம்பித் தனது பழம் பிறப்பின் செய்தியைப் பின் வருமாறு உரைக்கலுற்றது:

தொழுதகு தெய்வம் அனையாய், நான் இந்நகரத்தை ஆண்ட அரசன் புதல்வி. நான் கட்டிளமையிற் சிறந்திருந்த காலத்து ஒரு நாள் மேன்மாடியில் உலாவிக்கொண்டிருந்தேன். அப்போது வீதிவழியே பேரழகுவாய்ந்த ஓரிளங் குமரன் மழவிடைபோலச் சென்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டு காதல்கொண்ட நான் அவனுக்கு ஒரு திருமுகந் தீட்டி, அவன் முன் எறிந்தேன். அத்திரு

முகத்தில் நான்அன்றிரவு இச்சாவடியில் வந்திருந்தால் தன்னைச் சந்திப்பதாக எழுதியிருந்தேன். ஆனால் அவ்வரச குமாரனோ கல்வியறிவில்லாதவன்; நாடோடியாய்த் திரிந்து கொண்டிருப்பவன். அவன் என் திருமுகத்தை வேறொருவருக்குங் காட்டாமல் தொழுநோயாளன் ஒருவனைச் சிறிதும் ஐயுறாது காட்ட அப்பாம சண்டாளன் என்னை மனைவியாகப் பெறக் கருதி, அம்மன்னவன் மைந்தனை மருட்டி, இவ்வூரை விட்டு ஓட்டுவதற்காக, "நீ இவ்வூரைவிட்டு இந்நொடியிற் செல்லா தொழியின் வேந்தனால் உன் தலையை இழப்பது திண்ணம்; உன்மேல் இரக்கத்தால் இதனை எழுதினேன்," என அம்முடங்கலிற் பொறித் திருப்பதாகக் கூறினான். அதனை மெய்யென நம்பி மன்னிளங் குமரன் "ஐயோ! ஈதென்ன கொடுமை!" என்றாற்றி விரைந்து சென்றான். பின்னர் நான் ஓலையிற் குறித்தவாறே சாவடியை அடைய, அங்கு அத்தொழு நோயாளன் வஞ்சகமாக வந்து மன்னன் மைந்தனே என்று நான் எண்ணுமாறு நடித்து, என்னை விரைந்தணைத்தான்; அதன்மேல் உண்மையறிந்த யான் புலி போற் சீறி மருங்கிலே யிருந்த குறுவாளை எடுத்துக்காட்டி, அச்சுறுத்தி அவனால் உண்மையறிந்து அவனையுங் கொன்று நானும் என் உயிரை மாய்த்துக்கொண்டேன். அதன்பின் இப்பேய் வடிவங்கொண்டு அலைகின்றேன்."

இவற்றைக் கேட்ட அவ்வையார் பெரிதும் வருந்தி, அப்பேயை நோக்கி, "உனக்கு வேண்டுவது யாது?" எனக் கேட்டனர். அது, "நான் விரும்பிய கணவனை அடைந்து வாழவேண்டும்," என மொழிய அவ்வையார் உடனே உள்ளொளியால் அவ்வரச குமாரன் இயல்பை அறிய, அவனும் அரச குமாரியின் நிலையை அறிந்து, தன் கல்லாமையால் அவள் உயிரிழந்ததை உணர்ந்து வருந்தி, உயிரிழந்து அச் சாவடியிலேயே பேயாய் இருத்தலை உணர்ந்து, அச்செய்தி

யைக் கூறினர். அரசகுமாரன் தன் பொருட்டு உயிரிழந்தமை அறிந்ததும் அப்பெண் பேய் களிப்பெய்தியது. பின் அவ்வையார் அவ்வலகையை நோக்கி, "நீ உறையூரிலே சோழன் திருமகளாகத் தோன்றுவாய். நீ காதலித்த அரசகுமாரன் ஓரரசனாகத் தோன்றிக் கல்விச் செல்வனாய்த் திகழ்வான். அவனும் நீயும் கண்ணும் மனமுங் கலந்த பின்றை ஓராவிற்கு இருகோடு தோன்றினாற்போலக் காதற் கிழமை கொண்டு கடிமணம் புரிந்து இன்புற்று இனிது வாழ்வீர்," எனக் கூறினர். அலகையும் மகிழ்ச்சி கூர்ந்து, தமிழ்ச்செல்வியின் அடிமலர்களை வணங்கி அகன்றது.

அவ்வையார் இளம்பருவத்திலேயே பரஞானம் உதிக்கப்பெற்றுத் திருவருளைத் தலைக்கூடி நின்றவராதலின், அவருக்கு நாள் செல்லச்செல்ல 'அது கருணை இளந்தளிர் காட்டிக் கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து, புண்ணிய அஞ்செழுத் தருங்காய் தோன்றிக் காணினுங் கேட்பினுங் கருதினுக் களிதருஞ் சேணுயர் மாணிக்கத் தீங்கனியாகப் பையப் பையப் பழுத்துக் கைவர,' அதனை இனிதின் அருந்திச் செம்மாந்திருந்தனர். அப்போது நம்மனோர்பால் முறுகி எழுந்த அருள் மேலீட்டால் ஞானக் களஞ்சியமாக உள்ள 'குறள்' ஒன்றைப் பாடி அருளினர். அது ஞான தத்துவ நுட்பங்களைச் செவ்விதின் விளக்குவது. அதன் முதற் செய்யுளையும் அவையடக்கத்தையும் ஈண்டுக் குறிப்பிடுவோம் :

ஆதியாய் நின்ற அகர முதலெழுத்து
ஓதிய நூலின் பயன்.

நல்லோர் பிறர்குற்ற நாடார் ; நலந்தெரிந்து
கல்லார் பிறர்குற்றங் காண்பரோ ;—அல்லாத
என்போல்வா ரென்னை யிகழ்வரோ? என் கவிக்குப்
பின்பாரோ காண்பார் பிழை ?

இங்ஙனம் பன்னெடு நாட்கள் ஜீவன் முத்தராக வாழ்ந் திருந்து 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்புமிகை' என்றும் 'ஆனாலும் இந்த உடம்போடிருத்தல் அருவருப்பே' என் றும் ஆன்றோர் உரைத்தவாறு உடம்பை வெறுத்து அதனை விடுத்துச் சிவபரஞ் சுடரின் திருவடித் தாமரைகளில் இரண்டறக் கலந்தனர். இம்மாதரசியைப்போல நமது தமிழ்நாட்டு மகளிரும் கல்வியும் அறிவும் பூத்து உலகத்துக் குப் பயன்படுமாறு இறைவன் இன்னருள் முகிழ்ப்பானாக. அவ்வையார் பாடிய பாட்டுக்களுள் நயம் கருதி இன்னுஞ் சிலவற்றைக் கீழ்க் குறிப்பிடுவோம் :

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

வேழ முடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து ; தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள் ;—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர் !
எறும்புந்தன் கையாலெண் சாண்.

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ; ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின் ;—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாவிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம் ;
பேசும் உலாவிற் பெதும்பைபுலி ;—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி.

தாயோ டறுசுவைபோம் ; தந்தையொடு கல்விபோம் ;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ;—ஆயவாழ்
வுற்ரு ருடன்போம் ; உடன்பிறப்பாற் ருேள்வலிபோம் ;
பொற்ருலி யோடெவையும் போம்.

போந்த உதாரனுக்குப் பொன்துரும்பு ; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பே ;—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம் ; இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு.

மாடில்லான் வாழ்வும் மதியில்லான் வாணிபமும்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்ணும்
விருந்தில்லான் வீடும் விழல்.

---

2. கம்பர்

'திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம் ;—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் ; குறளணுகேம் ;
எங்கெழிலென் ஞாயி றெமக்கு ?'

உலகத்தை உள்ளவாறு அறிதலைக் காட்டிலும் மக்கட் பிறப்பிற்குச் சிறந்த பயன் வேறொன்றுமில்லை. அஃது உயிர்ப்பொருள், உயிரல் பொருள் ஆகிய இரு கூற்றிலே அடங்கும். உயிர்ப்பொருள் மிகப் பலவாய் வெவ்வேறு வகைப்பட்ட அறிவும் விருப்பமும் தொழிலுமுடையன வாய் விரிந்து பரந்து கிடக்கும். உயிரல் பொருளும் அதி விசித்திரமான தோற்றமும் நிலையும் உடையனவாய்த் திகழ்ந்து நமது கட்புலனைக் கவர்ந்து மனப்புலனையும் மயக்

கும். வறுமையாலும் பிணியாலும் வருந்துவோர் இவ்வுல கம் துன்பத்துக்கு நிலைக்களம் என்பர். செல்வம், அதிகாரம், இளமை, அழகு முதலியவற்றோடு ஏனைய துப்புரவுகளுங் குறைவறப் பெற்றோரும் நரை, திரை, மூப்பு, சாக்காடு என்பவைகளைப்பற்றி எண்ணித் தாம் நுகரும் இன்பம் நிலை யற்றதெனை வருந்துவர். எத்துணைப் பெரு நல்குரவை யுடையரேனும், எத்துணைப் பெரும் பிணியாளரேனும் ஓரொருகால் தம்மை மறந்து உண்புழியும் உறங்குழியும் இன்பம் துய்க்காதார் இலர். இன்பவுணர்ச்சி சிறிதும் இல்லையாயின் உலகத்தில் கோடிகோடியாக மக்கள் மாண்டு போவார். அன்றியும், ஒரு காலத்தில் ஒருவர் தாம் உழந்த அல்லலையும், தமக்கு நேர்ந்த குறைகளையும், மானக்கேட் டையும் மறவாது இருப்பாராயின், அவர்க்கு வாழ்வு உவர்த் துத்தான் தோன்றும். ஆதலின் எல்லாம் வல்ல இறைவன் தனது அருட் பெருக்கால் உயிர்களுக்கு நன்மை புரியும் பொருட்டு மறப்பு என்னும் இனிய குணத்தை அமைத் திருக்கின்றான். அதுதான் பலரையும் உயிர்வாழச் செய் வது. அவ்வரும்பெறற் கருணையை இறைவன் உயிர்களுக்கு வழங்கானாயின், ஆயிரக்கணக்கான உயிர்கள் அல்லலுற்று அழிந்துபோம்.

ஆகவே, உலகம் பெருந்துன்பத்துக்கு மட்டும் இருப் பிடம் என்பது ஆகாது. இன்பமும் துன்பமும் ஒன்றாகச் சேர்த்து இழைக்கப்பட்டதே உலகம். ஒருவன் ஒருபக் கத்தே வயிறார, அறுசுவை யுண்டி பொற்கலத்திலே உண்டு உவகை வயத்தனாய் நிற்ப, மற்றொரு பக்கத்தே மற்றொரு வன் கூழுக்கும் வழியின்றிப் பசிநோய் தலைக்கொள்ள, கண் குழிந்து காலோய்ந்து, முகக்களை நீங்க வருந்துகின் றான். அன்றியும் ஒரு காலத்தில் எழுநிலை மாடத்திலே இருந்து குடை நிழற் கீழ்க் குஞ்சரம் ஊர்ந்து சென்றவன்,

பிறிதொருகால் நடைமெலிந்து காலால் நடந்து செல்லுத லும், ஒருகால் ஐயமேற்று வயிறு வளர்த்தவன், ஆயிர வர்க்கு அன்னதாதாவாய் விளங்குதலும் நாம் கண்கூடாகக் காணும் நிகழ்ச்சிகளாம். நாம் நமது வாழ்வை முற்றும் இன்பமாகச் செய்ய வேண்டுமாயின் நமது மனத்தை விரித்து, இனிய அன்பைப் பெருக்கி, உலகத்தில் வாழும் எல்லாருடைய இன்ப துன்பங்களையும் பார்த்துப் பார்த்துக் கடவுள் தன்மையை அறிந்து அறிந்து, மகிழ்ச்சி எய்தல் வேண்டும்.

அத்தகைய உயரிய மகிழ்வை நமக்குத் தருபவர் நல் லிசைப் புலவர்களே யாவர். அவர்களே துன்பத்திலும் ஓர் இன்பத்தைக் காட்ட வல்லவர். அவர்களே இன்பத்தில் மக்கள் அழுந்தாவாறு நினைவூட்டுபவர். அவர் இப்பெரும் புவியையே ஓர் அகராதியாகக் கொள்வர். அவர் தமது கூரிய சீரிய அறிவினால் பெரிதும் வேறுபட்ட இரண்டு பொருள்களில் ஒப்புமையை அறிவர். வானிலே இயங்கும் திங்களுக்கும், மண்ணிலே வாழும் மக்கள் இன்முகத்துக் கும் ஒற்றுமை கண்டது அன்னார் ஒண்மதியன்றோ? நீரிலே மிளிரும் கயலுக்கும், மாதர் முகத்திலே ஒளிரும் கண்ணுக் கும் உவமை கண்டு நமக்கு உவகை ஊட்டினது அவர்தம் நுண்மதியே அன்றோ? தன்னலத்தைச் சிறிது சிறிதாக நாம் இழப்பதற்கு நமக்குத் துணைபுரிவோர் நாவலரே. எவ்வளவுக் கெவ்வளவு தன்னலம் அழியுமோ அவ்வளவுக் கவ்வளவு ஒருவனுக்கு இன்பமும் பிறக்கும். சந்திரமதி தனது அருமந்த புதல்வனை இழந்து புலம்புதலை நாம் படிக் கும்போது நமது உணர்வு விரிந்து, அத்துன்பத்திலே தோய்தலினால் நமக்கு இன்பம் பிறக்கிறது. பின்னர் அச் சந்திரமதி தன் புதல்வன் உயிர்பெற்றெழ இன்புறுதலை நாம் படித்து அவள் அடைந்த இன்பத்தை நாமும் எய்து

கின்றோம். பிறர் வாழ்வை நம்முடைய வாழ்வாகக் கொண்டு மகிழ்தலும், பிறர் தாழ்வை நம்முடைய தாழ்வாக எண்ணி வருந்துதலும் நமக்கு நூலுணர்ச்சியால் ஏற்படுவதுபோல் வேறெக்காரணத்தாலும் ஏற்படாது. அத்தகைய உணர்ச்சி பேரறிவும் அருள் ஊற்றிருக்கும் உள்ளமும் இயல்பாகவே அமையப் பெற்றுத் தக்க புலமை வாய்ந்த நல்லிசைப் புலவர் நூல்களால் உண்டாதல் போலப் பிறவற்றால் உண்டாகமாட்டாது. இன்ன தன்மையுள்ள புலவர் உலகத்திலேயே மிகச் சிலர். அவர் தம்முள் நம் தமிழ் நாட்டிலே தோன்றிய கம்பரும் ஒருவர்.

இவர் சோணாட்டின்கண் திருவழுந்தூர் என்னும் திருப்பதியிலே உவச்சர் குலத்திலே இற்றைக்குச் சிறிது ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்ப் பிறந்தனர். பிறந்த சின்னாட்கெல்லாம் இவர் பெற்றோர் விண்ணுலக வாழ்வை எய்தினர். அதனால், இச்சிறு குழவியை உற்றார் எடுத்து வளர்த்து வருவாராயினர். இளம் பருவத்திலேயே இச்சேய் அதிநுட்ப மதியுடன் விளங்குவதைக் கண்ட உறவினர் இம் மைந்தனைப் பெரிதும் அன்புடன் பாராட்டி வளர்த்து வந்தனர். இம்மகவு மழலை யாடுகையில் அறிஞரும் வியக்கத் தக்க பொருள்களைக் கூறக் கேட்டு அனைவரும் அக மிக மகிழ்வர். குலமுறைப்படி இச்சிறுவன் காளிகோட்டம் புக்கு அங்கே பூசனை யாற்றும் உறவினருடன் சிறிதுகாலம் தங்கியிருந்து வீடு மீள்வது வழக்கம். இங்ஙனம் பன்னாள் நடைபெற்று வருங்கால் ஒரு நாள் இச்சிறுவன், காளி தேவி தன் முன் தோன்றி, நாவிலே யாதோ எழுதிவிட்டுச் சென்றதாகக் கனவு கண்டான். அன்று தொடங்கிச் செந்தமிழ்ப் பாட்டுகள் இவன் வாயில் தாமே வருவனவாயின. இவ்வியப்பான செய்கையைக் கண்ட பலரும் இவ்விளைஞனைப் பலவாறு புகழத் தொடங்கினர். இங்ஙனம் சில

லாண்டுகள் கழிய இளவலும் பதினெட்டைப் பிராயத் தனுப் பொலிவுற்று விளங்கினன். அப்போது திருவழுந் தூரிலுள்ள பலர் இவனைக் குறுகி, "வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலை அணுகி அவர் ஆதரணையைப் பெறு வாயாக, அவர் உன்னை அன்னைபோல ஆதரித்து, செந் தமிழ் வடமொழியாகிய எல்லாக் கலைகளையும் உனக்கு ஊட்டுவார். உனக்கிருக்கும் இயற்கைச் செல்வத்துடன் செயற்கை மணமும் சேர்ந்தால் பொன் மலர் நாற்றமுடை யதுபோல யாவருக்கும் இனிதாகும்," என்றுரைத்தனர்.

அதுகேட்ட கம்பர் அவர் கருத்துக்கு இசைந்து, திரு வெண்ணெய் நல்லூரை அடைந்தனர். வெண்ணெய் நல் லூர் அக்காலை சடையப்ப வள்ளலார் அருள் நிரம்பிய உள்ளத்தின் பொலிவையே தனக்குப் பொலிவாகப் பெற்றிருந்தது. அவ்வூரிலே வறுமை இருந்த வழியே தெரியவில்லை; தரித்திரமே தலைகாட்டவில்லை. குடிகள் அனைவரும் வேலை செய்து பிழைப்பதற்கு ஏற்ற சாதனங் களைச் சடையப்பர் செய்து வைத்தனர். ஒவ்வொருவருக் கும் அவ்வவர்க்கேற்ற வண்ணம் ஒரு தொழிலை அமைத்து வைத்தனர் அப்பெருந்தகையார். சடையப்ப முதலியார் புகழ் ஒவ்வொரு மனையிலும் விளக்காய் எரியும்; ஒவ்வொரு கிணற்றிலும் நீராய்ச் சுரக்கும்; ஒவ்வொரு குளத்திலும் படியாய்ப் பயன்படும்; ஒவ்வொரு சோலையிலும் கனி யாய்க் கனியும். இல்லையென்று வருவோர் எவர்க்கும் எல்லாத் தப்புராவுகளையும் அமைத்து விடுவதே முதலி யாருக்கு முதல் வேலை. முதலியாருடைய இத்தகைய அருங்குண மாட்சியை அறிந்த தமிழ்நாட்டினர், 'இவன் கெட்டால் சடையன் உண்டு' என்று சொல்லித் தமக்கு அவர் என்றும் புகலாக வுள்ளவர் எனக் கூறி ஆறுதல் அடைவர். அப்படிப்பட்ட வள்ளல் வாழும் வளநகரைக்

கண்டவுடன் கம்பர் கரையிலா மகிழ்ச்சி அடைந்தார் என்பது மிகையன்றோ? கம்பர் கண்ணுக்குக் காவும் குளமும் நறிய தீங்கனிகளாலும் இனிய தெண்ணீராலும் வரவேற்பனபோலத் தோன்றின; பூக்கள் மலர்ந்து மதுர மிகுந்த தேனைப் பொழிதல் முக மலர்ச்சியுடன் இன்சொல்லாடுவது போலத் தோன்றியது. இவ்வியற்கை அழகை எல்லாம் உற்று நோக்கி உள்ளுவகை ததும்ப வருவார்க்கு எதிரே வாவி ஒன்று காணப்பட்டது. அதினினும் எருமை ஒன்று நெடு நேரங் கிடந்து, எழுந்து வருதலையும் அவர் கண்டார். அது தன் மடியிலே பால் சொரியச் சென்று கொண்டிருந்தது. அதன் வயிறு மோடிட்டிருந்தது. அது கன்றின்றியும் வேளையல்லா வேளையில் பால் சொரியக் காரணம் யாதென எண்ணினர்; கன்றை நினைந்த காரணத்தால் பால் சுரப்பு உண்டாயிற்றோ என்று நினைந்தார். அங்ஙனம் மாடுகள் கன்றை நினைத்தல் பெரும்பாலும் மாலைக்காலமே என அவர் நெஞ்சில் நினைவு பிறந்தது. இதுவோ பட்டப்பகற் பொழுதாதலின், அவ்வாறு கொள்வது பொருந்தாதென அவருக்குத் தோன்றிற்று. அதன் மேல் அவர் குளத்தருகே சென்றனர். அங்கே வரால், வாளை, குறவை, உளுவை முதலிய மீன்கள் மிகப் பெரியனவாய்க் கரையில் உலவுதலைக் கண்டார். அக்கம் பக்கத்திலே உள்ளவர்களை அக்குளத்திலே அவ்வாறு மீன்கள் நிறைந்திருத்தற்குக் காரணம் யாதென வினவினர். அவர்கள் அக் குளநீர் எப்பொழுதும் வற்றுவது இல்லையென்றும், அதிலும் மற்றக் குளங் குட்டைகளிலும் தூண்டில் போடுதல், வலை வீசுதல் முதலிய மறச் செயல்களை யாவரும் புரியலாகாதென்பது முதலியாரின் கட்டளை என்றும் தெரிவித்தனர். அஃது அவர் செவிக்கு இன்னமுதாய் இனித்தது. பிறகு அவர் முதலியார் வீட்டை எய்தினர். அப்பொழுது முதலியார் நண்பர் சிலருடன் உரையாடிக்

கொண்டிருந்தனர். கம்பர் அவரைக் கண்டதும் தாம் இன்னாரெனத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு அவரைப் பார்த்து வணக்கமாய்,

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் நன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராமன் ஊர்.

என்னும் அழகிய வெண்பாவைத் தாம் வழியில் பார்த்த காட்சியை அமைத்து, முதலியார் பெருமையையும் புலப் படுத்திச் சொற்சுவை பொருட்சுவை பொருந்தப் பாடினர். அச் செய்யுளைக் காதாரக் கேட்டுச் சடையப்ப வள்ளல் உடனே கம்பரைக் கட்டித் தழுவி முகமனுரை வழங்கித் தம் பக்கத்தே இருத்திக் கொண்டனர்.

புலவர் அனைவர்க்கும் புகலிடமாய் விளங்கிப் பெரும் புகழ் படைத்த சடையப்ப வள்ளல் கம்பருக்குப் பெருங் கல்வியைத் தர விரும்பித் தமிழ்ப் பாவலர்களையும் வடமொழி வாணர்களையும் அவருக்கு ஆசிரியராக அமைத்து, நாடோறும் அவர் கலை பயிலச் செய்தனர். அறுகு நுனியினும் நுண்ணியதாகிய மதியுடைய கம்பரும் பருகுவனன்ன ஆர்வத்துடன் மிக விரைவிலே தமிழிற் சிறந்த சங்கச் செய்யுட்களையும் தொல்காப்பியம், களவியல் முதலிய இலக்கணங்களையும், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பெருங் காப்பியங்களையுங் கற்றுத் துறைபோயினர். அன்றியும் வடமொழியிலே ஆதி கவியாகிய வால்மீகி முனிவர் அருளிச் செய்த இராமாயணத்தையும் வடமொழி வல்லார்வாய்க் கேட்டுணர்ந்தார். இராமாயணம் படிக்கும்போது அவருக்கு அதன் சொற்சுவை பொருட்சுவைகள் பேரின்பத்தைப் பயந்தன; அவர் மனம் அதன் அழகுக் கடலிலே முழுகித்

திளைத்திருந்தது. அதனைத் தமிழிலே செய்ய வேண்டுமென்னும் அவா மெல்லென முளைத்தெழுந்தது. இவ்வாறு கம்பர் இருக்குங் கால் தமது கல்விப் பெருக்கைக் காட்ட எண்ணி நாமகளைச் சிறப்பித்து முப்பது கட்டளைக் கலித்துறைப் பாடல்களைப் பாடினர். அந்நூற்கண்ணுள்ள காப்புச் செய்யுட்கள் இரண்டும் இரு முழு மணிகள்போல ஒளிர்கின்றன; அவற்றை இங்குத் தருவோம்:

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் னுள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலும் அநவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி?

கம்பருக்கு நாளுக்கு நாள் வளர்பிறைபோலப் புகழ் ஓங்கி வளர்வதாயிற்று. அவரிடம் காணியாட்சியும் மூவேந்தரும் ஒருங்கேபோற்றும் சிறப்பும் வாய்ந்த சடையப்ப முதலியார் வைத்திருந்த பேரன்பும் ஆன்ற மதிப்பும் அவருக்கிருந்த பெருமையினைப் பெரிதும் விளக்கிக் காட்டுவதாயிற்று. இத்தகைய செல்வச் செருக்கிலும் புகழ்ப் பெருக்கிலும் தோய்ந்து கிடக்கச் செய்த முதலியார்மீது ஓர் அரிய பிரபந்தம் இயற்றவேண்டுமென்பது கம்பர்வேணவா. அதனுல் அவர் சடையப்பர் 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக் காட்டாக உள்ளவர் ஆதலின், அவர் மனக்கோள் அறிய விழைந்து இதனை அவரிடம் குறிப்பிக்க, அவர் அதற்கிணங்காது மறுத்துவிட்டனர். அதன்மேல் கம்பர் அவர்மேல் பாடுதலைத் தவிர்ந்து, ஆனுல் அவர்தம் குலத்தினர்மேற் பாடுதற்கேனும் இசைய வேண்டுமென வருந்திக் கேட்ப, அதற்கும் முதலியார்

உடம்படாராயினர். அப்போது கலைவாணர் முகம் புல்லென்றது. அதுகண்ட முதலியார் உடனே ஒன்றை உட்கொண்டு அவருக்கு உவகை ஊட்ட விரும்பி, அவர் தம்மை நோக்கி, "கல்விக்கடலே, தாம் என் துன்புறுகிறீர்கள்; தங்கட்கு என் மீதேனும் என் குலத்தினர் மேலேனும் பாட வேண்டுமென விருப்பம் இருப்பின், எமது குலத்தாருக்கு உரிய உழவுத் தொழிலைச் சிறப்பித்துப் பாடுமின்; அதனால் உலகத்தாரும் மேழிச் செல்வத்தின் மேன்மை அறிந்து உய்வர்," என்றனர். உடனே கம்பர் களிதுளும்பி முதலியார் மதிநுட்பத்தையும் அருமையையும் எண்ணி யுருகித் தாம் அங்ஙனமே செய்வதாக அவர்பாற் கூறிச் சென்று, சின்னாட்களி லெல்லாம் 'ஏரெழுபது' என்னும் ஓர் அழகிய இனிய நூலைப் பாடி முடித்தனர். அதன்கண் வேளாண்மைக் குரிய எல்லாக் கருவிகளையும் சிறப்பிக்கும் முகத்தான், வேளாளர் உயர்வைப் பட்டோலை தீட்டினாற் போலப் பரக்கக் காட்டினர். அவற்றுள் அமைந்துள்ள கற்பனைத் திறன் கற்றோர் நெஞ்சைக் களிக்கடலில் என்றும் அமிழ்த்துவதாகும்; அந்நூலினுள்ள செய்யுட்கள் இரண்டைக் கீழ்க் காட்டுவோம்.

தொழுங்குலத்திற் பிறந்தாலென்? சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென்? அவர்க்குப்பின் வணிகரெனும்
செழுங்குலத்திற் பிறந்தாலென்? சிறப்புடையார் ஆனாலென்?
உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே.

அலகிலா மறைவிளங்கும் அந்தணர்ஆ குதிவிளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கும் மறைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே.

இந் நூலைக் கம்பர் அரங்கேற்றஞ் செய்ய நாளும் நாழிகையும் குறிப்பிடப்பட்டன; அவைக்களம் மிகவும் அழகாகப்

புனையப்பட்டது; சடையப்ப முதலியாரும் ஏனைய செல்வர்களும் பாவலர்களும் அவைக்களத்தே வந்து அமர்ந்தனர். அப்பொழுது புதுவைக்கண் இருந்த சேதிராயர் என்னும் வள்ளியோர் ஒருவரும் அரங்கேற்றத்திற்கு ஆண்டுப் போந்தனர். அவரை வரும் வழியிலே அரவம் தீண்டிற்று; அஃதறியாத அப்பெரியார் அவைக்களத்தைக் குறுகினர்; குறிகியதும் மயக்கம் தலைக்கேறுதலை உணர்ந்த அவர், தம்மைப் பாம்பு கடித்ததெனத் துணிந்தும், அதனை எடுத்தியம்பின் அரங்கேற்றம் தடைப்படும் என நினைந்து, தமது துன்பத்தைப் பொறுத்துக்கொண் டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் நஞ்சின் வேகத்தால் மயங்கிக் கீழே விழுந்தனர். அக்காலை அனைவரும் அவர்பால் அணுகித் திடுமென அவர் விழுந்தமைக்குக் காரணம் யாதென ஆராய்வாராயினர். அப்போது அவர் உடலின் மாட்டிருந்த குறிகளால் அவர் நஞ்சேறப் பட்டிருத்தலை உணர்ந்தோர் அதற்குப் பரிகாரஞ் செய்ய விரைந்து வருந்தினர். அவ்வளவிலே தெய்வப் புலவர் பின்வரும் வெண்பாக்களைப் பாடினர்:

ஆழியான் பள்ளி அணையே! அவன் கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே!— பூழியான்
பூணே! புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே! அகல நட.

மங்கை ஒரு பாகர் மார்பிலணி ஆரமே!
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே!—திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே!
ஏறிய பண்பே இறங்கு.

இவை பாடப்பட்டதும் சேதிராயர் விடந்தீர்ந்து, தூங்கி விழித்தவர்போல் எழுந்தனர். அவ்வற்புதங் கண்டார் எல்லோரும் கம்பர் கவி வன்மையினைப் பல்லாற்ராலும் புகழ்ந்தனர்.

இப்போது கம்பர் கடிமணம் புரிந்துகொண்டு, அம்பிகாபதி என்னும் ஒரு புதல்வனைப் பெற்றார். அம்பிகாபதி 'தந்தையறிவு' என்னும் உண்மைக் கிணங்கப் பேரறிவும் பெருங்குணமும் வாய்ந்திருந்தான். அவனுக்குக் கம்பர் செந்தமிழ்ப் புலமையைச் சிறிது சிறிதாகக் கொளுத்தி வந்தனர்.

கவிஞர் பெருமானும் சடையப்ப வள்ளலும் காவிரியாற்றுக்கு நீராடச் செல்லுகையில், ஒருநாள் அக்காவிரியை நோக்கி அவர் சடையர் விருந்து புறந்தரும் பெருந்தண் வாழ்க்கையைப் பாராட்டிப் பின்வரும் வெண்பாவைப் பாடினர் :

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே!—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் தன்புகழை
ஆர்போற்ற வல்லார் அறிந்து?

இப்பால் கம்பர் பெருமை தமிழ்நாடு முழுவதும் பரவிப் பரிமளித்தலைக் கேள்வியுற்ற சோழ மன்னன், அவரைத் தனது அவைக்கு வருவித்துப் பரிசில் பல ஈந்து பெருஞ் சிறப்புப் புரிந்தான். கம்பரும் சோழனுடைய வேத்தவைப் புலவர் யாவருக்கும் நாயகமாய் வீற்றிருந்து, அவ்வப்போது அருந்தமிழ்ப் பாக்களைத் தேனும் துவர்க்கத் திம்பாலும் புளிக்கச் செழுங்கனிச் சுவையுங் கைக்குமாறு பாடிவருவார். இவ்வா றிருக்குங்கால் ஒரு சமயம் காவிரியாறு பெருக்கெடுத்துக் கரைபுரண்டு பலவூர்களையும் அழிக்கத் தலைப்பட்டது. மக்கள் திரள் திரளாகக் கூடித் தங்கள் நிலை வருகணத்தே எவ்வாறுமோ என வெருவித் திருவருளை வழுத்தி நின்றனர். அப்போது சோழன் மனங் கலங்கி நின்றனன். அந்நிலையிலே நல்லிசைப் புலவரான கம்பர் காவிரிக் கரையிற் சென்று அதனை நோக்கி,

கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீர்
உரைகிடைக்க லாமோ உலகுடைய தாயே!
கரை கடக்க லாகாது காண்.

என்னும் வெண்கவியை இசைக்க அத்தமிழ் நயத்துக்குக் கட்டுப்பட்டதுபோலக் காவிரிப் பெருக்கு உடனே அடங்கிற்று. எல்லாரும் கம்பர் அரும்புலமையை வியந்தனர். சோழன் அவருக்கு வளநாடு ஒன்றை முற்றூட்டாக வழங்கினன். அந்நாடு அன்று முதல் கம்பநாடு என்று வழங்கலாயிற்று. கம்பர் அந்நாட்டின் விளைவையெல்லாம் வறியவர்க்கு வரையாது கொடுத்து வருவர். அவர் உள்ளம் ஏழைகள் வருந்துதலைக் காணச் சிறிதும் பொறாது. கல்வியறிவுடையார்க்குக் கனிவு இல்லையேல் அக்கல்வி அவர்க்குப் பயன்படுமாறு யாங்ஙனம்? அன்பு என்னும் திவ்யமணம் வீசுதல் இல்லாத உள்ளமலர் பூத்தென் பூவாதொழியின் என்?

அக்காலத்திலே சோழன் அவையிலே வாணியனாகிய தாதன் என்னும் ஒரு புலவன் இருந்தான். அவன் சிறிது புலமை பெற்றவனே அன்றிப் பெரும் புலமை வாய்ந்தவன் அல்லன்; பாவன்மையும் ஒரு சிறிது வாய்ந்தவன்; அவன் கம்பர்மீது மிக்க அழுக்காறு உடையான்; அவரை எப்பொழுதும் யாவர்மாட்டும் பழித்துரைத்தலையே ஒழுக்கமாகக் கொண்டவன். ஆனால், அவன் சோழனைப் பல்காலும் புகழ்ந்துரைத்துக் கொண்டும், அவனுக்கு அடிமையைப்போல ஒழுகியும் நகை மொழிகள் பேசிக்கொண்டும், அவனைத் தன் வயமாக்கிக்கொள்ள விழைந்தான். அரையனும் அவன் செய்கைக்கு இரங்கிக் கம்பரைப் போலவே அவனுக்கும் தொண்டை நாட்டிலுள்ள கூவம் என்னும் ஊரையும், காளம் முதலிய விருதுகளையும் கொடுத்து

வரிசைப்படுத்தினுன். அவ்வாறு தாதன் தான், கல்வியிற் பெரிய கம்பருக்கு ஒப்பாக மதிக்கப்பட்டதும், தலை தெரியாது துள்ளி யழிவானுன். அதனுல் அவன் ஒருநாள் அரசவையிலே சோழனை நோக்கிக் கம்பர் பாடிய மும்மணிக்கோவையின் முதற் சீர் பிழையென அஞ்சாது பின்வரும் பாட்டால் வசை பாடினுன்.

'கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழை; முனை வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திக் கனமணி பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கன்பிதுங் கப்பதம் போர்த்த செயதுங்கனே !'

உடனே கம்பர் அவனுக்கு அத்துணைச் செருக்கெழுந்தமைக்குக் காரணம் மன்னவன் புலவர் அனைவரையும் வரிசையால் நோக்குதலை விட்டுப் பொதுநோக்கு நோக்குதலும், இச்சை மொழிகளில் இச்சை வைத்தலுமே என்று உள்ளி வருந்தி, அத்தகைய செயலை அரையன் புரிதல் குலக்கவிகளுக்குக் குறை செய்தலாமென அவனுக்கு உணர்த்தியும், தாதன் சிறு மனம் உடையவன் ஆதலின் தனக்கு எய்திய சிறப்பால் அடங்காது இறுமாந்து, மீச்செல்லுதல் இயல்பே என்பது தோன்றவும் கீழ்வரும் கவியாப்பை அறைந்தனர்:

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பான்நங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படும்மன்னர் காதலிமார்
வேளம் பிடிக்கக்கன் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்களம்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே. [பேய்

அப்பொழுது சோழன் கம்பரைக் கையமர்த்தத் தாதனைக் கடைக்கணித்து மேல் விளைவைத் தகைந்தனன்.

இப்பால் கம்பர் வீட்டில் ஒரு நன்மை நிகழ்ந்தது. அஞ்ஞான்று சோழர்பெருமானும் தம் ஐம்பெருங்குழுவும் என் பேராயமும் புடைசூழ வந்திருந்தான்; குறுவில மன்

னரும் பட்டவர்த்தனர் பலரும் ஏனையோரும் சூழுமி யிருந்தனர். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியா ரும் வந்தனர். முன்னரே எல்லாரும் வந்து அமர்ந்து விட்டபடியால் கூடத்திற் சிறிதும் இடமில்லை. அதனால் முதலியார் சாலகத்தின் மருங்கே அமர்ந்தனர். அதுகண்ட சோழன் முதலியோர் அவரை நோக்கி, "இங்கே வாருங் கள்; இங்கே வாருங்கள்," என அழைத்தனர்; அவ்வேளை கம்பர் புன்னகையுடன், "அவரை வைக்கவேண்டிய இடத் தில் வைப்பேன்," என்றனர். அனைவரும் சிறுநகை செய் தனர்.

கம்பருக்கு இராமாயணம் பாடவேண்டும் என்னும் எண்ணமும் முறுகி வளர்வதாயிற்று. ஒவ்வொருநாளும் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். சோழனும் சடையப்ப வள்ளலாரும் அவரைக்கொண்டு ஒரு பாரகா வியம் பாடுவித்து உலகை உய்விக்கவேண்டுமெனக் கூறிக் கொண்டே வந்தனர். இப்போது கம்பருக்கு இராமா யணம் பாடத் தொடங்க வேண்டுமெனத் தோன்றிற்று. அதன் பொருட்டு அவர் தொண்டை நாட்டை நோக்கிப் புறப்பட்டார். தொண்டைநாடு ஆதொண்டைச் சக்கர வர்த்தியால் அரசாளப்பட்டுவந்தமையான், அவனால் அவர் எதிர்கொண்டு வரவேற்கப்பட்டார். அப்பொழுது அவ னைப் புகழ்ந்து பின்வரும் பாடலை இயம்பினார்.

வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந்தாங்குந் தொண்டை அரசு.

பின்பு அவர் மாவண்டூர் என்னும் ஊரிலே சிலநாள் வைகிய போது. அங்கிருந்த சிங்கன் என்னும் இருப்புக் கொல்லன் அவருக்குப் புது எழுத்தாணிகள் சில செய்து

தா ,அவற்றைப் பெற்றுக்கொண்டு அவன் வேலைத் திறத்தைப் புகழ்ந்து,

> ஆழியான் ஆழி அயன்எழுத் தாணிஎன்பார்
> கோழியான் குன்றெறியும் வேலென்பான்—பூழியான்
> அங்கை மழுவென்பான் அருள்பெரிய மாவண்டூர்ச்
> சிங்கன் உலைக்களத்திற் சென்று.

என ஒரு தூக்கு இசைத்தனர். அங்கு ஒரு நாள் அவர் கழனிகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு செல்கையில், ஓரிடத்தில் பண்ணையாட்கள் ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் பாட்டுப் பாடிக்கொண் டிருந்தனர். அப்போது அவர்கள் 'மூங்கி லிலைமேலே' என்று சொல்லி ஏற்றத்தை நிறுத்திவிட்டு உண்ணச் சென்றனர். கம்பர் இதனைக் கேட்டு மூங்கிலிலைமேலே என்று தொடங்கிய பாட்டை முடிக்க விரும்பினர். அவர் கருத்து அகன்று ஓடுகின்றதேயன்றி ஏற்றப்பாட்டுக்கு ஏற்ற பாட்டாக அமையவில்லை. பின் அவர் அவர்கள் வாயினலேயே அதனை முற்றக் கேட்கவேண்டி, அங்குச் சிறிது நேரம் காத்துக்கொண்டிருந்தனர். பண்ணையாட்கள் திரும்பி வந்து ஏற்றக்கோலைப் பிடித்தனர். அப்போது ஒருவன் முன்விட்ட அடியைத் தொட்டுக்கொண்டு 'மூங்கிலிலை மேலே தூங்கும் பனிநீரே' என்று முடித்தான். அவ்வழகிய அடியைக் கேட்ட கவியரசுக்கு இன்பவெள்ளம் பாய்ந்தது; அதனல் அவர் "ஆ! ஆ!! ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை," என்று வாய்விட்டுரைத்தனர்.

பிறகு புலவர் பெருந்தகை கூவத்தின் வழிச் செல்கையில் அவ்வூரார் அவரை இன்னரென அறிந்து, அவர்பால் பாடல் பெற விழைந்து, அவரை அணுகி வணங்கினர். அதற்குக் கம்பர், "நீர் வாழுமூர் தாதனுக்கு அடிமைப் பட்டதாதலின் நாம் கவி சொல்லோம்," என மறுத்தனர்.

அவ்வூரினர் அம்மட்டோடு அவரை விட்டு நீங்காமல் அவர் சிவிகையைச் சுமந்து கொண்டும், அவருக்கு அடைப்பை யிட்டும் நெடுவழி சென்றனர். அப்பால் தமிழ் வாணருக்கு மனங் கரைந்து, அவர்மேல் பல செய்யுட்களைப் பாடினர் பிறகு கவிஞர் திருவெண்காட்டடிகள் என்னும் பட்டினத் தார் சிவலிங்கத் திருக்கோலம் கொண்ட திருவொற்றியூர் என்னுந் திருப்பதியை அடைந்தார். அப்பதி அவருக்கு அமைதியை அளித்தது. அதனால் அவர் ஆங்குப் பலநாள் தங்கியிருந்தார். அவ்வூரிலே சதுரானன் பண்டிதன் என் பானுடைய மடம் ஒன்றிருந்தது. அம்மடத்தின்கண் வல்லி எனப் பெயரிய கணிகைமாது ஒருத்தி இன்பவல்லிபோல இருந்தனள். அவள் கல்விச் செல்வமும் அறிவு நுட்பமும் உள்ளவள்; எவரையும் வசீகரிக்கும் எழிலும், சொற்சுவை படப் பேசும் வன்மையும் வாய்ந்தவள். அவளைப் பார்த்த தும் கம்பருக்கு அவள்மீது காதல் உண்டாயிற்று. அக் காதல் வளர்ந்துகொண்டே வர, ஒரு நாள் கம்பர் அவள் பேரழகைப் பெரிதும் வியந்து,

> இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்
> பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக்
> கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
> நில்லென்று போனார்என் நெஞ்சைவிட்டுப் போகாரே.

> நடக்கில் அன்னமாம் நிற்கில் வஞ்சியாம்
> கிடக்கில் ஓவியப் பாவை கிடந்ததாம்
> தடக்கை யான்சது ரானன் பண்டிதன்
> மடத்து ளாள்என் மனத்துறை வல்லியே.

என்று பாடி ஒருவரிடம் அவளுக்குக் கொடுத்தனுப்பினார். அவளோ கம்பர் பெரும் புலமையைக் கேள்வியுற்றவளாத லின் அவர்மேல் தானும் காதல் கூர்ந்து அவரை எதிர் பார்த்த வண்ணம் இருந்தனள். அதனால் அவள் கம்பரை

வரவேற்று மகிழ்ந்தனள். கம்பரோ அவளிடம் ஆராக் காதல் அமையப் பெற்றவராய் அவளை விட்டுப் பிரியமனமின்றி அவ்வூரிலேயே பன்னெடு நாட்கள் தங்கி யிருந்தனர். அப்பொழுதுதான் அவர் இராமாயணம் பாடத் தொடங்கி ஒவ்வொரு நாளும் பாடிக் கொண்டே வந்தனர். வல்லி அவருக்கு வேண்டிய உபசாரங்களும் பணிவிடைகளும் செய்து, அவர் உள்ளத்தை உவப்பித்து வந்தாள். கம்பர் வல்லிக்கு எருமை வாங்கிவரும் பொருட்டுப் புறக்கோட்டம் புக்குக் காளிம்பன் எனப் பெயரிய விரை மேய்ப்பான் ஒருவனைக் கண்டு,

புக்கு விடைதழுவிக் கோடுழுத புண்ணெல்லாம்
திக்கிலுயர் காளிம்பன் தென்புழல்மான்—அக்கணமே
தோள்வேத கொண்டிலனேற் சுந்தரப்பொற் றோன்றலுக்கு
வாழ்வேது கண்டிலமே மற்று.

என்றொரு வெண்பாவைப் பாட, அவன் பல ஈன்ற எருமைகள் கொடுக்கப் பெற்று வல்லி வீட்டில் உய்த்துக் கழிமகிழ் வெய்தினர். பின்னர் அவளுக்குப் பல அணிகள் செய்ய விரும்பித் திருமயிலை என்னுந் திருநகரைச் சேர்ந்து ஆங்கிருந்த செல்வத்திற் சிறந்தவனும் கல்வி அருமை உணர்ந்தவனுமாகிய திருவாலி என்னும் பொற்கொல்லனைப் பார்த்து,

அன்னல் திருவாலி அணிமயிலை அத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே—கண்ணும்
நடந்துப்பு விற்பாணந் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பாள் நகை.

என்றொரு இனிய பாவை இசைக்க, அவன் நாவலர் விழைந்த அணிகள் எல்லாவற்றையும் செய்து தர, அவற்றால் தம் காதலஞ் செல்வியைப் புனைவித்து அவள் அழகை நோக்கி நோக்கி இன்புற்றிருந்தனர்.

கம்பர் இராமாயணம் பாடி வருங்கால், மாணவர் எழுதிக்கொண்டு வந்தனர். அப்போது தமிழ்ச்சுவை அளாவிய காளிதேவி தீப்பந்தம் பிடித்து நின்றனள். அதுகண்ட கம்பர், தேவியை நோக்கி,

ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே !
வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.

என்ருெரு செய்யுள் செப்பினர்.

பின் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலைப் பார்க்க விழைந்த செந்தமிழ்ச் செல்வர் வல்லியைவிட்டுப் பிரிய மனமின்மையால், அவளையும் உடனழைத்துக் கொண்டு வெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தனர். ஆங்கு அவளை ஒரு கூரை வீட்டிலே இருத்தியதைச் சடையப்ப முதலியார் கேட்டு, அன்றிரவே, மழை வந்தால் நனையுமெனக் கருதி யாவரும் அறியாவண்ணம் நெற்கதிராலே அதற்குக் கூரை வேய்ந்தனர். மறுநாள் யாவரும், நிகழ்ந்த வண்ணம் அறியாது விம்மிதமுற்றனர். கம்பரோ இங்ஙனம் புரிந்தவர் சடையப்ப வள்ளலாரே எனத் துணிந்து, பின் வரும் அரும்பாவை அறைந்தனர் :

பொதுமாதர் வீட்டைப் புகழ்பெறவே செந்நெற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணெய் நாடன் வருநா வலர்க்குத்
தருவான் அவன் சடையன் தான்.

பின்னர் வெண்ணெய் நல்லூரிலேயே இராமாயணத்தைப் பாடி முடித்தனர்.

பின்பு கம்பர் இராமாயணத்தை இராமாவதாரம் என்னும் பெயரிட்டுப் பத்தாயிரத்துச் சில்லறைப் பாடல்களால்

பாடி முடித்தனர். இவ்வரிய நூலைத் திருவரங்கத் திரு நகரிலே அரங்கேற்றுதற்கு எண்ணிக் கம்பர் ஆங்குச் சென்றனர். அப்போது வைணவ ஆசாரியராக அங்கே எழுந்தருளி யிருந்த ஒருவரிடம் கம்பர் தம் கருத்தை வெளியிட, அவரும் அந்நூலைப் பிரித்துச் சில இடங்களைத் தாமே படித்துப் பார்த்ததும், சில இடங்களைக் கம்பரைச் சொல்லும்படி கேட்டும், பேருவகை அடைந்து, இராமாயண அரங்கேற்றத்தின் பொருட்டு இராமபிரான் திருமணம் புரிந்த பங்குனி உத்தர நாளைக் குறிப்பிட்டு அதற்கு வேண்டியவற்றை எல்லாம் சித்தம் செய்தனர். அந்நாளில் கம்பர் நூலை அரங்கேற்றம் செய்யத் தொடங்குகையில் திருவரங்கச் செல்வன் அருச்சகன் முகத்தால் ஆவிர்ப்பவித்து, "கம்பா, நீ நம் சடகோபனைப் பாடினையோ?" எனக் கேட்டார். அதனைச் செவிமடுத்ததும், கம்பர் இறைவன் திருவுளம் அறிந்து சடகோபரந்தாதி என நூறு கட்டளைக் கலித்துறையாலாகிய தேனினும் சுவை விஞ்சிய ஒரு நூலைப் பாடினர். அதனுள் இங்கே இரண்டு செய்யுட்கள் காட்டப்படும்.

பண்ணுந் தமிழுந் தவஞ்செய் தனபழ நான்மறையும்
மண்ணும் விசும்புந் தவஞ்செய் தனமகிழ் மாறன் செய்யுள்
என்னுந் தகைமைக் குரியமெய் யோகியர் ஞானமென்னுங்
கண்ணும் மனமுஞ் செய்யுந் தவஞ்செய்த காலத்திலே.

பாவைத் திருவாய் மொழிபழத் தைப்பசுங் கற்பகத்தின்
பூவைப் பொருகடற் போதா அமுதைப் பொருள்சுரக்குங்
கோவைப் பணித்தவெங் கோவையல் லாலென்னைக் [குற்றங்கண்டென்
நாவைப் பரிப்பினும் நல்லோர்அன் றேமற்றை நாவலரே?

இந்நூலைப் பாடியவுடன் ஆண்டிருந்த வைணவப் புலவர்களனைவரும் கம்பரைப் பெரிதும் போற்றிப் பாராட்டி

னர். அதன்பின் கம்பர் தமதரிய நூலை அரங்கேற்றினர். அவ்வாறு செய்துவருங்கால், அவ்வவைக் களத்திலே இருந்த பெரியோர்கள் சிற்சில தடைகளை நிகழ்த்த, அருந் தமிழ்ச் செல்வர் அவைகளுக்கெல்லாம் தக்க விடை இறுத் தனர்.

கம்பர் இரணிய வதைப் படலத்தின்கண் வரும்

நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி
இசைதிறந் தமர்ந்த கையால் எற்றினன்; எற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்.

என்னுஞ் செய்யுளை உணர்ச்சியுடன் படித்தபொழுது அப் பெரிய கோயிலின்கண் எழுந்தருளியுள்ள மேட்டழகிய சிங்கர், ஆங்கிருந்த மக்கள் யாவரும் குலை நடுங்கக் கலகல வென்று ஆர்ப்பரித்துப் பெருநகை செய்தார். அது கண் டார், "ஆ! ஆ! இக்காவியத்தின் பெருமை என்னே! இஃதோர் அபூர்வ சிந்தாமணியே; இஃதெம் பெருமான் எழுந்தருளியுள்ள முழு மணிப் பெட்டகமே; இறைவன் சாந்நித்தியமாய் இலங்கும் எழிற்பெருங் கோயிலே," எனக் கொண்டாடி வியப்பும் நயப்பும் எய்தினர். இங்ஙனம் பல அரிய செய்யுட்களைக் கவிஞர் பெருந்தகை, தமது பெரும்புலமை தோன்ற விரித்து, அவற்றின் கண்ணுள்ள நயங்களையும் திட்ப நுட்ப ஒட்பங்களையும் இனிது விளக்கி அவைக்களத்தாருக் கெல்லாம் ஆரமுதம் ஊட்ட அனைவரும் உவகைக் கண்ணீர் சொரிந்து, உள்ள மும் முகமும் மலர்ந்து, மெய்ம்மயிர் சிறுத்தி நின்றனர்.

இறுதியாக நல்லிசை வாய்ந்த நாவலராகிய கம்பர் இராமாயணத்திலே அபிஷேக ரத்தினம்போல ஒளிரும்

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைபி டிக்க இருவருங் கவரி வீச

விரைசெறி குழலி ஓங்கும் வெண்ணெய்மன் சடையன்
[தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான்
[மௌலி.

என்னும் பட்டாபிடேகச் செய்யுளுக்குப் பொருள் கூறி முடித்ததும், அவைக்களம் முழுவதும் கம்பர்மீது மலர்மாரி சொரிந்து; அந்தணர் சேடை அரிசி தூவிப் பல்லாண்டு வழங்கினர்; செல்வர் அனைவரும் பொன்மாரி பொழிந்தனர். அப்பொழுது அங்கு வீற்றிருந்த வைணவாசாரியர் அவையி லுள்ளாரை நோக்கி, "பெரியீர்! இத்தகைய திவ்விய நூலை உலகத்துக்களித்துத் தமிழகத்தின் பெருமையினை எழுதா வெழுத்திலே நிலைநிறுத்திய கம்பருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்னும் பட்டாபிதானத்தை நீங்கள் யாவரும் ஒருப்படுவீர் களானல், நான்தருவதற்கு விழைகின்றேன்; உங்கள் உடன் பாட்டைத் தெரிவிக்க வேண்டும்," என்றுகூறி நிறுத்தினர். உடனே எல்லோரும் கைகொட்டி, மகிழ்ச்சி ஆரவாரங் காட்டினர்கள். அதன்மேல் அப்பெரியார் அரங்கநாதன் திருமேனியிற் சாத்தியிருந்த பூந்தொடையைக் கழற்றி வந்து, கவிச் சக்கரவர்த்திக்குச் சாத்திக் கண்ணும் மனமுங் குளிர்ந்தனர். பின்னர் அவர் கவிச்சக்கரவர்த்தியை நோக்கி, "கவிச்சக்கரவர்த்தியே! தங்கள் பாவின் சுவையால் எல் லாரையும் அடிமையாக்கிக் கொண்டீர்; தங்கள் கீர்த்தி உலகமெங்கும் ஓங்கிப் பரவும்; ஆனல் எனக்கு ஒரு விருப் பம் உண்டு. அது தங்கட்கும் பிறருக்கும் எவ்வாறு படுமோ என்று அஞ்சுகின்றேன்; சடையப்பவள்ளலார் பெருமை- தெரியாத மூடக்கரும் இல்லை; அவர் பெயர் இராமாயண மாகிய அரிய பெரிய நூலின்கண் பலவிடத்தும் வருதற் கும் அவர் தகுதிவாய்ந்தவரே என்பது யாரும் ஒப்புக் கொள்ளற்பாலதே; எனினும் நாஸ்துதி என்ற வகையில் பார்க்கும்போது, அவர் பெயர் நூற்றுக்கு ஒரு பாடலாகப்

பெய்துரைக்கப் பட்டிருத்தல், இராமாயணத்தின் தெய்வ நலத்தைச் சிறிது குறைக்கும் என என் புல்லறிவிற்குப் புலப்படுகிறது. அதனால் ஆயிரத்துக்கு ஒரு பாடல் அவர் மேல் இருப்பது நலம் எனத் தோன்றுகிறது,'' என்றனர். இறுதி வாக்கியத்தை அவர் கூறி வாய் மூடுமுன் கம்பர், "ஆ! கெட்டேன்! நான் சிறியேன் ஆதலின் அதற்கேற்பச் சடையப்பரை நூற்றுக் கொருவரென மதித்தேன்; தாங்கள் அவரைப் போன்ற பெரியோர் ஆதலின் 'பாம்பு அறியும் பாம்பின்கால்' என்றபடி அவர் மெய்க்கீர்த்தியை உள்ளவாறு அறிந்து அவரை ஆயிரத்துக் கொருவராகத் தெரிந்தீர்கள்; அங்ஙனமே செய்வேன்,'' என மகிழ்ந்து மொழிந்தனர். அப்போது ஆங்குக் குழுமியிருந்தார் யாவரும் கவிச்சக்கரவர்த்தியார் திறமையைப் பெரிதும் புகழ்ந்து உவகை கூர்ந்தனர்.

பின் கம்பர் அங்கே சின்னாட்டங்கித் திருவரங்கத் திருநகரை விட்டுப் பிரிந்து வெண்ணெய் நல்லூருக்குச் சென்று அங்குச் சடையப்ப முதலியாருக்கு இராமாயணச் செய்யுட்களை அவ்வப்போது எடுத்துக் கூறி, அவற்றின் சுவையாகிய தெள்ளமுதை அவர்தம் இரு செவியும் நிறையப் பெய்து, உவகை ஊட்டிச் சோழன் அவைக்களம் அடைந்தார். அங்கே சோழன் வேண்டுகோளுக் கிணங்கி, அவன் அவைக்களத்திலே மற்றொரு முறை இராமாயணத்தை அரங்கேற்றினர். முடிவில் வேந்தர் வேந்தன் அவருக்குப் பல்லக்கு, சின்னம், காளம் முதலிய விருதுகளையும் பரிசுகளையும் பல சிறந்த பட்டங்களையும் தந்து, கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டத்தையும் ஏற்றுக்கொண்டான். அன்றியும் அவர் செல்லும் வழியில் உள்ள சோலை, சாலை சத்திரம், கழனி, கொல்லை முதலிய எல்லாவற்றையும் தாம் உரிமையுடன் நுகர்ந்து கொள்ளலாமென்றும், அதனால் ஏற்படும் பொருட்குறைவு அரசாங்கத்தாரால் ஈடுசெய்து

கொடுக்கப்படும் என்றும் ஒரு கட்டளையைத் தன் நாடு முழுவதும் பிறப்பித்திருந்தான். இதன்படி கம்பர் வாழ்நாள் முழுதும், 'கம்பன் போன வழி கண்டு கழித்தது இவ்வளவு' என்று குடிகளுக்குத் தள்ளிக் கொடுக்கப்பட்டு வந்தது.

கம்பர் கருணை நிறைந்த உள்ளத்தினர்; அவர் ஏழைகளிடம் பேரிரக்கங்கொண்டு என்றும் காப்பவர். ஓர் ஏழைக் குடியானவன் அல்லும் பகலும் பாடுபட்டும் தன் மனைவி மக்களுடன் வயிறார உண்பதற்கும் வழியின்றி, வருந்திக் காலங் கழித்து வந்தான். அவன் மனைவியோ, சிறிது அறிவுடையவள். அவள் ஒரு நாள் தன் கணவனை நோக்கி, "எல்லோரும் சோழ மன்னனைப் பாடி அளவிறந்த பொருள் பரிசளிக்கப் பெறுகிறார்களே; தாங்களும் ஏதாவது ஒரு பாட்டு அரசன்மேல் பாடிக்கொண்டுபோய்க் காட்டிப் பரிசு பெற்றால் நாமும் இன்பமாக வாழலாமே," என்றாள். அது கேட்ட அவன், "ஐயோ! எனக்குப் பாட்டுப்பாட வாராதே. நான் படித்த காலத்தில் ஏட்டைப் பிரித்து வைத்துவிட்டு ஓட்டைப் பார்த்துக்கொண்டிருப்பேனே. உபாத்தியாயர் எவ்வளவோ முறை கோதண்டம் போட்டும், உப்பிலாக் கூழை ஓட்டில் வார்த்துக் கொடுத்தும் பார்த்தார். அவரால் ஒன்றும் சாயவில்லை," என்று சொல்லிக் கலுக்கென்று சிரித்தான். அவன் அறியாமையைக் கண்ட அவன் மனைவி, "அதுபோகட்டும். இப்பொழுது தாங்கள் யாதேனும் ஒரு பாட்டைப் பாடி அரசனைக்காணுங்கள்," என்று வற்புறுத்தினாள். அதன்மேல் தான் அங்ஙனமே செய்வதாக அவளிடம் அவன் ஒப்புக்கொண்டு வெளிச் சென்றான்; சென்று வீதி வீதியாய்த் திரிந்து வருகையில் ஓரிடத்தில் சிறுமகார் சிலர் மரப்பாவைகளை வைத்துக்கொண்டு 'மண்ணுண்ணி மாப் பிள்ளையே' என்று சொல்லி வண்டல் அயர்ந்தனர். அதைக் கேட்டவன் அஃதோர் பாடல் எனக்கொண்டு அதனை எழுதிக்கொண்டான். பின் சிறிது தூரம் சென்றதும் காகம்

ஒன்று கா-கா எனக் கரைவதைக் கேட்டு அதுவும் பாடலே என்று கருதிக் 'காவிறையே' என்றெழுதிக் கொண்டான்; மீண்டும் அவன் சிறிது செல்ல ஒரு குயில் தேமாவின் கிளையிலே இருந்து, கூ-கூ எனக் கூவியது கேட்டுக் 'கூவி றையே' என வரைந்து கொண்டான்; மேலுஞ் செல்லக் கோயிற் பெருச்சாளி ஒன்று ஓடப்பார்த்தான். பார்த்த அள வில் 'உங்களப்பன் கோவிற் பெருச்சாளி' என்றோர் அடி யையும் கூட்டினான். பின்னர் பாட்டுப் பாடியாயிற்று என் னும் களிப்புடனே மீள்கின்றவன், எதிரே நண்பன் ஒரு வன் போதரக் கண்டு, அவனிடம், "இப்பாட்டைப் பார்; நான் கட்டினேன்," என்று நகைமுகங் காட்டி அவனிடம் தனது குழறு பாட்டைக் குரலெடுத்துத் தலையசைத்துக் கைந்நீட்டிக் கூறலும், அவன், "அடா! ஏதப்பா, 'கன்னா பின்னா மன்னா தென்னா' என்று கவி செய்துவிட்டாயே," எனஅதனையும் தனது பழம்பாட்டோடு சேர்த்துக்கொண்டு ஓட்டமாகத் தன் வீட்டுக்கு வந்து மனையாட்டியை விளித்து "அடி, நான் பாடிய பாட்டைக் கேள்," என்று படித்தான். அவள், "எல்லாம் சரி; ஆனால் அரசன் பெயர் இதில் இல்லையே," என்று சொல்ல, அவன், "ஆனால் அரசன்பெயர் என்ன? சொல்," என்று அவனை வினவ, அவள் உடனே 'மன்னவன் பெயர் சோழங்கப் பெருமான்' என்றுரைத்த னள். உடனே அவன், "நல்லது, நல்லது; பாட்டு முடிந் தது," என்று மொழிந்து அத்தொடரை இறுதியில் அமைத்துவிட்டான். பிறகு அவ்வேழை அப்பாடலை வேறோர் ஏட்டில் நன்றாக வரைந்து கொண்டு, அதற்கு மஞ்சட் காப்பிட்டு, தூயநீராடி, வெள்ளாடை அணிந்து வெண்ணீறு குழைத்துப் பதினோரிடங்களில் வைத்துக் கொண்டு, குடுமியிலே பூவைச் சூட்டிக்கொண்டு அர சவைக்கு இரைக்க இரைக்கச் சென்றான். ஆங்கு வாயில் காப்போர், 'நீ யார்?' என அவனை அச்சுறுத்திக் கேட்ப,

அவன், "ஐயா, நான் ஒரு கவிராயன்; அரசன்மேல் பாடி வந்திருக்கிறேன்; அவரைக் காணவேண்டும்," என்றான். அவர்கள், "அப்படியானால் போங்கள்," என்று வாயில் விட்டனர். அவனுஞ் சென்று நோக்குமளவில் புலவர் பெருமக்கள் பலரும் நிறைந்திருந்தனர். அவர்களுள் நடு நாயகமாய்க் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வீற்றிருந்தார். மன்னவர் பெருமானாகிய குலோத்துங்க சோழன், மணிக் கால் அமளிமிசை விண்ணவர் பெருமானாகிய இந்திரன் போலத் திருவொடு பொலிய வீற்றிருந்தான். இவ்வளவை யும் ஒரு பொருட்படுத்தாமல் தான் பாட்டுப் பாடிய மகிழ்ச்சியால் தலைதெரியாமல் கேட்பாரின்றி வேந்தனை நோக்கித் தலை வணங்கி, "எம்பெருமானே, நான் தேவரீர் மீது ஒரு பாட்டுப் பாடி வந்தேன்; இவ்வேழை பாட்டைக் கேட்டு மகிழ வேண்டும்." என்று விளம்பி,

'மண்ணுண்ணி மாப்பிளையே!
காவிறையே! கூவிறையே!
உங்கள் அப்பன் கோவிற் பெருச்சாளி
கன்று பின்று மன்று தென்று
சோழங்கப் பெருமானே!'

என்று பெருங்குரல் விட்டுக் கூறி முடித்தான். இதனைக் கேட்டோர் எல்லோரும் கொல்லென்று பெருநகை செய் தனர். அப்பொழுது கம்பர் சிந்திப்பார்: "அந்தோ! பாவம்! இவன் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுப் புலவர் மன்னர்பால் பாடல் செய்து பரிசில் பெறுதலைக் கேள்வி யுற்று வந்தவன்; பொருளிலேயன்றி அறிவிலும் ஏழை இவனே. இவன் பேதைமையை எண்ணுந்தோறும் என் உள்ளம் நெக்குவிட்டு உருகுகின்றது; இவன் விருப்பத்தை எங்ஙனமேனும் நிறைவேற்றல் வேண்டும்." இங்ஙனம் எண்ணிய புண்ணியப் புலவர் சிரித்த புலவரை நோக்கி, "புலவீர், கண்ணும் முகமுங் கறுத்துத் தலைகாய்ந்திருந்

தால், ஒருவர் பாட்டை இகழலாமா? அப்பாட்டிலே அமைந்த பொருளைக் கண்டன்றோ நாம் அதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்; 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது பெருநாவலர் ஒரு வாக்கன்றோ?'' என்றனர். அதனைப் புலவரும் பிறரும் கேட்டு மீண்டும் விலா விறச் சிரித்துக் கம்பரைப் பார்த்து, "கல்வியிற் பெரிய நீரே அவ்வரிய செய்யுட்கு உரை காண்மின்,'' என்றனர். அப்பொழுதே கவிஞர் பெருந்தகை, இதுதான் தக்க வாய்ப்பு எனவெண்ணி, "புலவீர், இன்னே இச்செய்யுட்கு எனக்குத் தெரிந்தவரை உரைவிரிப்பேன்; அதனை நீவிர் எல்லீரும் பொறுமையுடன் கேட்டல் வேண்டும்,'' என்று பகர்ந்து பின் வருமாறு சாதிப்பாராயினர்.

"இப்பாட்டு இடையிடையே சீர் குறைந்து இயல்வதால் இணைக் குறள் ஆசிரியப்பா ஆகும். இதன் பொருள் மண்-பூமியை, உண்ணி-உண்டவனே, மா-திருமகளுக்கு, பிள்ளையே-புதல்வனே, கா-கற்பகச் சோலைக்கு, இறையே-தலைவனே, கூ-பூமிக்கு, இறையே-அரசனே, உங்கள் அப்பன்-உமக்குத் தந்தை, கோன்-அரசன், வில்-விற்போரிலே, பெருசு-பெரிதாகிய, ஆளி-சிங்கத்தை ஒப்பாய், கன்னு-கொடையினால் கன்னனை நிகர்ப்பாய், பின்னு-பொறைக்கு அவனுக்குப் பின் பிறந்த தர்மபுத்திரனை நேர்வாய், மன்னு-என்றும் நிலைபெறுபவனே, தென்னு-தமிழ் வளர்ச்சியிலே பாண்டியனை ஒப்பாய், சோழங்கம்-சோணாடாகிய அங்கத்தையுடைய, பெருமானே-பெருமை யுடையவனே என்பதாம்.

"இதன்கண் திருவுடை மன்னர் திருமாலின் அமிசம் பெற்றவராதலின் 'மண்ணுண்ணி' என்றும், அழகில் மன்மதனை ஒத்தவன் என்பதும், செல்வத்திலே 'லக்ஷ்மீபுத்

ரன்' ஆதல் இயற்கை யென்பதும் தோன்றுமாறு 'மாப் பிளேயே' என்றும், போகத்தில் இந்திரனை நிகர்த்தவன் என்பது விளங்கக் 'காவிறையே' என்றும், பூமிக்கு இறை வன் என்பது புலப்படக் 'கூவிறையே' என்றும், நீ வழி வழி வந்த அரச பாரம்பரியம் உடையவன் என்பது பற்றி, 'உங்கள் அப்பன் கோ,' என்றும், விற்போரில் புறங் கொடாத ஆண்மை வாய்ந்த சிங்கத்தை ஒப்பாய் என்பார் 'விற்பெருச்சாளி' என்றும், கொடையால் கன்னனையும் பொறையால் தருமனையும் ஒப்பாய் என்பார் 'கன்னு பின்னு மன்னு' என்றும், தமிழ் வளர்ச்சி செய்தலால் பாண்டியனை ஒப்பாய் என்பார் 'தென்னு' என்றும், சோழநாட்டை அங்கமாகக் கொண்டது உனது நாடு என்பது குறிக்கச் 'சோழங்கப் பெருமானே,' என்றுங் கூறினர். இனி இது மண் என்னும் மங்கல மொழியை முதற்கொண்டு, பல அணிகளும் தொனியும் கொண்டிருப்பது பாராட்டத்தக் கது," என்று கூறிச் சமர்த்தித்தார். இவ்வரிய உரையைக் கேட்டு எல்லோரும் உவகைக் கண்ணீர் சொரிந்து, 'கம்பர் புலமையின் அகலத்தை முன்னரே அறிந்தோம்; உள்ளப் பரப்பை இன்றே அறிந்தோம்," என மொழிந்து களிதுளும்பினர். அரையனும் அவனுக்கு அளவிறந்த பொருளை வழங்கி, "இனி உன் வறுமை நோய் ஒழியும்; தமிழ்ப் புலமையும் கம்பர் கடைக் கணிப்பால் பெறுவா யாக," என்று சொல்லி விடுத்தான். அக்குடியானவன் அடைந்த இன்பம் இனைத்தென உரைக்குந் தரத்ததோ? அவன் மனைவி எய்திய இன்பமோ, அன்றி அவன் அடைந்த இன்பமோ, எது பெரிதென்பது தோன்ற வில்லை. அவனும் போலிப் புலமைக்கே இத்துணைச் சிறப் பைத் தாம் எய்தியதால் மெய்ப்புலமைக்கு எத்துணைச் சிறப்பு வரும் எனக் கருதி அன்று முதல் கல்வி கற்றுப் புலவனாயினன்.

இங்ஙனம் கவிச் சக்கரவர்த்தியார் புகழொளி பரப்பி அன்புற்று இன்புற்று வாழ்ந்து வருங்கால், ஒருநாள் சோழன் குலோத்துங்கனோடு சோலைவளங் காணச் சென்றனர். அங்கே தேமாவின் கிளைகளிலே கருங் குயில்கள் தெவிட்டாத இன்னிசை மிழற்றின; அழகு பொருந்திய மயில்கள் தமது கோலக்கலாபம் விரித்து ஆடின; தாமரை முதலிய மலர்கள் தளையவிழ்ந்து நறுமணம் வீசின; அவற்றினின்று ஒழுகும் தேனை உண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைத்தன; இளந்தென்றல் மெல்லென வீசிற்று. மல்லிகை, முல்லை முதலிய பூங்கொடிகள் அரும்பவிழ்ந்து நின்றன. இவ்வரிய காட்சியை உற்று நோக்கி உவகையில் திளைத்த சோழனுடன், கலகலவென்று நகைத்தான். அதைக் கண்ட கம்பர், "வேந்தர் வேந்தே, தாங்கள் இங்ஙனம் திடுமென நகைத்ததற்குக் காரணம் யாது?" என்று வினவினார். அதற்குச் சோழன் அவரை நோக்கி, "புலவர் பெருமானே, இந்நாடும் இதன்கண் வாழும் மக்களும் நமக்கு உடைமையும் அடிமையும் அல்லவா? என்று நான் எண்ணிய பொழுது, எனக்கு என்னை அறியாமலே நகை தோன்றிற்று," என்றான். அதைக்கேட்ட புலவருக்கு அவன் அறியாமையையும், ஆணவத்தையும் அகற்ற வேண்டும் என்று தோன்றிற்று. அதனால் அவர் அவனைப் பார்த்து, "ஆம்; தங்களுக்கு இவ்வுலகம் அடக்கம்தான்; தாங்கள் நமக்கு அடக்கமே," என மொழிந்து கலகலவென்று சிரித்தார். வேந்தன் முகம் வாடியது. கம்பர் அவ்வாறு சொல்லித் தன்னை இழிவு படுத்தினர் என உன்னினான். அதனால் மன்னன் அவரிடம் யாதும் உரையாமல் சிறிது நேரம் இருந்து, பின்னர்த் தன் அரண்மனையை அடைந்து, மஞ்சத்தின்மீது படுத்துச் சிந்தாகுலத்துடன் இருந்தான். அப்போது அவன் தேவி அவனிடம் போந்து, தீம்பாலும் சிற்றுணவும் அருந்தும்படி வேண்ட, அவன் தனக்கு

விருப்பமில்லையென மறுத்தான். அதன்மேல் அவள் சென்று மன்னவன் காதற் கிழத்தியிடம் அவற்றைத் தந்து, "நீ நம் பெருமான்பாற் சென்று, இவற்றை அருத்து" எனக் கூறி விடுத்தாள். அவள் போய்ச் சரச வார்த்தைகளால் அவனை மகிழ்விக்கத் தொடங்க, அரசன் முகஞ் சுளித்து, "அப்புறம் செல், எனக்கு யாதும் வேண் டாம். எனக்கு உன் சரச வார்த்தைகள் விரசமாக இருக் கின்றன," என்று கடுகடுத் துரைத்தான். அதன்மேல், அவள் அரையன் திருவடிகளைப் பற்றிக்கொண்டு விடாமல், முகம் புலர்ந்து கண்ணீர் உகுத்தாள். அதனைக் கண்டும் மன்னவன் நெடு நேரம் வாளாவிருந்தான். அதன்மேல் அம்மாதரசி தேம்பினள்; அவள் அழுகை யொலி கோம கன் செவியிற்படலும், அவனுக்கு அவள் மேலிருந்த ஆசையால் அவள் மென்மலர்க் கரத்தைப் பற்றி, "ஏன் அழுகின்றாய்? எனக்கு உன் மேலாவது வேறு யாரிடத்தி லாவது கோபம் இல்லை; இன்று பூஞ்சோலையிலே கம்பர் நான் அவருக்கு அடிமை என்று சொன்னர். அதுதான் என் மனத்தைத் துளைக்கிறது; நீ எழுந்திரு," என்று தனது நீண்ட கரத்தால் அவளை வாரி எடுத்து அமர்த்தி னன். உடனே அத் தையல், "அரசர்க்கரசே, இவ்வளவு தானு? இதன்பொருட்டா தாங்கள் வாடினீர்கள்? தங் களை அடிமை என்று வாயாற் கூறிய அக்கம்பரை நான் அவர் எழுத்தாலேயே என் தாதிக்கு அடிமையாக்கி விடு கின்றேன். தாங்கள் அஞ்ச வேண்டாம்," என்று அதி சமர்த்தாகப் பேசி மன்னனைத் தேற்றினள். பின்பு சோழன், "கண்மணி, உன்னைப் போன்ற திறமையுடைய வர்கள் உலகத்திற் சிலரே; ஆனல் உடனே அவ்வாறு செய்து முடி; முடித்த பிறகுதான் நான் உணவு கொள்ளு வேன்; அதற்குமுன் நீ தவஞ் செய்தாலும் முடியாது," என்றுன். அந்நங்கை விரைந்து தன் மனைக்கேகித் தனது

தாதியை விளித்து, " அடி, கம்பர் இவ்வழியே செல்வார் ; அவரை நான் பார்க்க விழைந்ததாகச் சொல்லி, என்னிடம் அழைத்து வா," என்றாள். அவளும் கம்பர் வரவை எதிர் பார்த்திருந்தாள். சோழன் வாராமையால் கம்பர் சிவி கையிலூர்ந்து சிறிது நேரத்திலே ஆண்டுப் போந்தார். அவர் பல்லக்கை நிறுத்திப் பொன்னி, " புலவரே, என் தலைவி தங்களைப் பார்க்க விரும்புகின்றாள் ; அன்புகூர்ந்து எழுந்தருள வேண்டும்," எனப் பணிவுடன் மொழிந்தாள். இதனைச் செவிமடுத்த இயற்றமிழ்ச் செல்வர் உட்புகுந் தார் ; அரசன் காதற்கிழத்தியும் கண்ணைக் காட்டித் தான் இருந்த இடத்தைச் சுட்டி அவர் வரக் குறித்தாள். கம்பர் ஐயுற்றார். அதனால், அவர், " அம்மா ! பெண்கள் தனியே இருக்குமிடத்தில் ஆடவர் செல்லலாகாது ; தாங்கள் என் அருமைப் பெருமான் குலோத்துங்கன் காதற் கிழத்தி யார் ; அதனால் எனக்கு அன்புள்ள மகளாவீர். தாங்கள் விருப்பம் யாதாயினும் நிறைவேற்றுவேன் ; கூறுவீராக," என்றார். அவள் தனது கருத்து நிறைவேறியது என்று, உடனே ஓலை நறுக்கையும் எழுத்தாணியையும் கவிஞர்பால் தந்து, " செந்தமிழ் வேந்தே, என் தாதி பொன்னிக்குத் தாங்கள் அடிமை என்று எழுதித் தாருங்கள்," என்று கேட்டாள். இதைக் கேட்டதும் கம்பர் உளவறிந்து கொண்டார் ; " நல்லது அங்ஙனமே செய்கின்றேன்," என்றுரைத்துத் " தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை," என்றெழுதி அவள் கையில் கொடுத்து விரைந்தெழுந்தார். அப்பொழுது அப்பாத்தை புன்னகை அரும்பி அவரை வணங்கி, அவர் செல்ல விடை தந்து, அதனைக் கொணர்ந்து அரையன் திருக்காத்து வைத்தனள் ; குலோத்துங்கன் ஏட்டில் எழுதி யிருப்பதைப் படித்துப் பார்த்துக் குதூகலித்தான் ; அம்மடந்தையோடு குலாவியிருந்து

எப்பொழுது வெள்ளி முளைக்கும் என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது; கோழி கூவிற்று; பள்ளி எழுந்த குலோத்துங்கன் துள்ளி மகிழ்ந்தான்; 'இனிக் கம்பர் என் சொல்வார் பார்ப்போம்,' என்றான்; நாட்கடன் முடித்து அத்தாணி மண்டபம் அடைந்தான்; கம்பர் தலைவராக மற்றெல்லாப் புலவர்களும், அமைச்சர்களும் ஏனைச் சுற்றத்தாரும் நிறைந்திருந்தனர். அப்பொழுது காவிரி நாடன் முதல் அமைச்சனிடம் ஓலைச் சுருளை ஈந்து, "இவ் வேட்டைப் பார்," என்றான். அவ்வமைச்சன், "இது கம்பர் பொன்னிக்கு எழுதித் தந்த முறிச்சீட்டு" என்றான். "அதனைக் கம்பருக்குக் காட்டு," என அரசன் சொல்ல, அமைச்சன் அவ்வாறே செய்தான். பின் அமைச்சன், "இது தங்கள் கையெழுத்துத் தானே?" என்று கம்பரை வினவினான். "ஆம்," என்றார் கம்பர். அப்பொழுது அரசன் கம்பரை நோக்கி, "நீர் பொன்னிக்கு அடிமைதானா?" என்று இகழ்ச்சிக் குறிப்போடு கேட்டான். "அதற்கு ஐயமென்ன?" எனக் கம்பர் மிடுக்குடன் மொழிந்தனர். மன்னவன், 'கவிச் சக்கரவர்த்தியாகிய நீர் தாசி பொன்னிக்கு அடிமை என்பது உமக்கு நாணமன்றோ?' என்று கூறினான். "அதன் உண்மைப் பொருளைக் கண்டால், யாரும் நாண வேண்டுவதில்லை," என்று இசைத்தனர் கம்பர். "அதன் மெய்ப்பொருள் என்னை? கூறுமின்," எனக் கடாவினான் வேந்தன். கம்பர் உடனே அதனைப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

"இத்தொடர் மொழியின் பொருள் தா-தாயாகிய, சி-அழகிய, பொன்னிக்கு - திருமகளாருக்கு, கம்பன்-கம்பனாகிய யான், அடிமை - அடியவன் என்பது. இதில் தாய் என்பது, ஈறு தொக்குத் தா என்றும், சீ என்பது குறுகிச் சி என்றும் ஆயின." இவ்வுரையைச் செவிமடுத்தார் அனை

வரும் வியந்தனர். அரசனோ தனது எண்ணம் வீணானது கண்டு பெருநகை செய்து, அவையினரைச் சுட்டி, " ஐயன்மீர், இப்புலவர்கள் என்றும் நம்புதற்குரியர் அல்லர்; ஒருவனை 'மதியிலாதவன்' என்று கூறிவிட்டு, உடனே 'மதியில்-புத்தியில், ஆதவன்-சூரியனுக்கு ஒப்பானவன்' என்று மாற்றிக் கூறி அவனை ஏமாற்றுவர். இவர் எமனைக் காட்டினும் கொடியோர் " என்னும் பொருளமைத்து,

'போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடின்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே !'

என்னுஞ் செய்யுளை இயம்பினான்.

அதன் மேலும், அவன், வெகுளி விஞ்ச, " கம்பரே நான் உமக்குத் தந்த விருதுகளையும் பிறவற்றையும் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு என் நாட்டைவிட்டு இக்கணமே அகல்வீராக," என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க அவரை நோக்கிக் கூறினான். அப்பொழுது கவியரசு புவியரசை நோக்கி " வேந்தே, உமது நாடாகிய இருபத்து நான்கு காதம் நீங்கலான உலகம் கடலிலே முழுகி விடவில்லை. நீர் வெகுண்டால் என்போன்ற புலவருக்கு இடமில்லையோ," என்னும் பொருள்பட,

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ ?—மாதவா !
கொல்லி மலையுடைய கொற்றவா ! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம் ?

என்னும் கவியைக் கூறி அகன்றனர்.

அரசவையினை விட்டுச் சென்ற கம்பர் ஒருவருக்கும் சொல்லாமல் குலோத்துங்கன் சுடுசொல் தாங்கப் பொறாராய்க் கட்டியிருந்த துணியோடு தென்னவன் தமிழ்

நாட்டை நோக்கிச் சென்றார். வழியிலே வேலி என்பாள் ஒருத்தி தன் வீட்டில் சுவர் எப்பொழுது யாரால் எழுப்பப் படினும் இடிந்து விழுதலைக் கண்டு, தான் அச்சுவரைக் கட்டி முடிப்பவருக்குக் குறுணி நெல் கொடுப்பதாகத் தெரிவித்திருந்தாள். அவ்விடம் சென்ற கம்பர் அதைப் போய்ப் பார்க்கலாம் எனச் சென்று, அவள் கூலியாளாக அமர்ந்தார். கலைமகளும் கண்பிசைந்து அழ மண் பிசைந்து, ஏடெடுக்கும் கையால் ஓடெடுத்துச் சொல்லடுக்குவது போலக் கல்லடுக்கினார். அஃது உடனே சரிந்து விழத் தொடங்குதலைப் பார்த்த அருந்தமிழ் வாணர்,

மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவைஅறிவார் ஈங்கிலையே!
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!

என்னும் உருக்கமான செய்யுளைக் கூற, முன்னர்ச் சம்பந்தப் பெருமான் தீந்தமிழ்ச் சுவையை நீரும் நெருப்பும் அறிந்ததுபோல் இன்றும் மண்ணும் கல்லும் அறிந்தனவோ என்னுமாறு சுவர் நிலைத்து நின்றது. உடனே தமிழுக்கு வேலியாகிய கம்பர் வேலிக்குக் காட்ட அவள் அச்சுவர் தனக்கு வேலியானமை கண்டு களித்துக் குறுணி நெல்லை யும் அளந்து கொடுத்தாள். அவர் நெல்லைப் பெற்றுக் கொண்டவுடனே சுவர் மறுபடியும் இடிந்து விழுந்தது. அப்பொழுது அவள், "இவர் தெய்வப் புலவர் போலும்! இவரானன்றி வேறு எவராலும் இச் செயல் முடிவதன்று," எனக் கருதி, அவர்பால் புக்கு அடிபணிந்து, "திருவுடைப் பெரும் புலவீர், தேவரீர் இன்னாரென அறியேன்; அடியாளைக் காத்தருள வேண்டும்," என மென்மொழி கூறி நிற்க, கம்பர் விழுந்த பகுதியை மீண்டும் எடுத்து வைத்துத் தாம் பாடிய செய்யுளின் இறுதியடியை

'நெற்கொண்டு போனாலும் நில்லாய் நெடுஞ்சுவரே !' என்று மாற்றியுரைக்கச் சுவர் விழாமல் நின்றது. வேலி கம்பரைப் பணிந்து, அவருக்கு வேண்டுவன நல்கிப் பெரிதும் உபசரித்தாள்.

பின் நாவலர் தமது செலவு மேற்கொண்டு செல்கையில் அவருக்குப் பசி முடுகிற்று. கண் குழிந்தது; கை கால் ஓய்ந்தன; சொற் குழறிற்று; நா வறண்டது. அதனால் அவர் ஒரு வணிகன் கடைக்குச் சென்று சிறிது அவல் கேட்க, அவன், "போ போ, எங்கே பொழுது விடிந்தது? கடை திறந்து இன்னும் ஒரு பைசா பேரம் இல்லை," என்று துரத்தினான். அப்பால் செக்கான் எள் ளாடுமிடம் குறுகித் தம் பசியை ஆற்றிக்கொள்ளச் சிறிது பிண்ணாக்கைக் கேட்டான். அவனோ "கூலிவேலை செய்து பிழைக்கிறது தானே; வெட்கமின்றிப் பிச்சை கேட்கிறாயே," என்றான். அவ்விடம் விட்டகன்று செல்கையில் அந்தணன் அகம் ஒன்றை அவர் கண்டார்; ஆங்குச் சென்று சிறிது நீரேனும் பருகிக் களைப்புத் தீரலாமென எண்ணிப் பருக நீர் கேட்க, இவரை இன்னாரென அறியாத அவ்வந்தணன், "தீர்த்தம் சேஷமாய்விடும்; போ," என விலக்கினான். அப்பால் பாவலர் பசியால் வருந்தி ஒரு மர நிழலில் சோர்ந்து படுத்தார். அங்கே வேளாளன் ஒருவன் ஏருழுதுவிட்டுக் கூழுண்ண வந்தான். அவன் இவரை நோக்கி, "ஐயா, தாங்கள் பசியாய் இருப்பது போலத் தோன்றுகிறது; என்னுடன் சிறிது உண்ணலாமோ?" என்றனன். உடனே கம்பர் கையேந்தினார். வேளாளன் தனக்கு வந்திருந்த கல்லையைக் கழுவி அவர் கையிலிட்டுக் கூழை ஊற்றி மாங்காய் ஒன்றை வைத்தான். கம்பர் கூழுக்கு மாங்காய் தோற்குமா தோலாதா என்னும் உண்மையை அறிய ஆத்திரப் படுபவர்போலவும் தாம்

நூல்களை எவ்வளவு ஆர்வத்துடன் கற்றனரோ அவ்வளவு ஆர்வத்துடனும் உண்டு, 'இராமன் உண்ணும் நீரும் பருகும் அமுதமாயினான்' எனத் தாம் இராமாயணத்திற் கூறிய பொருள் நயத்தை நன்குணர்ந்தார். அதன்மேல் அவர் பசிநீங்கி ஜீவகளை வரப்பெற்றதைநோக்கிய அவ்வேளாண் செல்வன் அவருக்குக் குறுணி நெல் தர, அவர் அதை வாங்கி வேலிக்காலில் இறைத்துவிட்டுப் பின்வரும் பாட்டை இசைத்தனர்.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே; செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே;—முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே ; எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

இது கேட்ட உழவன் அவர் கவிஞராதல் தெரிந்து மகிழ்ந்து அவரிடம் விடைபெற்று ஏற்றம் இறைக்கச் செல்கின்றவன் அவரைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைக்க, அவரும் அவன் மனைக்கேகி இரண்டு மூன்று நாள் தங்கி, நல்விருந்தாயினர். பின்பு கவிவாணர், பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரைமா நகரை அடைந்து பாண்டியனும் அவன் மனைவியும் எதிர்கொண்டு அழைப்பச் சென்று அவன் அவைகளத்தே வீற்றிருந்து, இராமாயணப் பிரசங்கம் செய்து அவனை மகிழ்வித்துச் சிறந்திருந்தனர். இங்ஙனம் பல நாள் சென்றன. குலோத்துங்க சோழன் தன் பேரவை கம்பர் இன்மையால் மதியிழந்தவன்போலவும் தாமரை இழந்த தடாகம் போலவும் அறிவிழந்த கல்விபோலவும் சுவை யிழந்த உணவுப் போலவும் பயனற்றிருத்தலை நோக்கிப் பெரிதும் வருந்தினான். பின் அவன் கம்பர் மதுரையின்கண் தென்னவன் சபா பூஷணமாய் விளங்குகின்றார் என்று கேள்வியுற்று, வேறு யார் செல்லினும் அவர் மீண்டு வாரார் என்று எண்ணி, சடை

யப்ப வள்ளலார் அருமைத் தம்பியாராகிய இணையார மார்பன் என்பவரை வருவித்துக் கவிச் சக்கரவர்த்தியை அழைத்து வருமாறு செலவிடுத்தான். அவரும் மதுரைக் கேகிக் கம்பரைக் கண்டார். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவித் தாம் பிரிந்தநாள் முதல் நிகழ்ந்தவற்றை ஒருவருக் கொருவர் உரைத்து அளவளாவினர். பின் இணையார மார்பன், சோழன் தம்மை அனுப்பிய செய்தியைக் கூறக் கம்பர், "நீ அழைத்தால் நான் வாராதிருக்க வழக் குண்டோ," என்று கூறித் தமது உடன்பாட்டைத் தெரி வித்தார். மறுநாள் கம்பர் இணையார மார்பனை அழைத் துக்கொண்டு தமிழ்நாடன் தண்ணவையைச் சேர்ந்தனர். அவ்வேந்தர் இவ்விருவருக்கும் இருக்கையளித்துக் கம்பரை நோக்கி, இணையார மார்பனைச் சுட்டிக் காட்டி, "இங்கே அழகுடன் வீற்றிருக்கும் இத்திருவுடையார் யாவர்?" என வினவக் கவிஞர் கோமான்,

'என்னுடைய தம்பி சரராம னுக்கிளையான்
கன்னன் மதயானைக் கண்டன்மகன்—முன்னங்
கணையாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் சோணாட்டு
இணையார மார்பன் இவன்.'

என்று கூறினர். அதன்கண் அவர், தமக்கும் சடையப்ப முதலியாருக்கும் உள்ள உரிமை பற்றி 'என்னுடையதம்பி' எனச் சொல்லியதைக் கேட்ட பாண்டியன் இராமாயணத் திலே இராமபிரான் விபீடணனிடம் கூறியதாகக் கம்பர் அமைத்துள்ள,

'குகனொடும் ஐவ ரானேம் முன்பு ;பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவ ரானேம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவ ரானேம்;
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தான் உந்தை'.

என்னும் பாடலை நினைத்துக்கொண்டு, அவரைக் கூறும்படி கேட்டு மகிழ்வுற்றான். பின் பாண்டியன், "கம்பரே 'கணை

யாழி முத்துதிர்க்கும் காவிரிசூழ் சோணாடு,' என்றதன் கருத்து என்னே?" என்றான். அதற்குக் கவிராஜர், "வைகை வளநாடனே, ஒரு நாள் சோழ வேந்தன் அவையில் பெரு வணிகன் ஒருவன் கடலிலே குளித்தெடுத்த பெருகொளி மணிகள் பலவற்றைக் கொணர்ந்து, அவற்றின் பருமை யினையும் ஒளியினையும் புகழ்ந்துரைத்தான். அஞ்ஞான்று ஆங்கு வீற்றிருந்த சடையப்ப வள்ளலார் மன்னனோடு மாறுபட்டுக் கடல்படு மணியினும் கழனிபடு மணிகளே சாலச் சிறந்தன என்றனர். அதுபோழ்து அரையன், 'கழனிபடுவது நென்மணியே யன்றி வேறில்லை; முத்துப் படுவது என்பது புலவர்வாய்க் கேட்டோமே அன்றிப் போந்தவாய் கண்டிலோம்,' என்றான். அதனைக் கேட்ட வள்ளல் உடனே ஒருவனை விளித்து, 'நீ போய் நமது பழனத்துள்ள ஒரு கருப்பங்கழியை வெட்டிக் கொணா,' என்றார். அவன் அங்ஙனமே ஒரு கோணற் குறுங்கழி யைக் கொடுவந்தளித்தலும், அதனைக் கணுவின்கண் முறிக்க அதினின்றும் பல முழு மணிகள் தெறித்தன. அவற்றை முதலியார் மன்னவனுக்குக் காட்டி, 'இதுபோன்ற மணி கள் கழனிகளில் உள்ள கரும்புதோறும் உள்ளன,' என் றார். அரையன் முதலிபோர் மருட்கை அடைந்தனர்,' என்று மொழிந்தனர். வழுதி கேட்டு, "முதலியார் பெரு மையை முந்நாட்டிலும் அறியாதார் இலர்," என்று வியந் துரைத்தான். பின்னர், பாண்டியன் இணையார மார்ப னுக்கு விருந்தமைத்து பலவாறு சிறப்பித்தான்; ஒரு நாள் மதுரை நகரை நன்கு புனைவித்து அதன் அழகை இணையார மார்பன் அறிய வைத்தான். அக்கருத்தறிந்த கம்பர் பார் வேந்தனைப் பார்த்து, "இது வெண்ணெய் நல்லூர் சுடு காட்டை ஒக்கும்," என்றார். "அங்ஙனமாயின் அதனை நாம் காண விழைகின்றோம்," என்று பாண்டியன் சொல்ல, இணையார மார்பனும் உடனே மகிழ்ந்து தந்நகருக்கு வேந்

தன் திண்ணமாய் வருதல் வேண்டுமெனப் பரிந்தழைப்ப வழுதியும் இசைந்தான். பின் பாண்டியன் வரவைச் சடையப்ப முதலியாருக்கு அறிவிக்க, அவர் தமது நகரத்தை அமராவதிபோல அலங்கரித்து வைத்து அரையனை எதிர் கொண்டு அழைத்தார். பாண்டியன் தனது பரிவாரங்களுடன் கண்டு களித்துச் சின்னாட்டங்கிப் பின்னர் பிரிதற்கருமையால் வருந்தியபோது, கம்பர் அவனுடன் இன்னுரையாடிப் பின்வரும் அரும்பாவை அறைந்தனர்.

பாலுக்குச் சக்கரை இல்லைஎன் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லையென் பார்க்குங் குற்றிதைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்குங் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விதன
மொன்றே.

பாண்டியனை முதலியாரும் அவருக்குத் தம்பிமார்களும் அவர் பிள்ளைப் பெருமாளும் கம்பரும் நெடுந்தூரம் சென்று வழிவிட்டனர். பாண்டியன் அவர்கள் விருந்தாற்றுஞ் சிறப்பை எண்ணி எண்ணி அகம் மிக மகிழ்ந்தான்.

கல்வியிற் பெரிய கம்பர் இங்ஙனம் வாழ்ந்து வருங்கால், சீராமன் எனப்பெயரிய தமிழ் நயந்தெரிந்த வண்ணான் ஒருவன் அவர் ஆடையினை நன்கு வெளுத்துக் கொடுத்தான். அச்சமயம் தமக்கிருந்த சோர்வு நீங்கப் பல்லாற்றாலும் அன்பு ததும்ப ஆடையினை வெள்ளென வெளுத்துத் தந்த அவன்மீது அருள் சுரந்து, மலையும் வெட்கத்தக்க திண்ணிய தோள்களையுடைய சீராமன் கலையை வெளுத்த அழகைப் பார்த்த ஈசன் தன் தலையிலேயுள்ள தூய கங்கையை நோக்கி, "இத்துணை வெண்மை இக்கங்கைக்கு உண்டோ?" என்றும், அயன், தன் தேவியாகிய நாமகளை நோக்கி, "இவள் வெண்ணிறம் இதற்கொப்பாகுமோ?" என்றும், கமலக்கண்ணனாகிய திருமால் தன்

காத்தே இருக்கும் சங்கை நோக்கி அங்ஙனமே கருதினன் என்றும் பொருள் தரும்,

சிரம்பார்த்தான் ஈசன் ; அயன் தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன் ;—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சி ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு.

என்னும் பாடலைப் பாட, அவன் வணங்கிப் புலவர் இறைவனைப்போல எளியார்க் கெளியராதலை அறிந்து உள்ளுருகினன்.

ஒருகால் சிதம்பரத்துக்குச் சென்ற கவிச்சக்கரவர்த்திக்குத் தம்பிபுகான் என்னும் சிவபக்தி நிறைந்த மயிர்வினைஞன் மிக்க பணிவோடும் நேர்த்தியாக க்ஷவரஞ் செய்யக் கம்பர் அவனை வியந்து,

ஆரார் தலைவணங்கார் ? ஆரார்தாங் கையெடார் ?
ஆரார்தாம் சத்திரத்தில் ஆராதார் ?—சீராரும்
தென்புலியூர் மேவுஞ் சிவன் அருள்சேர் அம்பட்டத்
தம்பிபுகான் வாசலிலே தான்.

என்ற செய்யுளைக் கூறினர்.

இதன்கண் தலைவணங்கல், கையெடுத்தல் என்னுந் தொழின் முறைகளை மற்றொரு பொருளில் அமைத்துக் காட்டியிருத்தலையும், சத்திரத்தில் ஆராதார் என்பது கத்தியால் பொருந்தாதவர் என்றும், உண்டு மகிழ்வடையாதவர் என்றும் இருபொருள் படுதலையும் அவனுக்கு எடுத்துச் சொல்ல அவன் பெருமகிழ்வினால் விழுங்கப்பட்டான்.

ஒருநாள் புலவாணர் பள்ளியறையில் திருக்கண் வளர்ந்திருப்பத் தென்றல் வீச, அவர் யாரோ கதவைத் தட்டுகிறார் என்றெண்ணிச் சாளரத்தைத் திறந்து பார்த்தவர் ; ஒருவருமின்மையால், காற்று மோதலினால் ஆய ஒலி

அஃது என்று அறிந்து பொற்கைப் பாண்டியன் அருஞ் செயலை அமைத்துத் தென்றலை முன்னிலைப் படுத்தி,

> கொற்கையான் மாறன் குலசேக ரப்பெருமான்
> பொற்கையான் ஆனகதை போதாதோ?—நற்கமல
> மன்றலே வாரி மணிவா சலைஅசைக்கத்
> தென்றலே! ஏன்வந்தாய்? செப்பு.

என்னும் அணிமிகு செய்யுளைப் பாடினர்.

அக்காலத்திலே ஏகம்பவாண முதலியார் என்னும் வள்ளியோர் ஒருவர் இருந்தார். அவர் அன்புள்ள தாயைப் பிறந்த ஓராண்டிலேயும், சில்லாண்டிலே அரிய தந்தையையும் இழந்தவர். அவர் தந்தையாகிய வாணருக்குச் செல்வம் கடலெனப் பரந்திருந்தது. அத்துணைச் செல்வத்தையும் ஏகன் என்னும் பண்ணையாளிடம் ஒப்பித்து, தன் இளைய மைந்தனைக் காக்கவேண்டுமென்று வாணர் செப்பி உயிர் துறந்தார். அவ்வேகன் அச்செல்வனைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து, கம்பருக்கு வேண்டுவன நல்கி அவனைக் கல்வியிற் சிறக்கச் செய்தான். அதனால் அம்மைந்தன், தனது இயற்பெயரை நீக்கி, தன்னை உண்மையுடன் பாதுகாத்து வந்த பண்ணையாள் பெயரை முன்னரும், கல்விக் கண்ணைக் கனிவுடன் தந்த கம்பர் பெயரை நடு நாயகமாக இடையிலும், பெற்ற தந்தையின் பெயரைக் கடையிலும் நிறுத்தி ஏகம்பவாணன் எனத் தன் பெயரைப் புனைவித்துக்கொண்டான். அவன் பின் ஏகம்பவாண முதலியார் என்றும், ஏகம்பவாண பூபதி என்றும் வழங்கப்பட்டான். கம்பருக்கு இவர் மாணவராதலின் அவரிடம் இவருக்கு இருந்த பேரன்பு கூறற்பாலதோ? கலைமாச் செல்வருக்கு இவர் வழங்கியனவும் அளப்பரியன. கம்பர் இவரைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களும் எண்ணிறந்தன. ஒருநாள் ஏகப்பவாணர் கம்பர் திருமாளிகைக்கு நள்ளிர

விற் சென்று கதவைத் தட்டினர். அப்பொழுது கவிஞர், "யார்?" எனக் கேட்க, அவர், "கம்பர் அடிமை," என்றனர். கம்பர் கதவைத் திறந்து பார்த்து, ஏகம்பவாணர் என அறிந்து உடனே அவர் நன்றியறிதலுக்கும் பெருந்தகைமைக்கும் மனங் குழைந்து,

பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க் கரசளித்த
ஆண்டகையென் றுன்னை அறியேனே—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணா!உனது
பேர்மாற் றுவதரிதோ? பேசு.

என்னும் செய்யுளைப் பாடினர். மற்றும் அவரைக் குறித்து அரிய ஆற்றுப்படை ஒன்றையும் சிலேடை அணி ததும்பப் பாடினர். அது பின்வருவது:

தேரு லைப்புரவி வார ணத்தொகுதி திரைகொ ணர்ந்துவரு [மன்னரின்
தேய மேதுனது நாம மேதுபுகல்; செங்கை யாழ்தடவு [பாணகேள்:
வாரும் ஒத்தகுடி நீரும் நாமும்மக தேவன் ஆறைநகர் [காவலன்
வாண பூபதிம கிழ்ந்த ளிக்கமிகு வரிசை பெற்றுவரு [புலவன்யான்
நீரும் இப்பரிசு பெற்று மீளவரல் ஆகும் ஏகும்அவன் [முன்றில்வாய்
சித்தி லச்சிகர மாட மாளிகைநெ ருங்கு கோபுர மருங் [கெலாம்
ஆரு நிற்கும்உயர் வேம்பு நிற்கும்வளர் பனையும் நிற்கும் [அதன் அருகிலே
அரசு நிற்கும்அர சைச்சு மந்துசில அத்தி நிற்கும்அடை [யாளமே.

இப்பாட்டிலே ஆர்-ஆத்திமாலையைத் தரித்த சோழனையும், வேம்பு - வேப்பமாலை சூடும் பாண்டியனையும், பனை - பனைமாலை புனையும் சேரனையும், அரசு - ஏனைய சிற்றரசர்களையும், அரசைச் சுமந்த அத்தி - அரசர்கள் ஊர்ந்துவந்த

யானைகளையும் குறித்து, வாண பூபதியின் பெருஞ் சிறப்பை விளக்கி நிற்றலைக்கண்டு அறிஞர் கழிபேருவகை எய்தினர். அவன்மேற் கம்பர் பாடிய மற்றொரு பாட்டும் பொருட் சுவை விஞ்சி உண்மை தெரிப்பதா யுளது. அது,

வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை;
வாணன் புகழ்க்கெல்லை மண்ணெல்லை;—வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை; பைந்தமிழ்தேர் வாணன்
கொடைக்கெல்லை ஏற்பவர்தங் கோள்.

பாவலர் பெருமான் ஒருகால் கொங்கு நாட்டுக்குச் செல்ல, அந்நாட்டினர் அவரை அறியாது ஆதரியாராக அவர் மனம் வெதும்பிப் பின்வரும் பாவால் அவரை இகழ்ந்தனர்.

நீரெலாஞ் சேற்று நாற்றம்; நிலமெலாங் கல்லும் முள்ளும்;
ஊரெலாம் பட்டி தொட்டி; உண்பதோ கம்பங் கூழாம்;
பேரெலாம் பொம்மன் திம்மன்; பெண்களோ நாயும்பேயும்;
காருலாம் கொங்கு நாட்டைக் கனவிலும் நினைக்கொணாதே!

இப்போது கம்பருக்கு எங்குங் கீர்த்தி பரவவே தாதனும் அவருடைய அளப்பரிய புலமைத் திறத்தை உள்ளுக்குள்ளே நன்குணர்ந்தே அழுக்காறு கொண்டவனாதலின், அவரை ஒருநாள் தன்னை அறியாமலே வாய்விட்டுப் புகழ்ந்துரைத்தான். அவ்வளவிலே மகிழ்வெய்திய அரும்பாவலர் அவன் கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் வரையாது அளிக்கும் வண்மையுடையோனாதலைக்கண்டு வியந்து,

தாதாஎன் றாலுந் தருவென்று சொன்னாலும்
தாதாஎன் றாலுந் தருவனோ தாராதான்?
தாதாஎன் றாலுந் தருவென்று சொன்னாலும்
தாதாஎன் றாலுந் தருவன்நந் தாதனே.

என்னும் சொல்லழகு சான்ற சுவைபடு செய்யுள் கூறத் தாதன் பேருவகை எய்தி அளவளாவினான். அன்று தொட்டுப் பாக்கிழவோர் இருவரும் நட்புக் கிழமை பூண்டு, நல்

ளுரை யாடியும் இன்ப வெள்ளத்திற் படிந்தும் பிறரைப் படிவித்தும் வந்தனர்.

அவருக்கு இனிய கண்மணிபோன்ற செல்வப் புதல்வ ஞகிய அம்பிகாபதி புலமைத்துறை முற்றியமை செவி யுற்ற சோழன் அவனைத் தன் அவைக் களத்துப் புலவர் களில் ஒருவனுக ஏற்படுத்திச் சிறப்புப் புரிந்தான். அவனும் அரசவை சென்று நாண்மங்கலம் கூறி வந்தான். அவனது சொற்சுவை பொருட்சுவை பழுத்த கவிகளைச் செவிநயக்கக் கேட்டார் யாவரும் அவனைப்பற்றிப் புகழ்ந்து பேசத் தலைப்பட்டனர். அவனது புகழ் அந்தப்புரத்துக்கும் எட் டியது. அங்கே அரையன் மகள் கலைநலம் நிரம்பிய முழு மதி வாய்ந்தவ ளாதலாலும் அம்பிகாபதியை இளமை தொட்டே அறிந்தவளாதலாலும் அவன் மீப்புகழ் தன் செவியிலே விழும்பொழுதெல்லாம் அவனை நேரிற் கண்டு உரையாட வேண்டுமென வேணவாக் கொண்டாள். அவ்வவா அரும்பிப் போதாகி மலர்ந்தது. ஒரு நாள் வேந்தன் புதல்வி தன் தோழியிடம் ஒரு நிருபந் தீட்டி அம்பிகாபதியிடம் அனுப்பினுள். அதன்கண் அம்பிகா பதியைத் தான் பார்க்க வேண்டுமென எழுதப்பட்டிருந் தது. அத்திருமுகம் கைவரப்பெற்ற அம்பிகாபதி திடுக்கிட்டு இன்னது செய்வதென அறியாது சிறிதுநேரம் திகைத்து இறுதியாக அவள் குறித்தவாறே குறித்தவிடஞ்சென்ருன். அங்கே அரசகுமாரி தன் உற்றதோழி ஒருத்தியோடு தனித் திருந்தாள். அம்பிகாபதி சென்றவளவில் அப்பேரெழில் வாய்ந்த பெண்ணரசி மிக்க அன்புடன் வரவேற்றுப் பலவற் றையும் பற்றி உசாவினுள். அம்பிகாபதியும் அவள் கேட்ட வற்றுக் கெல்லாம் தக்கவாறு விடையிறுத்தான். பின் இருவரும் நெடுநேரம் அளவளாவினர். ஒருவரை யொருவர் உற்று நோக்க இருவர் கண்களும் ஒன்றுபட்டன; அப் போது அவ்விருவர் உள்ளங்களும் பான்மை வழியோடிப்

பள்ளத்துச் செல்லும் புனல்போல ஒன்றிலே ஒன்று கலந்தன; ஓராவிற்கு இருகோடு தோற்றினாற்போல இருவர் மனத்தும் அன்பு தோன்றிற்று. தோன்றியவுடன் அம்பிகாபதி அரையன் அழகிய மகளை ஏறிட்டு நோக்க, அவள் புன்னகை பூத்து நிலங் கிறிப் பெருவிரல் நோக்கி நின்றாள். அதன்மேல் அம்பிகாபதி அவளைத் தழுவி அழகொழுகும் கன்னங்களில் முத்தம் வைத்தான். அவள் காமவல்லிபோல் ஒல்கினாள். பின்னர் இருவரும் பிரியமாட்டாது பிரிந்து, ஒருவரை யொருவர் இன்றியமையாராயினர். இங்ஙனம் பன்னெடு நாட்கள் இவ்விருவருக்கும் களவொழுக்கம் நடைபெற்று வந்தது. இஃது ஊர்முழுதும் சின்னாட்களில் மூண்டு கொண்டது. அஃதறிந்த சோழன் கம்பரை விளித்து, அவரிடம் இதனைக் குறிப்பிக்கக் கம்பர் அதனால் தம் இன்னுயிர்ப் புதல்வனுக்கு யாது தீது நேருமோ என வஞ்சி அத்தகைய செயல் யாதும் இன்றெனை மறுத்துவிட்டனர். அதன்மேல் அரசன் இச்செயலைப் பலர்க்கும் புலப்படுத்திக் கம்பரை ஒப்புக்கொள்ளும்படி செய்து, தன் மகளை அம்பிகாபதிக்கு மணம் புரிவிக்க விழைந்தான். அந்தோ! உலகத்தார் உள்ளக் குறிப்பெல்லாம் உணரவல்ல பாவலருக்குத் தீவினை வயத்தான் அரையன் குறிப்பை அறிதல் இயலாதாயிற்று.

இங்ஙனம் தன் முதலமைச்சனோடு கருதிய காவலன் ஒருநாள் தனது கோயிலின்கண் தனக்கு இனியவரும் நெருங்கிய உறவினருமாகிய ஒரு சிலருக்கு விருந்து வைத்தான். அவர்களுள் கம்பரும் அவர் மைந்தன் அம்பிகாபதியும் முதன்மையானவர். அஃது உவளகத்திலே நிறைவேறியது. வந்த விருந்தினர் அனைவரும் விருந்துண்ண அமர்ந்தனர். அப்பொழுது அரசர் பெருமகன் தம் அரும்பெறன் மகளை விளித்து, உண்பனவற்றைப் பரிமாறப் பணித்தான். அதுகேட்ட அம்மடவரல் தம் காதற்கினிய

அம்பிகாபதிக்குப் பரிமாறும் அமயம் வாய்த்ததை முன்னிட்டுப் பெருங்களிப்பெய்தித் தனது காந்தளினுஞ் சிவந்த மென்காத்தே பொன் வட்டிலை ஏந்தி மயிலென ஒசிந்து, வஞ்சியென அழகு விஞ்சி அன்னம்போல் நடந்து வந்தாள். அதனைக் கண்ட அம்பிகாபதி தன் ஆருயிர் புலப்பட்டு வெளிப் போதலைக் கண்டவன்போலக் கண்டு அவள் இயற்கை மென்மை இவ் வன்மையாம் பரிமாறுந் தொழிலால் வாடுமே என உள்நைந்து, தனது வசமழிந்து,

'இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்தே மருங்கசைய'

என்றான். அவ்வளவில் ஆண்டிருந்தார் பிறரெல்லாரும் "ஆ! ஆ!!" என்றனர். உளவறிந்த கம்பர் உடனே "கொட்டிக் கிழங்கோ" என்று குறிப்பிட்டார். அஃதுணர்ந்து "கிழங்கென்று கூறுவாள் நாவில் வழங்கோசை வையம் பெறும்," என அம்பிகாபதி முடித்தான்.

அந்நேரத்தே தெய்வத் திருவருளின் செயலால் வெளியே ஒருத்தி, 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு' என்று விற்றுக்கொண்டு சென்றாள். கம்பர், அம்பிகாபதி அவளை நோக்கிப் பாடியதாகக் கூறினார். அனைவரும் வெளியே சென்று நோக்க, நங்கை ஒருத்தி வட்டில் தாங்கிக் கண்டோர் கண்ணைக் கவரும் பேரெழிலும், கேட்போர் செவியைக் குளிர்விக்கும் இன்சொல்லும் உடையளாய்ப் புன்னகை அரும்பிப் பூங்கொடி நடை கற்பதென நடந்து சென்றுகொண்டிருந்தாள். அதன்மேல் யாவரும் விலாப் புடைக்க உண்டு தாம்பூலந் தின்று, சந்தனம் திமிர்ந்தனர். அம்பிகாபதி மார்பின் மேலும் உடம்பிலும் சந்தனம் நிறையப் பூசப்பட்டிருந்தது. அரசன் அவனை அழைத்துத் தன் மகள் இருக்கும் அறைக்குட் சென்று, ஆங்குள்ள கனிகளைக் கொணர்ந்து அனைவருக்கும் வழங்கும்படி கட்டளை

யிட்டான். தன் ஆருயிர்ப் பிழம்பாகிய அன்புடைச் செல்வி இருக்குமறைக்குச் செல்லும்படி விடுத்த அரையன் 'நல்லனே' என உட்கொண்டு சென்ற அம்பிகாபதி ஆங்கிருந்த கனிகளை வாரிக்கொடு வருபவன் அருகே பூத்த கொடிபோல ஒளி திகழ்ந்து நிற்கும் புனிதவல்லியின் விழிகளை நிமிர்ந்து நோக்கலும் அவை, ஆசை நெருப்புக் கொளுத்தப் பேரொளி கான்றன கண்டான்; உடனே விரைந்து அவளைக் கட்டியணைத்து கனி வாயிற் பல முத்தம் வைத்துத் துண்ணென மீண்டான். மீண்டவன் தனது மார்பகத்தே அரசகுமாரியின் அணிகலச் சுவடு அழுத்தப் பெற்றிருத்தலை அறிந்த அரசி எத்தகைய குறிப்புப் புரிந்தும் அவன் அறிகிலனாய் ஆன்றோர் அவை குறுகினான். அவர்கள் அனைவரையும் அவன் மார்பைக் காணுமாறு அரசன் குறிப்பித்தான். யாவரும் அம்பிகாபதிக்கும் அரசன் புதல்விக்கும் களவொழுக்கம் நிகழ்வது உண்மையேயெனத் தெளிந்தனர். அப்பொழுதும் கம்பர், மன்னவன் உட்கோள் அறிந்திலர்; மன்னவனும் வாய்விட்டுத் தன் கருத்தைத் தெரிவித்திலன். அப்புறம் அரையன் அம்பிகாபதியை அருகழைத்து, "நீ சிற்றின்பம் சிறிதும் கலவாமல் பேரின்பப் பொருள்பற்றி நூறு பாட்டுப் பாடுவையேல் உன்னை மன்னிப்பேன்; அவற்றுள் ஒன்றிலேனும் சிற்றின்பப் பொருள் தோன்றுமாயின் உன் உயிரைப்போக்குவேன்," என்று வெகுண்டு உறுதியாகக் கூறினான். அம்பிகாபதிக்கும் அரசன் மகளுக்கும் பொருந்தியுள்ள தலையன்பு இடைவிடாது ஆற்றொழுக்கெனச் செல்லும் நீர்மையது ஆதலின் அரசன் தனது சொற்படி அம்பிகாபதி சிற்றின்பம் சிறிதும் கலவாது பாட முடியாதென எண்ணினான். ஆயினும் அம்பிகாபதி அது பொழுது சூழ்ச்சி இன்னதெனத் தெரிந்து கொண்டானாதலின் தனது வழிபடு கடவுளை வணங்கி அவரது திவ்விய மங்கலத் திரு

வருவை உள்ளக் கிழியின் எழுதி முப்பொறிகளும் ஒருமைப்பட்டுக் காப்புச் செய்யுள் முதலாக நூறு செய்யுட்கள் தேனெனச் சுவைக்க எடுத்த முறை பிறழ்வின்றி ஒரே நெட்டாக பாடிக்கொண்டு வந்தான். இன்னும் ஒரு பாட்டே எஞ்சி நிற்பது. இந் நிலையில் மன்னவன் திருமகள் காப்புச் செய்யுளைத் தன் காதலன் பாடத் தொடங்கியதும், தனது திருக் கழுத்தை அணி செய்திருந்த நூறு முத்துக்கள் உள்ள மணிவடம் ஒன்றனை அறுத்து, ஒவ்வொரு மணியை எடுத்துவைத்துக் கொண்டிருந்தவள் நூறு முடிந்ததும், காப்புச் செய்யுள் நூற்குப் புறமென அறியாள், தனது காதலன் வென்றிகொண்ட மகிழ்ச்சியை அறிவிக்கத் தனது தலையை நீட்டினள். அவள் முகவிம்பத்தைக் கண்டதும் அம்பிகாபதி மேற்கோள் அழிந்து, அவள் அழகை அமைத்துச் சிற்றின்பம் சிறந்து, பேரின்பம் சிதைய ஒரு செய்யுளைப் பாடினன். அரையன், " தவறு! தவறு!!" எனக் கூவினன். கம்பர் வாளாவிருந்தார். ஆன்றோர் ஒருவர் அரசனைக் காப்புச் செய்யுளையுங் கூட்டிக் கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அரசன் இசைந்திலன். அதன்மேல் அம்பிகாபதியைக் கொலைக் களம் சேர்ப்பித்தனர். கம்பர் அவனை மார்புறக் கட்டித் தழுவிக் கோவென அழுது,

மட்டுப் படாக்கூந்தல் மானார் உருவ மயக்கத்தினல்
கட்டுப்பட் டாயென்ன காதல்பெற் ருய்மதன் கையம்பினல்
பட்டுப்பட் டாயினுந் தேறுவை யோவென்று பார்த்திருந்தேன்
வெட்டுபட் டாய்மகனே! தலை நாளின் விதிப்படியே.

என்று கூறிப் புலம்பினர். அப்பொழுது அம்பிகாபதி தன் கல்வித் தந்தையை நோக்கி,

'உருகி உடல் கருகி உள்ளிரல் பற்றி
எரிவ தவியாதேன் செய்வேன் —வரியரவ

நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு.

என்று பாடி, புலம்பும் தந்தையைத்தேற்றி எல்லாம் சிவன் செயலே என்றனன். அம்பிகாபதி இறந்ததைக் குறித்து உலகத்தா ரெல்லாரும் கண்ணீர் பொழிந்தனர். அரசன் மகளும் அவன் இறந்த செய்தியைச் சுடு நெருப்பெனக் கேட்டு உயிர் துறந்தாள். என்னே உலக வாழ்வு?

பின்னர்க் கவிஞர் பெருமான் தம் இன்னுயிர்ப் புதல்வன் உயிர் துறந்தமையினை எண்ணி யெண்ணி உருகி அவனுக்குச் செய்யவேண்டிய அருங்கடனை யெல்லாம் தாம் ஆற்ற நேர்ந்ததை உள்ளி, இராவணன் தன் ஆற்றல் மைந்தன் இந்திரசித்துக்கு ஈமக்கடன் ஆற்றியபொழுது கூறிய கவியாகிய,

சினத்தொடுங் கொற்ற முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி நீரால்
எனக்குநீ செய்யத் தக்க கடனெலா ஏங்கி ஏங்கி
உனக்குநான் செய்வ தானேன்; என்னின்யார் உலகத்
துள்ளார்?

என்பதைச் சொல்லி வாய்விட்டாற்றினர். பின்னர்த் தயரதன் தன் மைந்தனாகிய இராமபிரான் மீள்வதற்காகத் தம்பியோடும் துணைவியோடும் கானேகினமை கேட்டு உயிர் துறந்தமையினையும் தாமோ, மீளாவுலகுக்குத் தனித்தேகிய மகனோடு உயிர் துறவாமையையும் அமைத்துக் கேட்போர் உள்ளம் அழலிடைப்பட்ட இழுதென உருகும் வண்ணம் மேல்வரும் கவிக் கொழுந்தைச் செப்புவாரானார்.

பரப்போத ஞாலம் ஒருதம்பி ஆளப் பனிமதியம்
துரப்போன் ஒருதம்பி பின்வரத் தானுந் துணையுடன்

வரப்போன மைந்தற்குத் தாதை பொருதுயிர் மாய்ந்தனன் [நெஞ்சு
உரப்போ எனக்கிங் கினியார் உவமை உரைப்பதற்கே!

இங்ஙனம் பன்னெடு நாட்கள் சென்றன. கம்பருக்குச் சோழன் மாட்டும் சோழனுக்குக் கம்பர் மாட்டும் வெறுப்பு விளைந்தன. கம்பர் சடையப்ப வள்ளலையே எப்பொழுதும் சோழனினும் மேம்படுத்துப் புகழ்தலும் அவர் பெயரையே அழியா எழுத்தில் இராமாயணத்தில் பலவிடங்களில் அமைத்ததும் ஆகிய செயல்களால் முன்னரே அவரிடம் அன்பு குறைந்திருந்த மன்னவன் தன் கண்மணி நேர் பெண்மணியைப் பறிகொடுத்து நின்றபோது அவரை முற்றும் வெறுத்தான் என்பது மிகையன்றோ? கம்பருக்கோ சோழன் சடையப்பருடைய உண்மைப் புகழைக் கேட்க வெறுத்தலும் அவன் வீண் பெருமிதம் உடையவனாய் இருத்தலும் அவன் மகளால் தம் அருமை மகனை இழந்த நிலைமையும் சோழனை வெறுப்பதற்கு ஏற்ற காரணங்களாயின. ஒருகால் சோழன் அவரை முனிந்தபோது அவனை அவரும் முனிந்து,

மன்னவனும் நீயேயோ மண்ணுலகும் இவ்வளவோ?
உன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவது?—என்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?

எனக் கூறிச் சோணாட்டை அகன்று இப்பொழுது ஐதராபாத்துக்கு வடகிழக்கில் உள்ளதும் ஆந்திர மன்னருக்குச் சிறந்த நகரமாக ஓங்கியிருந்ததுமாகிய ஓரங்கல் நாட்டை நோக்கிச் சென்றார். ஆங்கு அரசு புரிந்திருந்த பிரதாபருத்திரன் என்னும் அருங்கலை விநோதனைக் கண்டார். அவனோ பல மொழித் தேர்ச்சியும் உடையவன். தமிழின் சுவை தெரியப் பேரவாக் கொண்டவன்.

அவனும் தமிழ்க் கடலாகிய கம்பரைத் தன் வேத்தவையிலே வீற்றிருக்கச் செய்து, அவருக்கு வேண்டப்படும் தக்க சிறப்புக்களையெல்லாம் நல்கினன். அவனுக்குக் கம்பர் தாம் பாடிய இராமாயணத்திலுள்ள பொருள் நயங்களையெல்லாம் ஒவ்வொரு நாளாக எடுத்துக் கூறி வந்தார். அவன் அச்சுவையிலே தேக்குண்டு அவருக்குத் தான் யாதேனும் உடலூழியம் புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அதற்குக் கம்பர் தமது அளவிலாற்றலைச் சோழன் உணர்வதற்கு இது வாய்ப்பாமென உன்னி, அவனைத் தாம் விழைந்தபோது அடைப்பக்காரனாக வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அவனும் அதற்கு மகிழ்வோடு உடம்பட்டான். உடனே புலவர் பெருமான் அவனைச் சிறப்பித்து,

அவனிமுழு துண்டும் அயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா! உன்னுடைய ஓரங்கல்நாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்.

என்னும் அரிய செய்யுளைப் பாடி, "உலகையே தனது நாடாகப்பெற்ற பிரதாபருத்திரனென்னும் பெயரைத் தாங்கிய மன்னரேறே, உமது ஓரங்கல் நாட்டின்கண் வாழை மரங்கள் எல்லாம், உமது அரண்மனையிலே உலகத்து மக்கள் எல்லாரும் வந்து விருந்துண்டு போதலாலும் நீர் போதரும் பவனியிலே உமது அழகைக் கண்டு, மயங்கிய மடவார் தமது காம வெப்பம் ஆற்றாது குளிர்ச்சியை விரும்பி வாழைக் குருத்தைத் தம் அமளிக் கண்ணே பரப்பிப் பள்ளிக் கொள்ளலாலும் குருத்துகள் இலவாயின," என்னும் அதன் கருத்தை எடுத்தியம்பி, அவன் நிலப்பரப்பையும், விருந்தாற்றும் மாண்பையும், செல்வச் சிறப்பையும், அழகின் மேன்மையையும், கண்டாரால்

விரும்பப்படும் அவன் தன்மை நோக்கத்தையும் இனிது விளக்கினர். பிரதாபருத்திரன் இவற்றைச் செவியிலே வடித்த தேனெனக் கேட்டு மகிழ்வெய்தினன்.

பின்னர்க் கம்பர் அவனிடம் விடைபெற அவனும் அவர் பிரிவுக்காற்றாது விடைதராது முடியுடைய மன்னவர்க் குரிய வரிசைகள் எல்லாம் அளிப்பப் பெற்றுக் கொண்டு, பார்த்திபன் வழிவிடச் சோணாடு சேர்ந்தார். அவண் சென்றதும் சோழன் அவைக்களம் குறுகி, நிகழ்ந்த வற்றை யெல்லாம் அவனுக்குச் செப்பினர். அவன் அவற்றை யெல்லாம் உற்றுக் கேட்டுப் பின் அவரை நோக்கி, "கவிஞரே, எல்லாம் உண்மையே; நீர் மீண்டு வருங்கால் என்னை யொத்த ஓரரையனை அடைப்பைக்கார னக அழைத்து வருவேன் என்றீர்; அது மட்டும் தவறிய தென்?" எனக் கம்பர், "அங்ஙனமே இன்றெட்டா நாள் செய்விப்போம்," என்று சூளுரைத்துப் பிரதாபருத்திர னுக்குத் திருமுகம் போக்கி வருவித்துச் சோழ னுக்குக் காண்பித்தனர். அன்றுமுதல் சோழனுக்குக் கம்பரிடம் அச்சம் உண்டாயிற்று; கம்பர் சொற்கேட்டுப் பிரதாப ருத்திரன் தனக்குத் திங்கிழைத்தலும் இயலு மென எண்ணினன்.

இவ்வாறு இருப்புழிக் கவிவாணர் ஒரு நாள் எடும் எழுத்தாணியுமாக இருக்கையில் சோழன் இளைய மைந்தன் காட்டிற்குச் சென்று கன்னி வேட்டையாடினன். அவன் வழி தப்பி அனைவரையும் விட்டுப் பிரிந்துவிட்டான். அங்கே காட்டானை ஒன்று அவனைத் துரத்தி வந்தது. அவன் விரைந்து வழிக்கரையிலேயுள்ள கம்பர் அகத்துள் புக்கு, "கம்பரே, காட்டானை துரத்தி வருகிறது," என் றான். அவ்விளவலைக் கண்டதும் அருள் மீதூர்தலின்றிக் கம்பர், தம்மகனை இழந்த துயரம் தலைக்கேறி இருந்தமை

யான் நுண்ணிய நூலறிவு கையகன்றோட உண்மை யறி வொன்றே ஓங்கப் பெற்று, அவ்விளங்கோவை நோக்கி, "காட்டானை விட்டால் கவியானை விடுமோ?" என்றுரைத்து, தமது எழுத்தாணியை ஓச்சிக் குத்தச் சென்ற வளவில் அவ்விளவலது மாசற்ற வதனம் அச்சக் குறிப்பை வீசுதலைக் கண்டு எழுத்தாணியைக் கீழே எறிந்து, தமது தகாத செயலுக்காகப் பெரிதும் உளைந்து, அவனைத் தேற்றிச் சிறிது நேரம் வைத்திருந்து வேந்தன் கோயிலுக்குச் செலவிடுத்தனர். இதனைத் தன் இளம் புதல்வனால் உணர்ந்த சோழன் கம்பர் தம் மகன் இழவால் வருந்தும் விலை ஒருகால் தனது மக்களுக்கும் தன் அரசுக்கும் கேட்டை விளைப்பினும் விளைக்குமோ என்றுள்ளம் வெருவி எங்ஙனமேனும் ஒரு சூழ்ச்சியால் அவரைக் கொல்லவேண்டுமென அற்றம் நோக்கியிருந்தான். ஒரு நாள் அவர் தன் அரண்மனைக்கு வரும்போது ஆண்டிருந்த வயமாவை எழுப்பி அவர்மீது பாயவிடுத்தான். அது கண் சிவந்து, வால் முறுக்கி வெகுண்டு அவரை எதிர்த்து வருதலும், அவர்,

வெங்கண் சிவந்து வெடிவால் முறுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம் பிளக்க வரும்புலி யேஅன் றிரணியனைப்
பங்கம் படப்பட்ட வள்ளுகி ராலுரம் பற்றியுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே.

என்னும் பாடலைப் பாடி நரசிங்கப் பெருமானை வழுத்த அக் கடுமாத் திடுமென விழுந்திறந்தது. அதுகண்ட வில்லேருழவன் இனி அரைக்கணம் தாழ்ப்பினும் நன்றன்றெனக் கருதித் தன் கைச்சிலையில் கூரம்புகோத்துச் சொல்லேருழவர் மார்பிலே ஊடுருவிப் பாயுமாறு விடுத்தான். அது சென்று பாய்ந்ததும் கம்பர் அதனை நோக்கி, அது மன்னவன் அம்பென அறிந்து, அவனை முன்னிலைப்படுத்தி,

வில்லம்பு சொல்லம்பு மேதகவே ஆனாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து;—வில்லம்பு
பட்டுருவிற் றென்றெனையென் பாட்டம்பு நின் [குலத்தைச்
சுட்டெரிக்கும் என்றே துணி.

என்னும் பாவைக் கூறி, தம் ஆருயிர் துணைவரான சடை யப்ப வள்ளல் பேரன்பை நினைந்துருகி,

ஆன்பாலுந் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய் உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா ! கம்பன்
இறக்கும்போ தேனும் இனி ?

என்னும் பாலுந்தேனும் கனிரசமும் கலந்தினிக்கும் அருஞ் செய்யுளைக் கூறி அளப்பரும் இன்பத் தழிவில் வீட்டை அடைந்தனர். அவர் இறந்தமை கேட்டுத் தமிழ் நாடெல்லாம் கண்ணீர் உகுத்து நின்றது. புலவர் பலரும் விம்மி விம்மி அழுது பின்வரும் கையறம் பாடினர்.

இன்றோநங் கம்பன் இறந்தநாள் ! இப்புவியில்
இன்றோநம் புன்கவிகட் கேற்றநாள் !—இன்றேதான்
பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கும் நாள் !

தேனுந்து மாமலரோ, தெய்வத் திருவமுதோ,
வானுந்து செல்வ வளநகரோ,—பானுந்து
தீம்பழமோ, காதற் சிறந்தநாள் சுவைமொழியோ,
பாம்புகழார் கம்பனரும் பாட்டு !

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

3. ஒட்டக்கூத்தர்

'சென்று செவியளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.'

இஃது ஒட்டக்கூத்தரைப் பற்றிப் புலவர் ஒருவர் பாடிய பாட்டு; கூத்தர் பாட்டின் பான்மையினை இனிது தெரிவிப்பது. அவர் பாடல்கள் எப்பொழுதும் கற்பவர் நெஞ்சகத்தே பொதிந்து இன்பத்தை நிறைக்கும் என்பதை இப் புலவர் குறிப்பிடுவதால் அவர் வாக்குவன்மையும் புலமைத் திறனும் நன்கு புலப்படும். கல்வியிலே பெரிய கம்ப நாடரைப் போன்றே இவ்வண்டமிழ் வாணரும் முடியுடை மன்னரால் பெருமை பெற்றுச் சோழ வேந்தர் அவைக் களப் புலவராக வீற்றிருந்து நாட்கவி செய்து நவம் பாடி வந்தவராவர். இத்தகைய செந்தமிழ்ச் செல்வர் சோழ வள நாட்டின்கண் மலரி என்னும் அரும்பதியிலே செங்குந்தர் மரபுக்குத் திலகம் போலவும் செந்தமிழ்த் திருமகளுக்குத் தவச்சேய் போலவும் பிறந்தனர். பிறந்த இவ் வருந்தவ மைந்தர்க்கு இவர் பெற்றோர் திருவம்பலத்திலே இன்பக் கூத்தியற்றும் இறைவனார் திருநாமத்தைக் கூத்தர் எனச் சூட்டினர்; இப்பெயர் கூத்த முதலியாரெனவும் வழங்கும். இவர் தந்தையார் வழிவழி வந்த சைவ மரபைச் சேர்ந்தவ ராதலின், இவருக்கு இளம் பருவத்திலேயே ஆளுடை பிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள் முதலியோர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகளைப் பண்ணுடன் பயிற்றுவித்தனர். கூத்தர் அவற்றையெல்லாம் மிக விரைவிலே கற்றுக் காண்போர் அனைவரும் வியக்குமாறு சாலவும் தெளிவாக எடுத்துப் பாடி அவர் எல்லோரையும் இன்ப மகிழ்ச்சியிலே மலரச்

செய்தனர்; பின்னர்த் தொல்லாணை நல்லாசிரியர் ஒருவரை அடைந்து, சங்கச் செய்யுட்களையும், ஐம்பெருங் காப்பியங்களையும் இலக்கண நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுத் துறைபோயினர். அக்காலத்து வழக்கம்போலக் கல்வி நிரம்பிய கலைவாணர் கவிவாணராகத் தமிழ்ச் செய்யுட்கள் செய்யத் தலைப்பட்டுப் பாடிவருவாராயினர். இவருடைய பாக்களில் உலக நடையைக் கடந்த வருணனைகள் அமைந்திருத்தலை யறிந்த அறிஞர் இவருக்குக் 'கௌடப் புலவர்' எனப் புகழுரை வழங்கலாயினர். அன்றியும் இவர் மிக விரைவிலே பல கவிகளை எளிதிலே தொடுப்பதைக் கொண்டு இவருக்குக் 'கவிராக்ஷதன்' என்ற பட்டமும் கிடைத்தது. பின்னர்க் கூத்தர் வெண்ணெய் நல்லூரிலே வாழ்ந்திருந்த சடையப்ப வள்ளலாருக்குத் தந்தையாராகிய சங்கர முதலியாருக்கு உதவித் தொழில் புரிந்துவந்தனர். அவர் இவருக்கு வேண்டிய துப்புரவுகளை வழங்கி மிடி என்னும் பகைவன் தலைகாட்டாதொழியச் செய்தனர்; புலவர் அவர் செய்ந் நன்றியைப் பாராட்டி நாலாயிரக் கோவை என்னும் ஒரு நூலை இயற்றினர்.

அப்பொழுது விக்கிரம சோழன் என்பவன் சோணாட்டிலே செங்கோல் ஓச்சி வந்தான். அவனை அடைந்து கூத்தர் தமது புலமையின் ஆழத்தையும் அகலத்தையும் விளங்கிக் காட்டலும் அவன் அவரைத் தனது ஆஸ்தான வித்துவானாக அமர்த்திக்கொண்டு சிருஞ் சிறப்புஞ் செய்து கம்பளம், குண்டலம் முதலிய பல வரிசைகளை வழங்கினான். அவற்றைப் பெற்றுக்கொண்ட கூத்தர் பின்வரும் வகுப்புச் செய்யுளைக் கூறினர்.

இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுமுன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
நடுக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
திருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன

படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலங் கலிக்கச் சங்கினம்
கவிக்குப் பஞ்சரங் கலிக்கத் தொங்கலே.

இங்ஙனம் சோழன் அன்பும் ஆன்ற மதிப்பும்கொள்ள வேத்தவை வீறுபெற நின்ற கூத்தருக்கு வாணியினருளும் வாய்ப்பதாயிற்று. ஒருநாள் கூத்த முதலியார் உறங்கிக் கொண்டிருக்கையில், நாமகளார் தம் முன்னர்த் தோன்றி வாயிலே திருவாயின் கண்ணிருந்த தம்பலத்தை உமிழ்ந்து சென்றதாகக் கனுக் கண்டனர். அது கனவே யாயினும் நனவேபோல உண்மையாகத் தம்பலங் காணப்பட்டது. அன்று முதல் கூத்தர் நாவிலே தமிழ் கொழிப்பதாயிற்று; நாமகளாரும் குலவுவாளாயினள். கல்விக் கடலாகிய கூத்தர் கலைமகள் கடைக்கணோக்கும் பெற்றமையால் 'அரும்பைத் தோள்ளாயிரம்' என்னும் அரிய நூலைச் செந்தமிழ்த் தெய்வ மணங்கமழச் சுவை யமுதென யாவர் செவியும் நாவும் நயக்கப் பாடினர். அப்பொழுது ஆண்டிருந்த விக்கிரமன் புலவர் பெருமானை நோக்கி, "அருந்தமிழ் செய்த பெருந்தவம் அனையீர், இந்நூலின் கண்ணுள்ள ஒரு கவியை ஒட்டப் பாடுவீராக," என்றான். உடனே கூத்த முதலியார்,

நடித்தது நச்சர வுச்சியின் உச்சி மதிலிலங்கை
இடித்தது வென்ற திருபது தோள்பதின் எண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்சென்டால்
அடித்தது பொற்கிரி விக்ரம சோழ அகளங்கனே!

என்று பாடிக் காட்டினர். அதுகேட்ட மன்னவன் வண்டமிழ்ப் புலவர் வன்மைகண்டு பேருவகை பூத்து ஒட்டப் பாடிய காரணத்தால் அவருக்கு ஒட்டக்கூத்தர் என்னும் பட்டத்தைத் தந்தான். பின்பு சின்னுட் செல்லக் கூத்தர்

அவ்வரையன்மீது ஓர் உலாப்பாட அவன் அவரை நோக்கி இரண்டு கண்ணிகளை இணைத்து ஒரு பாட்டாகப் பாடச் சொன்னபோது அவர் காலந் தாழ்த்தாது,

கையும் மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே!—வையம்
அளந்தாய் அகளங்கா ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.

என்று முடித்துக் காட்ட வளவன் மகிழ்ந்து பல விருதுகளை அளிப்ப, அவற்றை நோக்கிக் கூத்தர் மனமுருகித் தமது பணிவு தோன்றவும் ஞானசம்பந்தப் பெருமான் அகத்திய முனிவர் முதலியோர் கல்வி அகற்சியும் பெருமையுந் தோன்றவும் மேலே வரும் பாவை அறைந்தனர்.

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
  பைம்பொற்று ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
  வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மானு பரனே!
முத்தப்பந் தரினிற்குங் குருவுக்குஞ் சினவேல்
  முருகற்கும் பொதியக்கோ முனிவர்கும் பதுமக்
கொத்தற்குஞ் சடிலக்குந தளருக்கும் அல்லால்
  கூழைத்தன் டமிழர்க்கேன் கொடியுங்கா ளமுமே!

சிறிதுகாலஞ் சென்றபின் விக்கிரம சோழன் விண்ணுலக வாழ்வை யடைந்து வானவர்க்கு நல்விருந்தாயினன். அவன் அருமை மைந்தனாகிய குமார குலோத்துங்கன் அரசுரிமையைக் கைக்கொள்ள வேண்டியவனானன். அவனோ கூத்தரோடு நீங்கா நிழல்போல உறைந்து, செந்தமிழ் நூல்கள் பலவற்றையும் அவர்பால் உணர்ந்தவன்; பன்னூற் புலமையும் வாய்ந்து அவற்றின் இனிய சுவையை நன்கு நுகர்ந்தவன்; பாடும் வன்மையும் பெற்றவன்; கூத்தரை ‘அப்பன் அம்மை ஐயன்’ எனக் கொண்டவன். அத்தகைய அரசிளங்

குமரன் முடிசூட்டு மங்கள நாள் எய்தியது. அரசரும் புலவரும் பட்டவர்த்தனரும் நிறைந்திருந்தனர். பட்டாபிஷேகம் மிகச் சிறப்பாய் நிறைவேறியது. அப்பொழுது அந்தணர் சேடை அரிசி தூவிப் பல்லாண்டு கூறினர்; புலவர் வாழ்த்துப் பாடினர்; அச்செவ்வியிலே தமது அருமை மாணவனை வாழ்த்த வேண்டி ஒட்டக்கூத்தர் புன்னகை பொலியும் இன்முகத்தோடும்,

> ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
> நீடுங் குடையிற் றரித்த பிரானென்பர்

எனத் தொடங்கிப் பாடி வருதலும் குலோத்துங்கன், தன் ஆசிரியர் தன்னை ஏத்துதல் தகாதென உன்னி, உடனே அச்செய்யுளை இடைமறித்து,

> —நித்தம்நவம்
> பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
> சூடுங் குலோத்துங்க சோழன்என் றேஎன்னைச் சொல்லு
> [வரே!

என முடிக்க அரசிளங்கோவின் அறிவின் நுட்பத்தை அனைவரும் வியந்தனர். குமார குலோத்துங்கன் அரசு கட்டில் ஏறியதும் கூத்தருக்குப் பெருமையும் செல்வாக்கும் ஒருங்கே ஏறின. அவரைக் கண்ணெனக் கருதி வந்தான் அரையன். அப்பொழுது ஒருகால் சோழன் அவருக்குக் கைகொடுத்து வரவேற்கப் புலவர் பெருமான் உள்ளம் பூரித்து,

> கொலையைத் தடவிய வைவேல் அரக்கர் குலமடியச்
> சிலையைத் தடவிய கையே இதுசெக தண்டத்துள்ள
> மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்த ஒன்னார்
> தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே

என்று கூறி, அவன் கைத்தலத்தின் மேன்மையைப் பாராட்டினர். அரசன் செண்டாடுகின்ற வெளியிலே ஒரு நாள் பரியிவர்ந்த வனப்பைக் கண்டு, கூத்தர்

கண்டன் பவனிக் கவனப் பரினெருக்கால்
மண்டுளங் காதே இருந்தவா—கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை.

என்ருெரு வெண்பாவைப் பாடினர். பின்னெருகால் சோழன் தனது பட்டத்து யானையின் நிகளத்தை விடுத்த போது பாவலர் தலைவர்,

இன்னங் கலிங்கத் திகல்வேந்தர் உண்டென்ரே
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா ! உன்றன் அயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு ?

என்றும் அருங்கவியை அணியுடன் பாடினர்.

இங்ஙனம் கோவை, உலா, அந்தாதி முதலிய அரிய பிரபந்தங்களை இயற்றியும் நாட்கவி பாடியும் 'கோவை உலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்' எனச் சிறப்புப் பெற்று வாழ்ந்துவரும் கூத்தர் ஒருகால் இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லாவிலே உள்ள திரிபுவனம் என்னும் ஊருக்குச் சென்று ஆங்கே தமக்கு இன்னுயிர் நண்பரும் செல்வத் திருமகனுருமாகிய சோமன் என்பவர் இல்லத்தே விருந்தினராய் அமர்ந்திருந்தனர். அப்பொழுது ஆங்கு வைகிய செங்குந்தர் பலர் அவரை அடைந்து, வணங்கிப் பல்லாற்ருனும் புகழ்ந்து நின்று, "எம் குல விளக்கே, கல்விக்கடலே :நமது குலத்தின் பெருமை உலகெங்கும் ஒளிருமாறு ஓர் அரிய பிரபந்தம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பப் பாடித் தரல் வேண்டும். அங்ஙனஞ் செய்யின் தமிழுள்ளவரை நங்குலப் பெருமையும் விளங்கும்," என மன்ருடிக் கேட்டுக் கொண்டனர். கூத்தருக்கோ அங்ஙனம் தாம் பிறந்த குலத்தைச் சுட்டி ஒரு நூல் யாத்தல் தகுதியாகப் புலப்படவில்லை. அதனுல் அவர் அவரை

நோக்கி, "குல முதுமக்களே, ஒருவன் தன் செய்கையாலேயே மேம்படவேண்டும்; உயர்குலத்திலே பிறந்துவிட்டால்மட்டும் அமையாது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'

என்பது தெய்வப்புலவர் வாய்மொழியன்றோ? அன்றியும் ஒரு குலத்தைக் குறித்துச் சிறப்பித்துப் பாடவேண்டுமாயின் வேறு குலத்திலே பிறந்த ஒருவரே செய்யவேண்டும். தங்குலத்தைத் தாமே புகழ்தல் இழிவின்பாற்படுமே அன்றி உயர்வின் பாற்படாது" என இடித்துரைத்தனர். இவை யனைத்தும் கேட்டும் அவரெல்லாம் குலாபிமானம் மிக்கவர்களாதலின் அவர்கள் மனம் திரும்பவில்லை. அதனால் அவர்கள் மேலும் புலவர் பெருமானை வற்புறுத்தினர்; அப்பொழுது அவர் அவர்களைக் கடிந்துரைத்து வெறுப்புடன் வெளியேறச் செய்தனர். பின் கவிவாணர் மாலைப்பொழுதிலே திருவிடைமருதூர் என்னுஞ் சிவதலத்துக்குச் சென்று ஆங்கே எழுந்தருளியிருக்கும் ஆனந்தத் தேனைத் தம் இருவிழியாலும் ஆரப் பருகி மீண்டு வருங்கால், முன்னே இவரைப் பாடவேண்டித் திரும்பிய செங்குந்தர்கள் கூட்டமாகத் தொடர்ந்து, இவரை அலைக்கழிக்கப் போந்தனர். அது தெரிந்த ஒட்டக்கூத்தர் ஓடிச் சென்று திரிபுவனத்தை அடைந்து சோமன் மனையிலே நுழைந்தனர். அப்போது அவர் அத்தோன்றலைக் கண்டு தம்மைப் பழிகாரர் தொடர்ந்து வந்துள்ள செய்தியை அமைத்து,

'அடையென்பார் தள்ளென்பார் அஃபொன்றில் லாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேம்-கொடையென்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே! நின்குடைக்கீழ் [ருல்
வந்துய்ஞ்சோ மாதலான் மற்று.

என்னும் பாடலைப் பாடினர். அப்பொழுதும் பழிகாரர் புலவரை வெளியே விடுத்தாலன்றிப் போகேம் என்று குழுமியிருந்தவளவிலே சோமன் என்னும் அப்புனித குணச்செம்மல் தனது அருமைத் திருமகனைத் தன்குடிக் கொரு கொழுந்தெனவும் கருதானாகி ஓர் அகன்ற பேழை யிலிட்டு அவர்மாட்டீந்து, "நீவிர் செய்வன செய்ம்மின்," என்றான். அவர்களும் அன்னமே அப்பேழையை எடுத் துக்கொண்டுபோய்த் திறந்து பார்க்க அங்கே சோமன் உள்ளத்தெழும் அன்பொளி ஆயிரம் சோமர் ஒளியென ஒளிர்தல் கண்டு, அப்பெரியோன் பண்பைப் பாராட்டி அச்செல்வத் திருமகனைக் கொணர்ந்து, அவர் பொன் மனை யகத்தே விடுத்தனர். அவ்வினையெல்லாம் அறிந்த கூத்தர் சோமன் பேரறிவையும் உள்ள நிறைவையுங் கண்டு உள்ளங் குழைந்து, உடல் உருகி, என்பு கனிந்து,

தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் தானுரைப்ப
துன்னுடைய சீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்
சோமா! திரிபுவனத் தோன்றலே! நின்புகழை
யாமா ருரைக்க வினி ?

என்னும் யாப்பைக் கூறித் தமது அன்பின் யாப்பைப் புலப் படுத்தினர். அதன்மேல் அப்பழிகாரர் அவ்வள்ளலையே குறைதீர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அவரும் கூத்த முதலியாரைப் பாடும்படி வேண்டினர்; புலவரும் அதற் கிசைந்து தங்குலத்துப் படையாகிய ஈட்டியைச் சுட்டி, 'ஈட்டி எழுபது' என்னும் நூலைப் பாடி முடித்தனர். செங்குந்தர் யாவரும் பேருவகையில் திளைத்து இன்பக் களியாட்டயர்ந்தனர்.

அந்நூலிலே எழுவாய்ச் செய்யுள் பின் வருவது :

பூதலம் வாழ்க! குந்தர் பொலிவுடன் விளங்க! நான்கு
வேதம்எந் நாளும் ஓங்க! வேதியர் பசுக்கள் பல்க!

மாதவ வளவன் செங்கோல் வளமைகுன் ருது நிற்க!
வேதமே அறையும் பொன்னி உறைந்தயுஞ் சிறக்க மாதோ!

ஒரு சமயம் அரசன் மடையன் செய்த குற்றத்திற்காக அவனைத் தண்டஞ் செய்தான். அவனோ கூத்தர் திருவடிகளைப்பற்றிக்கொண்டு புலம்ப, அவர் அரையனைக் கண்டு பின் வரும் செய்யுளைப் பாடித் தண்டத்தினின்றும் அவனை மீட்பித்தனர்.

மீனகம் பற்றிய வேலையும் மண்ணையும் வேற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோ,பொருந் தாஅரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங்கனே!

மற்றொரு கால் மன்னவர் பெருமான் துலாபுருடதானம் செய்யக் கூத்தர் கீழே வருங் கவியை இசைத்தனர் :

தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத் [திடைவண்டு
உழுகின்ற தார்க்கண்டன் ஏறிய ஞான்றின் உவாமதிபோய்
விழுகின்ற தொக்கும் ஒருதட்டு; காலையில் வேலையில்வந்து
எழுகின்ற ஞாயிறொத் தான்குல தீபன் எதிர்த்தட்டிலே.

இவைபோன்ற கூத்தர் 'களி' என்னும் உறுப்பமைத்தும் துறையமைத்தும் சோழன்மீது பின்வரும் பாட்டுக்களைப் பாடினர் :

புள்ளிருக்குந் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
சுள்ளிருக்குங் கள்ளையுண்டுஞ் சோர்விலேம்-உள்ளபடி
சொல்லவா வாலி துரோபதையை மூக்கரிந்த
தல்லவா மாபார தம்?

என்று பெறுவேன்யான் ஈசன் திருமுடிமேல்
சென்றுவிளை யாடுகின்ற தீபமே—என்றும்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னிஅக ளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்?

ஒருகால் அரியைப் பாட வேண்டுமென்று சோழன் கேட்க அவன் விழைவு தீரப் பாடியது :

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினும் அவ்விடத்
[தன்
பேரே வருமென்ன பேறுபெற் றேன் பெரு நான்மறையின்
வேரே! மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடைந்த
காரே! கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே!

இனி, குமார குலோத்துங்கன் மணப்பருவம் அடைந்தான்; அவனுக்கு மணம் புரிவிப்பது புலவர் பெருந் தகையாராகிய கூத்தருக்குக் கடமையாயிற்று. ஏனெனில் விக்கிரம சோழன் தான் இறக்குந் தருணம் கூத்தரிடம் தாம் எங்ஙன மேனும் தன் புதல்வனுக்குப் பாண்டியன் மகளை மணம் புரிவித்துப் பாண்டிய நாட்டுக்கும் சோணாட்டுக்கும் நட்புச் செய்விக்க வேண்டுமெனத் தனது விழைவைக் கூறி உயிர் நீத்தான். அதனால் புலவர் கணிகளால் ஒரு நன்னாள் வரைந்துகொண்டு, வேந்தற்குரிய சிறப்புடன் பாண்டிய னுக்குத் தம் வருகையை முன்னரே அறிவித்த வண்ணம் அவன் நாட்டை அடைந்தனர். பாண்டியனும் எதிர் கொண்டு வரவேற்று அவருக்கு இனிய முகமன் வழங்கி நல்விருந்தென ஓம்பினன். பின் ஒட்டக்கூத்தர் வழுதி யைக் காணக் குறிப்பிட்ட நேரத்திலே சென்றார். சென்ற வர் தமிழ் நாடன் முகமலர்ந்து இன்னுரையாடச் சிறிது நேரம் அவனுடன் அளவளாவிப் பின் தாம் வந்த காரியம் இன்னதென வகுத்துரைத்தார். அது செவியிலே நுழைந் ததும் அரையன் கூத்தரை நோக்கி "புலவர் வேந்தே, சோழ மன்னர் பாண்டி வேந்தர்பால் மகட்கொடைக் குரி யரோ? அவருக்கு உரிய சிறப்புக்கள் யாவை?" என்று விளையாட்டாகக் குறு நகையோடு வினவினன். உடனே கவிஞர் காவலனைப் பார்த்து, "வேந்தர் வேந்தே, சோழ ரது பட்டத்து வாம்புரவியாகிய கோரத்துக்குக் கனவட்

டம் ஒப்பாகுமோ? 'கோனிலை திரிந்து கோடை நீடினுந் தான் நிலைதிரியாத் தண்டமிழ்ப் பாவை' யாகிய காவிரி நதிக்கு வைகையோ இணையாவது? சிவபெருமான் சூடுதற் குரிய ஆத்தி மலருக்கு வேப்பம்பூ நிகராகுமோ? செங்க திர்ச் செல்வற்குத் தேய்ந்து வளரும் தண்கதிரோ ஒப் பாவது? அதுபோலச் சூரிய குலத்துதித்த சோழருக்குச் சந்திரகுல மன்னராகிய பாண்டியர் ஒப்பாவரோ? வீரர்க் குள்ளே வீரன் என்று புகழப்பட்டவன் பாண்டியனே? புலிக்கொடிக்கு மீன்கொடி ஒப்பாகுமோ? ஊரெனப் படுவது உறையூர் என்று புகழப்பட்டது கொற்கையோ? இன்னோரன்ன காரணங்களால் சோணாட்டுக்குப் பாண்டிய நாடு ஒப்பாகாது," என்னும் பொருள் தோன்ற,

கோரத்துக் கொப்பாமோ கனவட்டம் அம்மானை!
    கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானை!
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானை!
    ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை!
வீரர்க்குள் வீரன் ஒரு மீனவனே அம்மானை!
    வெற்றிப்பு லிக்கொடிக்கு மீனமோ அம்மானை!
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ அம்மானை!
    ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானை!

என்றொரு பாட்டைப் பாடினர். அப்பொழுது அங்கே யிருந்த பாண்டியன் அவைப்புலவராகிய புகழேந்திப்புலவர் ஒட்டக்கூத்தரை நோக்கி, "முத்தமிழ் முனிவராகிய அகத் தியனார் அமுதூறும் தமிழ்மொழியை அறிந்தது பொதியி லன்றிச் சோணாட்டார் நேரிமலையின் கண்ணோ? எம்பெரு மான் அன்பர் பொருட்டுத் திருவிளையாடல்கள் புரிந்தது மதுரைமா நகரினன்றோ? திருமால் மச்சாவதாரங்கொண் டனரே யன்றி நீர் சிறப்பித்துக் கூறும் புலியாக அவதரிக்க வில்லையே? சிவபெருமான் திருமுடியை அணிசெய்வது திங்கட் கொழுந்தன்றிச் செங்கதிர்க் கனலியோ? திரு

ஞான சம்பந்தப் பெருமான் சமணரோடு வாது புரிந்த காலத்திலே திருப்பாடல் எழுதிவிட்ட ஏடு எதிரேற நின்றது வையையாறே? காவிரியோ? பேய்ப்பகையாவது வேப்பந்தாரோ? ஆத்தியோ? கடல் பணிந்தது பாண்டியன் கழலடிகளை யன்றிச் சோழன் பதங்களை அல்லவே. இக் கூறப்பட்ட காரணங்களால் பாண்டிய மன்னன் வீரம் சொல்லொணாது" என்னும் கருத்துக்களை அமைத்து,

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானை!
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானை!
திருநெடுமால் அவதாரஞ் சிறபுலியோ அம்மானை!
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை!
கரைஎதிரல் காவிரியோ வையையோ அம்மானை!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்மானை!
பாண்டியனார் பராக்கிரமம பகர்வரிதே அம்மானை!

என்ற செய்யுளைக் கூறிக் கூத்தர் வாயை அடக்கினர். அதன்மேல் ஒட்டக்கூத்தர் சோழனை மற்றோர் பாவால் உயர்த்த வேண்டி,

வென்றி வளவன் விரல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகிற் கிடான் கவசம்

எனக் கூறிய வளவிலே புகழேந்தியார்,

—துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று.

என்று பாடி முடிக்கக் கூத்தருக்குக் கோதிப்பு உண்டாயிற்று; புகழேந்திப் புலவர் கல்விச் செருக்குடையவரென்றும் தம்மைக் காட்டிக்கொள்ள ஆத்திரப்படுகின்றார் என்றும் எண்ணி வாளாயிருந்தனர் கூத்தர்.

பின்னர்ப் பாண்டியன் தங்குலத்து முதியோரை வருவித்து அவரிடம் சோழன் மகட்கொடை விழைந்தமையைக் கூற அவர்கள் யாவரும் இசைந்தனர். அந்தப்புறத்து மகளிரும் கோப்பெருந்தேவியும் மகிழ்வுடன் உடன்பட்டனர். அப்பால் வையை நாடன் சோதிடம் வல்லாரை விளித்து, "கடிமண நாள் குறிக்க," எனப் பணிப்ப அவர்களும் நன்னாள் ஒன்றை நன்காராய்ந்து குறித்தனர். உடனே திருமண ஓலை தீட்டப்பட்டது; அதனை ஒருமுறை இருமுறை புரோகிதர் வாசித்துக் காட்டி மஞ்சட் காப்பிட்டுப் புலவர் கையகத்தே தந்தனர். அவரும் அதனைப் பெற்றுக்கொண்டு பாண்டிநாட்டை விட்டகன்று சோழவள நாட்டைச்சேர்ந்து அரசர்பெருமான் குலோத்துங்கனிடம் தாம் சென்றது முதல் மீண்டதுவரை நிகழ்ந்தவற்றை யெல்லாம் நேரிற் கண்டாற்போல எடுத்துரைத்து, இறுதியில் குறை முடிந்ததைக் குறித்தும் கூறி இன்ப மகிழ்ச்சி எய்தினர். கோமகனும் கூத்தர் குறை முடிக்குந் திறனைப் புகழ்ந்துரைத்து, அவர் பேருவகை அடையச் செய்தான்.

பின் குறித்த நாளிலே குலோத்துங்கனுக்கும் பாண்டியன் பெருந்திருமகளுக்கும் கடிமணம் ஆலவாய் அரும்பதியிலே பல்வகைச் சிறப்பும் பொருந்த நடைபெற்றது. ஆங்குச் சின்னாட்கள் சோழன் வைகியிருந்து, வழுதியிடம் விடை பெற்றுத் தனது நாட்டுக்குத் தான் மணமுடித்த மங்கை நல்லாளோடும் அளவற்ற ஸ்திரீதனப் பொருளோடும் சென்றான். அப்பொழுது பாண்டியன் தனது இன்னுயிர்போல் இலங்கும் அருமை மகளை விட்டுப் பிரிய வருந்தி அவளுக்குத் தக்க துணையாய் இருப்ப, அவைக்களப் புலவரும் தன் செல்வப் புதல்விக்குத் தமிழ் செவியறிவுறுத்திய ஆசிரியருமாகிய புகழேந்திப் புலவரையும் உடனே செலுத்தினன். அவரும் மகிழ்வோடு உறை

யூருக்குச் சென்றனர். சோழனும் புதுமணம் புரிந்த பொற்கொழுந்துடன் பூஞ்சோலைகளிலும் வாவித் துறைகளிலும் மணற் குன்றுகளிலுஞ் சென்று விளையாடி இன்புற்றுத் திளைத்திருந்தான். புகழேந்தியாரும் இனிது காலங் கழித்தனர். இன்னணம் சில பகல் கழிந்தன.

ஒட்டக்கூத்தர் இதுகாறும் சோணாட்டிலே கவிச்சக்ரவர்த்தி என்னும சிறப்புப் பெயர் பெற்றுத் தமக்கு ஒப்பாருமிக்காரு மில்லாமல் புலமைத் தனியாசு செய்துவந்தவர்; அவருக்குத் தம்மைப் போலவே கல்வியிற் சிறந்து, கவி செய்யவல்ல புகழேந்திப் புலவர் ஆண்டுப் போந்திருப்பது பிடிக்கவில்லை; அன்றியும் அவர் அரசன் கோப்பெருந்தேவிக்கு ஆசிரியராய் இருப்பதால் ஒருகால் தம்முடைய செல்வாக்குக் குறைந்துவிடுமோ என்றும் அவர் அஞ்சினர்; அதனல் அவர் தக்க காலம் வாய்க்கும்வரை காத்திருந்து, புகழேந்திப் புலவரைச் சிறைக் கோட்டத்தே செலுத்தினர்; அரசி இதனை அறிந்திலர்; குலோத்துங்கனே கூத்தர்பால் அளவுகடந்த விருப்பும் புகழேந்தியர்பால் வெறுப்பும் உடையவன் ஆதலால் வாளாவிருந்தான். சிறைப்பட்ட புலவர் அவ்வழியே தெண்ணீர் திரட்டச் செல்லுந் தையலர் விழைந்து படிக்க அல்லியரசி மாலை, பவளக்கொடிமாலை முதலிய சில நங்கைப் பாட்டுக்களை எளிதாகப் பாடி அவரிடம் அளித்தனர்; அவர்கள் அவற்றைப் படித்து இன்புற்றுப் புலவருக்கு வேண்டும் பொருளைக் கொணர்ந்து கொடுத்து வந்தனர். இங்ஙனமிருப்புழி ஒருநாள் உலாப் போந்த குலோத்துங்கன் புகழேந்திப் புலவரைக் கண்ணுற்றுத் தன் மருங்கே இருந்த கூத்தரை நோக்கி, "இவர் பெரும் புலவர் அல்லரோ?" என்றான். அது பொறாத ஒட்டக்கூத்தர் உடனே,

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன்? கனைகடலின்

பீனிற்கு மோஅந்த வெங்கட் சுறவின்முன் ? வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோன் உதயத்திற் றூர்மன்னனே ?

என்றொரு செய்யுள் இசைத்தனர். உடனே புகழேந்திப் புலவர் இப்பாட்டை அவ்வாறே தமக்குத் திருப்பிப் பாடிக் கூத்தர் நாவை அடக்கினர்.

பின் புகழேந்தியார் தம்முடனே சிறையிலே அடைக்கப் பட்டிருக்கும் கல்வி சாலா இளம்புலவரை யெல்லாம் விளித்து அவருட் சிறந்த அறிவுடையார் சிலரைத் தேர்ந்தெடுத்து அல்லும் பகலும் அவர்தமக்கெல்லாம் செந்தமிழ் இலக்கிய இலக்கண நுணுக்கங்களை யெல்லாம் புகட்டி வந்தனர். அப்போது சிறைக்கோட்டம் தமிழ்க் கோட்டமாய்க் கல்வி மணம் வீசிக் கவினுற்றுத் திகழ்ந்தது. அவரும் புலமை மிக்கு விளங்கிக் கூத்தர்மேற் பாய்வதற்குக் காலங் குறித்திருந்தனர்.

'இரண்டொன்று முடிந்து தலையிறங்கப் போட்டு, வெட்டுதற்கோ கவி ஒட்டக் கூத்தனில்லை' என்று பிற்றை நாட்பாவலர் ஒருவர் பாடியாங்கு ஒட்டக்கூத்தர் நிரம்பாப் புலமையாளரைக் கடுமையான வினாக்களை எழுப்பி அவற்றிற்கு அவர் விடையிறுத்திலரேல் சிறையிட்டு, நாமகள் திரு முன்னர் நவராத்திரி விழாவிலே அவர் தம் குடுமியைக் களைவித்துச் சிறுமை செய்தல் இயல்பு. இவ்வழக்கப்படியே கூத்தர் சிறைக்கோட்டத் திருந்த புலவரை ஒருவர் பின் ஒருவராகத் தருவிக்க, அவர் யாவரும் பெருமிதத்தோடு அச்சஞ் சிறிது மின்றி மதம் பொழியும் களிறுகள்போல நிற்றலைக் கண்டு வெருவி, அவருடன் சில உசாவத் தொடங்க, அவரெல்லாம் கூத்தர் குலைநடுங்கும் வண்ணம் பாட்டால் விடைபகர்ந்து, கூத்தர் பாடிய நூலுக்குக் குற்றங் கூறவுந் தலைப்பட்டனர்; இவையனைத்தும் புகழேந்தியால் நிகழ்ந்தன என்பதை அறிந்த புலவர் அவரை யெல்லாம் சிறைவீடு செய்து செலவிட்டுப் புகழேந்தியாரை

மட்டும் சிறையிலேயே வைத்தனர். பின்னர்த் தேவிக்கு இச்செய்தி எட்ட அவள் குலோத்துங்கனோடு ஊடினள். அவ்வூடலின் காரணத்தை அறிந்த அரசன் புகழேந்தியாரைச் சிறை மீட்டுச் சிறக்கச் செய்து, அவ்விரு புலவர்க்கும் அன்பு அரும்பும் வகைபுந்து அன்னூர் இகலின்றி நகலுடன் வாழச் செய்தான்.

அப்பாடல்களுட்சில வருமாறு :

கவிகளை அறுத்தபோது புலவரெல்லாம் வெருளப் பாடியது.

பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்பே
தாட்டுக் கடற்புலி அஞ்சலன் றோஅறுத் தக்கிடந்த
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் றொருகுத்துமள்ளர்
மேட்டுக் குவாலிடும் பொன்னிநன் னாடுடை வேற்கண்டனே.

தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது பாடியது.

கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன்வந்தான்
இரத்துங் கபாடம் இனித்திறப் பாய்பண் டிவனணங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங்கல் யாண புரத்தினுமே.

கவிஞரை வெட்டவேண்டாவென்று செந்தன்றவாண
முதலியார் பாடியது.

கோக்கண்ட மன்னர் குரைகடல் புக்கிலர் ; கோகனகப்
பூக்கண்ட கோட்டியும் பூவா தொழிந்தில ; பூவில் விண்
[ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோகவி பாடிய பாவலரே ?

இப்பொழுது புலவர் இருவரும் வேந்தன் அவையை அணி செய்து நாட்கவி பாடிவந்தனர்; சோழன் அவை சங்க மண்டபமாய்த் துலங்கியது. சிறிது காலஞ் சென்றதும் புகழேந்திப் புலவர் மன்னர் மன்னனிடம் விடைகொண்டு, மள்ளுவ நாட்டை அடைந்து அங்கே அரசு புரிந்திருந்த

சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசன் தலைநகராகிய முரணை நகரிலே உறைவாராயினர்.

ஒருகால் சோழனும் கூத்தரும் திருநெய்த்தானம் என்னும் சிவத்தலத்துக்குச் சென்று வணங்கி மீள்கையில் சோழன் புலவரை, அப்பெருமானைச் சுட்டி ஒரு பாப் புனைக எனலும், கூத்தர்,

விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டால் நட்டார் சுட்டூர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் சிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சு
முப்பா டத்தி வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

என்றொரு தொடர்பைச் சொற்றனர். மற்றொருகால் அங்ஙனமே இருவரும் திருக்குறுங்குடி என்னுந் திருப்பதிக்குச் செல்லச் சோழன் வேண்டுகோளின்படி பாவலர் கூறியது:

திக்குளெட் டுக்கயந் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கனுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமுக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே.

பின்பு கூத்தருக்கு முதுமைப் பருவம் வந்தடைய, அவர் அரசவைக்கு வருதல் தவிர்ந்து, அல்லும் பகலும் சிவபெருமான் திருவடிகளையே வழுத்திக்கொண்டிருந்து சிவஞானச் செல்வராய் அம்பிகை பாகன் அழகிய சேவடி நிழலை அடைந்தனர். இவர் இறந்த ஞான்று புலவர் ஒருவர் பாடியகையறம் :

'நூற்றெண் பதின் காதம் நுங்கு நறுந்தமிழின்
ஏற்றமினி என்னாய் இயலுமே—போற்றும்
புவிராசர் யாரும் புகழ் ஒட்டக் கூத்தக்
கவிராசன் காட்சியிலாக் கால்?

———

4. குமரகுருபரர்

செந்தமிழ் வளநாடெனப் பேர்பெற்றது பாண்டி நாடே; சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது தென்னவன் தனிப்பெரு நாடே; முத்தமிழ் பழுத்த வித்தக முனிய ராம் அகத்தியனார் அமர்ந்தினிதிருப்பதும் அரும் பாண்டி நாடே; சொக்கப் பெருமான் அளவிலாத் திருவிளையாடல் களை அடியார் பொருட்டு நிகழ்த்தி யருளியதும் வழுதி நாடே; அந்நாட்டிலே தாம்பிரபாணி என்னும் அரிய நதி ஓடிச் செழுமையை நல்கும்; அவ் யாற்றின் பெருமை யினை அனைவரும் வியந்தோதுவர். அத்தகைய அழகிய நதியின் ஒரு மருங்கிலே ஸ்ரீ வைகுண்டம் என வழங்கும் ஓரூர் உண்டு. அதற்குக் கைலாசபுர மென்றும் மற்றோர் பெயர் வழங்கும். அப்பதி தாம்பிரபாணியின் பாய்ச்ச லால் முப்போகம் விளைந்து எப்போதும் பச்சென்றிருக் கும்; அங்குமிங்கும் வாய்க்கால்களில் அரும்புனல் ஓடுவ தும், புலங்களில் பயிர் கொழுமையுடன் வளரும் காட்சி யும், ஆங்கே கொக்கு, நாரை முதலிய பறவைகள் இரை தேடும் நேர்மையும், தென்னை, வாழை, மா முதலிய சோலை களின் வளங்களும், வாவி, குளம், குட்டை முதலியன யாவும் தாமரை, குவளை, ஆம்பல் முதலிய மலர்கள் நிறைந்து நிற்றலும் ஆகிய காட்சியில் அளவிலா மகிழ்வை அனைவோ ருக்கும் ஊட்டும் நீர்மையன. அவ்வூரிலே வேளாளர் உழ வுத் தொழிலால் மிகுந்து, செல்வம் நிறைந்து, தமது கட மைகளைச் செவ்வனம் ஆற்றிச் செந்தமிழ் நூல்களை ஐயந் திரிபற ஆராய்ந்து கற்றும், கல்வி வல்லோரைப் பொருட் குறைபாடின்றிப் பாதுகாத்தும் வந்தனர். இவற்றால் அங் குத் தமிழ் மடந்தை தனி நடம் புரியலானாள்; சைவத் திருவாளர் செழித்திருந்தமையான் சைவத் திருமகளும் தாண்டவம் செய்தனள். ஆண்டு ஏறக்குறைய முந்நூறு

ஆண்டுகட்கு முன் வேளாளருக்குத் திலகம்போலத் திகழ்ந்து சிறந்திருந்தார் சண்முக சிகாமணிக் கவிராயர் என்பவர். அவர் செந்தமிழ்த் துறை யனைத்தும் தோய்ந்து, கவி இயற்றும் வன்மை பெற்றிருந்தமையான் யாவரானும் கவிராயர் எனச் சிறப்பாக அழைக்கப்பட்டார். அவருக்குத் தெய்வபக்தி நிரம்பவும் உண்டு; அடியாரிடத்தும் ஓரறி வுயிரிடத்தும் உள்ளன்பு கொண்டவர்; அவர் ஒழுக்கத்தை உயிரென ஓம்பும் ஒள்ளியர்; எல்லாம் சிவன் செயலெனக் கொள்ளுந் தெள்ளியர்.

இவர் இல்லறமே நல்லறமெனக் கடைப்பிடித்து அன்பு, இன்சொல், விருந்தாற்றல் முதலிய அருங்குணம் வாய்ந்த சிவகாமசுந்தரியார் என்னும் ஒரு பெண்மணியை அங்கியங்கடவுள் சான்றாக மணம் புரிந்து வாழ்ந்து வந் தார். அவ்வம்மையார் கற்புக் கடம் பூண்டு தற்காத்து, கொண்டான் குறிப்பின் வழி யொழுகிக் கவிராயருக்கு மூவா மருந்தாய் அன்பும் அருளுந் தாங்கி மனையறம் நடாத்தி வந்தனர். இவ்விருவருக்கும் நெடுங்காலம் சென் றும் புதல்வர்ப் பேறு உண்டாகவில்லை; அதனால் கருத் தழிந்த கவிஞர் தமது அறச் செல்வியை அருகிருத்தி அவ ரது குறுநகை பொலிந்த திருமுகத்தை நோக்கி, "கண் மணிபோல்வாய், நமக்கு மணமாகி இத்துணைக் காலமாகியும் இறைவன் இனிய மைந்தன் ஒருவனை ஈந்தானில்லை; மகவு இளமையில் மாசுமறுவற்ற தனது ஒளி முகத்தாலும் தேனினும் இனிய மழலை மொழியாலும் பெற்றோர்க்கு இன்பத்தை ஊட்டும்; வளர்ந்த பின் தளர்ந்த பெற்றோரை ஆலின் விழுதெனத் தாங்கும்; இறந்த பின் ஈன்றோருக் குரிய அருங் கடனை ஆற்றும்; அத்தகைய பொன்போன்ற சேயைப் பெறாத நாம் பிறந்தும் பிறவாதவ ராயினோம்; இதனை உனக் குணர்த்தித் துன்புறுத்த நான் எண்ணிலன்; ஆனால் சோதிட நூல் வல்லாரைக்கொண்டு நான் ஆராய்ந்து

பார்த்ததில் நமக்கு உலகம் உவக்கத்தக்க மைந்தர் இருவர் தோன்றுவரென்றும், அவ்விளைஞர் இருவரும் முருகவேளது முழுதருள் பெறுவரென்றும் கூறினர். அதனால் நாம் இன்று முதல் திருச்செந்தூர்க் கடலருகே நிற்குங் கரும்பாகிய செவ்வேளின் திருவடி மலர்களைத் தலையன்புடன் வழுத்தி அவனுக்குரிய நோன்புகளை வழுவாது நோற்றல் வேண்டும் என்பது கருதியே இதனை உன்பால் மொழிந்தேன்," என்று தெளிந்துரைத்தனர். அவர் இவற்றைச் சொல்லி வருந்தோறும் சிறிது சிறிதாகக் கண்ணீர் வடித்து நின்ற சிவகாமசுந்தரியார், பின்னர் தமக்கு மகப்பேறு வாய்க்கும் என்பது கேட்டு உவகை பூத்துத் தம் கொழுநர் வழியொழுக ஒருப்பட்டனர். அது முதல் இவ்விருவரும் அறுமுகப்பெருமான் அடிக்கமலங்களை அகத்திருத்தி அல்லும் பகலும் உருகிப் பல அரிய நோன்புகளை நோற்று வருவாராயினர்.

இங்ஙனம் சில திங்கள் கழிந்தன; சிவகாமசுந்தரியார் கருவுற்றுச் செல்வன் ஒருவனை ஈன்றெடுத்தார். அச்சேய் பரந்த நெற்றியும் அன்பொழுகும் கண்களும் அகன்ற மார்பும் நீண்ட கைகளும் உடையதாய், காண்போருக்கு ஆர்வ மிகுதியை அளித்தது. அப்போது அம்மகவைப் பெற்றோரும் மற்றோரும் களிப்பெனுங் கடலுள் மூழ்கிக் கிடந்தனர். அம்மகவு குமரவேள் திருவருளாற் பிறந்த காரணத்தால் குமரகுருபரன் எனத் திருப்பெயர் சூட்டினர் தந்தையார். அது கல்வியின் கொழுந் தெழுவதென வளர்ந்து மூவாட்டைப் பருவத்தை அடைந்தது; அடைந்தும் அச்செல்வன் வாய்திறவாமை கண்டு கவினர் தம் இன்னுயிர்ப் புதல்வன் மூகையோ என ஐயுற்று அல்லல் உழந்தார். அப்போது அவரைச் சேர்ந்த உறவினரும் நண்பரும் அவருக்குப் பலவாறு தேறுதல் செப்பினர்: ஒருவர், "இவன் இயற்கை ஊமை யல்லன்; செயற்கை

ஊமை; அது விரைவில் நீங்க இவன் ஒரே மட்டாக நன்ருகப் பேசத் தலைப்படுவான்; இது போலப் பலரைத் தெரிந்துள்ளேன்," என்றனர். மற்ெருருவர், "இவனுக்குக் காது கேளாமையால் பேச முடியவில்லை; அதற்கு யாதேனும் தக்க மருந்து செய்து தந்தால் அவன் தேங்காய் உடைத்தாற்போலப் பேசுவான்," என்றனர். வேருெருவர், "அற்றன்று, முருகனுக்கு முடி கொடுப்பதாக வேண்டிக்கொண்டால் இவன் திண்ணமாய்ப் பேசுவான்; என் சொல்லை நம்பி உடனே கப்பம் எடுத்துக் கட்டுங்கள்," என்ருர். இங்ஙனம் பலரும் பல திறப்படப் பேசுதலைக் கேட்ட தாய் உள்ளங் குழம்பி, உடல் சோர்ந்து, நாவறண்டு பெருமூச்செறிந்து, "அந்தோ! யாது செய்வேன்? என் அருமை மகன் மழலை மொழியைக் கேட்கலாம் கேட்கலாம் என்று ஆசைகொண்டிருந்தேனே! அது கேட்க, முடியாத பாவியானேனே! நான் செவி படைத்தும் அவை பயனற்ற மரச் செவி ஆயினவே! உலகமெல்லாம் என் ஆருயிர்ப் புதல்வனை ஊமை என்றழைக்க நான் எங்ஙனம் பொறுப்பேன்? உயிர் துடிக்கின்றதே ஓ தெய்வமே அருட்பெருங்கடலே, அன்பின்பிழம்பே, ஏழைபங்காளா, என் உயிரினும் இனிய மகன் வாய்திறந்து, "அம்மா, அப்பா," என்று எப்போது அழைப்பான்? எனக்கு நெடுநாட் புதல்வர்ப் பேறில்லாதிருந்த அருங்குறையினும் இது பெருங் குறையாயிற்றே! இஃது உன் அருளுக் கழகாமோ? அடியோங்கள் தீவினையைத் தீர்த்துக் கடைக்கணித்தருளல் வேண்டும்," என அழுது அரற்றி வருந்தினர். அவரைச் சண்முக சிகாமணிக் கவிராயர் தேற்றி, 'நம் பெருமான் நமக்கு அருள் செய்வான்; அவன் அழகிய அருள் நம்மைக் கைவிடா' தென்றனர். அவ்வாறு ஈராண்டு கழிந்தன. சிறுவன் வாய் திறந்தபாடில்லை; காதும் கேட்டபாடில்லை. என் செய்வார் பாவம் கவிராயர்!

ஒருநாள் அவர் தம் மனைக்கிழத்தியை அழைத்து, "மாதரசி, இச் சிறுவன் ஊமையாய் இருத்தலைக் காண என்னால் இயலாது; நாம் இவனை எடுத்துக் கொண்டு திருச்செந்தூருக்குச் சென்று அங்கே பிள்ளைக் கலிதீர்த்த பெருமான் திருமுன்னர் விட்டு நாற்பது நாள் அரிய விரதம் அநுட்டிப்போம்; அவ்விரத முடிவிலும் அவன் பேசாதொழியின் நாம் அவன் சந்நிதியிற்றானே உயிர்விடக் கடவோம். இதுதான் செய்யத்தக்க கருமம்," என்று உறுதி மொழிந்து தம் வாழ்க்கைத் துணைவியாரை அழைத்துக் கொண்டு செந்திலம்பதியை அடைந்தார். அடைந்தவர் நாடோறும் வதனாரம்பத்திலே நீராடி அறுபோதும் வழுவாது ஐயன் வழிபாடு புரிந்து, எடுத்த கருமத்தைத் தொடுத்து முடித்தனர். அவர்கள் குறித்துக்கொண்ட நாற்பதாம் நாள் தோன்றும் முன்னாள் வைகறையிலே எம் பெருமான், கோயில் அருச்சகர் வடிவந் தாங்கி ஆங்கே கிடத்தப்பட்டிருக்கும் மகவின் அருகே சென்று அதனைத் தட்டி எழுப்பி, "அப்பா குமரகுருபரா, இன்று தொட்டு நீ என் அடியன் ஆயினை; உனக்குச் செந்தமிழ்ப் புலமையும் உண்மை ஞானமும் உடனே உண்டாகும்; அவற்றால் நீ பிறவியின் பயனை எய்துவாய்; விரைவில் நமது விசுவரூப தரிசனத்துக்கு வருவாயாக," என்று அருளிச் செய்து திருவுருக் கரந்தனர். குமரகுருபரர் இன்பமேலீட்டால் உவகைக் கண்ணீர் சொரிந்து, மறைந்தருளிய பெருமான் சென்ற வழி நோக்கி, தாயைப் பிரிந்த கன்றென விம்மி விம்மி அழுது, தம் பெற்றோரை அணுகி நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தனர். அவர்கள் தம் மகன் பேசத் தலைப்பட்டதைக் கேட்டு இரு செவியும் குளிர்ந்து அவனைக் கட்டியணைத்து, முருகவேள் அருளுக்கு உருகித் தம் புதல்வனோடு வதனாரம்பத்திற்குச் சென்று முழுகி, விசுவரூப தரிசனம் செய்தனர். குமரகுருபரர் வாயிலே தேனை

வடித்துச் சொரிந்தாற்போலச் செந்தமிழ் பாக்கள் உதிக்கலாயின. அவரும் அவற்றைப் பாடிப் பாடி உருகுவாராயினர்.

இங்ஙனம் திருவருள் பெற்ற ஊமை உற்பாத பிண்டமாயினமை கேட்டாரெல்லாரும் வியப்புற்றனர். மற்றை நாட் காலையிற் குமரகுருபரர் நீராடி, வெளியது அணிந்து, வெண்பொடி பூசி இறைவன் திருமுன்னர்ச் சென்று கைகூப்பித் தொழுது வலம் வருகையில், எம்பெருமான் திருவருளால் விசும்பினைக் கிழித்து ஓரொலி எழுந்தது; அது குமரகுருபரரை விளித்து, “அன்பனே, நீ வட நாட்டுக்குச் செல்லுங்கால் எங்கே உன் சொல் தடைப்படுமோ அங்கே ஞானோபதேசம் பெறக்கடவை,” என்றது. அந்த வாணியைச் செவிமடுத்த சிறுவர் தமது உள்ளக் கருத்து முற்றுப் பெற்றமைக்கு மகிழ்ந்து, அவ்விடம் விட்டகன்று தம் இரு முதுகுரவருடன் கைலாயபுரத்தை அடைந்தனர். அங்கே அவர் அருள்பெற்ற செய்தியை முன்னரே கேட்டு உவகைகொண்ட நட்டாரும் உற்றாரும் அளவின்றித் திரண்டுவந்து கண்டு அறுமுகச் சிவத்தின் தலையளியைப் புகழ்ந்து, அவனைக் கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடினர். தந்தையாராகிய சண்முக சிகாமணிக் கவிராயர் குமரகுருபரருக்குச் செந்தமிழ் நூல்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் ஓதுவிப்பாரானார். குமரகுருபரரோ எடுத்த நூல்களை யெல்லாம் முன்னே படித்த பாடத்தைத் திருப்பிப் படிப்பவர்போலக் கற்றுச் சில காலத்திலே ஐயந்திரிபற அவற்றின் பொருணுட்பங்கள்யாவும் அறிந்துகொண்டனர். அவர் எத்தகைய நுண்பொருளையும் ஒரு முறையில் தெரிந்துகொள்ளுதலும், அங்ஙனம் தெரிந்துகொண்ட பொருளை எப்பொழுதும் மறவாமையும், அப்பொருளின் நயங்களைப் பிறரறியுமாறு எடுத்துரைக்கும் சொல்வன்மையும், செய்யுள் இயற்றும் திறனும் கல்விமாந்தர் யாவரை

யும் வியக்கச் செய்தன. இப்பொழுது இவருக்கு ஓர் இளவலும் தோன்றி இவருடன் ஒருங்கு கலைபயில்வாரானர். அவரும் கவிபாடிச் சிறந்த புலவரென மதிக்கப்பட்டனர். அதனல் அவர் குமார கவிகள் என வழங்கப்பட்டனர். அவரே குமாரகுருபரருக்குக் கையேடு வாசிப்பவர். அவரோடு இவரும் எப்பொழுதும் பிரியாமல் உறைவதைக் காண்போர் இவ்விருவோரும் இராம லட்சுமணரோ என்று கூறுவர். சிறிது காலம் சென்றதும் குமாரகுருபரர் தமக்கு அருள் அமுதம் வழங்கிய அறுமுகச் செல்வனை நினைந்துருகி, அவன்மீது 'திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா' என்னும் அன்பு கனிந்து சைவசித்தாந்தம் மணக்குஞ் சிரிய நூலைப் பாடியருளினர். அதனுள் சில அடிகளை கண்டெடுத்துக் காட்டுவாம்.

யானெனதென் றற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக—ஞானம்
திருவுருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!

பின் குமாரகுருபரர் மதுரைக்குப் போக விழைந்து, அங்கயற்கண் அம்மையார்மேல் 'மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்' என்னும் ஓர் அருமருந்தன்ன நூலைப் பாடி முடித்துப் பெற்ருேரிடம் விடைபெற்றுக்கொண்டு தம் இளையவரோடு அந்நகரத்துக்கு வழிக்கொண்டு திருப்பரங்கிரியை அடைந்து குமரவேளைத் தொழுதிருந்தனர். அற்றைக் கங்குலின்கண் மதுரையை அக்காலை அரசுபுரிந்துவந்த திருமலை நாயக்கர் கனவிலே கயற்கண்ணி தோன்றி, "அரசே, நம் இளைய மைந்தனுகிய கந்தன் அருள் பெற்ற புலவன் ஒருவன் நம்மேல் பிள்ளைத் தமிழ் பாடி வந்து

திருப்பரங்குன்றத்தே தங்கியுளன்; அவனை நீ பரிவாரங்களுடன் சென்று எதிர்கொண்டழைத்துப் போந்து அந்நூலை நமது சந்நிதியில் அரங்கேற்றுவிக்க," என்றருள் செய்தனள். திருமலை நாயக்கர் துயிலுணர்ந்து மறுநாள் தாம் கண்ட கனவினை யாவருக்கும் கூறி அம்மையார் பணித்தவாறே பரிவாரங்களுடன் திருப்பரங்கிரியை அடைந்து குமரகுருபரரைக் கண்டு வணங்கி, "அடிகளே, செல்வத்துட் செல்வமாகிய அருட்செல்வம் பெற்ற பெரியீர், தேவரீர் மதுரைக்கு எழுந்தருளி எம்பிராட்டிமேல் தாங்கள் பாடியருளிய பிள்ளைத் தமிழை அரங்கேற்றல் வேண்டும்; இஃது எம் அன்னையின் கட்டளையாகும்," என்று கூறி அவரையும் பிள்ளைத் தமிழையும் யானைமீ தேற்றிச் சிறப்புடன் மதுரையை வலம் செய்வித்தார். பிறகு திருக்கோயிலுக்குக் குமரகுருபரர் சென்று முறைப் படி வணங்கினர். அப்பொழுது உலகெலாம் ஈன்றும் கன்னியாகிய அம்மையார் தமக்குப் பிள்ளைத்தமிழ் பாடிக் கொணர்ந்த பிள்ளை களிக்கப் பிள்ளைத் திருக்கோலம் காட்டினாள். அதுவே தமது நூலுக்கு உகந்த பரிசிலெனக் கொண்ட குமரகுருபரர் அளவிலா இன்பம் அடைந்தார். பின் அரசர் ஒரு நன்னாள் நியமித்துப் பிள்ளைத் தமிழை அரங்கேற்றச் செய்வித்தார். அந்நூலின் சொல்லழகையும் பொருளழகையும் பல இனிய நோக்குக்களையும் கற்பனை அலங்காரங்களையும் புலவர்கள் கேட்டுப் பேரின்பம் கொண்டனர். சுவாமிகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவமாக அந்நூற்குப் பொருள் உரைத்து வந்தார். அவர் தம்பியாராகிய குமார கவிகளே ஒவ்வொரு பாட்டையும் படித்தனர். சுவாமிகள் சொல்வன்மையால் அவையினர் தம்மை மறந்து அன்பு வெள்ளத்திலே அங்ஙனே படிந்து விடுவர். இவ்வண்ணம் நடைபெற்று வருகையில் மூத்தப் பருவத்திலே,

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே! உயிராலை
வாலத் துணர்வென் னீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! உயிர்த்துணையாந்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தந் தருகவே!
* * *
* * * முத்தந்தருகவே!

என்னும் செய்யுளைக் கூறிப் பொருள் விரிக்குங்கால், மீனாட்சியம்மையார் அரசன் மகளாகத் தோன்றியிருந்து, தமது கழுத்தி லணிந்திருந்த முத்து வடத்தைக் கழற்றிச் சுவாமிகள் திருக்கழுத்தில் அணிந்தனர். முத்தப் பருவத்துப் பாடலுக்குப் பொருத்தமாக முத்துமாலை தரித்த அரசிளங்குமரியின் செயலைக்கண்டு அனைவரும் பேருவகை பூத்தனர்.

பின்னர் வருகைப் பருவத்திலே,

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய

இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!

என்னும் பாவைப் பாடி முடித்ததும், அரசிளங் குமரியாக இருந்த அம்பிகை அதனை இன்னுமொரு முறை கூறும்படி கேட்டு மகிழ்ந்து அப்பருவம் முடிந்தவுடன் மறைந்தருளினர். அப்பொழுது எல்லாரும் அங்கே எழுந்தருளியிருந்தவள் அம்மையே எனத் தெளிந்து, அடிகளின் திருவருட் செல்வத்தையும் தெய்வப் புலமையையும் வியந்து கொண்டாடினர். பின் பிள்ளைத் தமிழ் முற்றும் அரங்கேற்றஞ் செய்யப் பெற்றதும் அரசன் சுவாமிகளை அரியணைமீது அமர்வித்து, வீரகண்டா மணியைத் தரித்து, பொன்னாலும் மணியாலும் அபிடேகஞ் செய்து யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலிய விருதுகளைப் பரிசிலாக வழங்கினன்.

பின்பு சுவாமிகள் அந்நகரத்திலே பல நாள் வைகித் திருமலை நாயக்கர் வேண்டுகோளின்படி மீனாட்சி அம்மை மேல் குறம், இரட்டைமணிமாலை என்னும் இரண்டு நூல்களையும் இயற்றியருளினர். அவற்றுள் இரண்டொரு பாடல்களை இங்குத் தருவோம்.

குறம்

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி எடுப்
[போம்;.
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில் வைத்துத்
[தொடுப்போம்;

பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்
[போம்;
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே!

நீர்வாழி! தென்மதுரை நின்மலனார் அருள்வாழி!
கார்வாழி! அங்கயற்கட் கன்னிதிரு அருள்வாழி!
சீர்வாழி! கூடல்நகர்த் திருமலைபூ பதிவாழி!
பேர்வாழி! அவன்செல்வம் பெரிதூழி வாழியவே!

இரட்டைமணி மாலை

நேரிசை வெண்பா

நெஞ்சே திருக்கோயில் நீலுண் டிருண்டகுழல்
மஞ்சேந் தபிடேக வல்லிக்கு—விஞ்சி
வரும்அந்த கா!என் வழிவருதி யால்இக்
கருமந் தகாதுன் கருத்து.

கட்டளைக் கலித்துறை

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனினின்பைந்தாட்
பூவுண்டு நாரோன் றிலையாந் தொடுத்துப் புனைவதற்கே.

அதன் பின்பு மதுரைக் கலம்பகம் என்னும் நூலைச் சோமசுந்தரப் பெருமான்மீது பாடினார். அப்பொழுது ஒரு நாள் திருமலை நாயக்கர் நெடுநேரம் உண்ணாதிருந்தமையைக் கண்டு சுவாமிகள் 'வகுத்தான் வகுத்த வகை அல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது' என்னுந் தெய்வப் புலவர் திருவாக்கை எடுத்து மொழிய, அரசர் அதன் பொருள் யாதெனச் சுவாமிகளை வினவினார்.

சுவாமிகளும் அதன் பொருளை நன்கு விளக்கிக் காட்டினர். அதுகேட்ட அரசர் குமரகுருபரரை நோக்கி, "ஐயரே, இவ்வரிய நூலை முற்றும் கற்றல் அனைவருக்கும் எளிதன்று; எனக்கோ அதனைக் கேட்டு மகிழ நேரமில்லை; ஆதலின் என்பொருட்டு அதன் சாரங்கொண்ட ஒரு நீதி நூலை இயற்றித் தரவேண்டும்," என வேண்டச் சுவாமிகளும் அதற்கிணங்கி நீதி நெறி விளக்கம் எனப் பெயரிய அற நூலை எழுதி முடித்துத் திருமலை நாய்க்கருக்கு ஒவ்வொரு நாளும் எடுத்துரைத்து, அவருக்குத் தமிழ் விருந்து செய்து வந்தனர். மன்னரும் அவரைவிட்டுப் பிரிய விருப்பின்றி அங்கேயே அவரை இருத்திக்கொண்டார். சுவாமிகளும் சிவராசதானியும் துவாதசாந்தத் தலமு மாகிய மதுரை மாநகரின் கண்ணே பன்னெடு நாட்கள் இனிதுறைந்தனர்.

பின்னர், தமிழ்ச் செல்வர் தம் இளவலாகிய குமார கவிகளைக் கைலாசபுரத்துக்குச் சென்று பெற்றோர் விருப் பத்தின்படி கடிமணம் புரிந்து இல்லறத்தைக் கைக்கொள் ளப் பணித்து, அவர் பிரிவாற்றாமையைத் தேற்றி ஊருக்குச் செலவிடுத்தனர். அப்பால் அவர் வேந்தரிடம் சில தலங் களைத் தரிசிக்கவேண்டுமெனச் செப்பி, அவர்பால் விடை பெற்றுக் கொண்டு அவர் அளித்த வரிசைகளுடன் சோணாட்டை நோக்கிச் சென்றார். அவரைப் பின் தொடர்ந்து அரசரும் அமைச்சரும் வர, அவர் தமக்கெல் லாம் இன்னுரை வழங்கிப் புன்னகை காட்டி ஆண்டே நிறுத்தினர். குமரகுருபரர் சோணாட்டைச் சேர்ந்து திரிசிரபுரம் தாயுமானவர் தாள்பணிந்து திருவானைக்கா சென்று அகிலாண்ட நாயகியோடு இருந்த அப்பனைத் தொழுது வணங்கி, ஆங்காங்கு அடியார் குழுஉக் கொண்டு எதிரேற்ப ஒவ்வோரிடத்தும் சின்னாட்கள் தங்கிக் கமலால யம் எனப்படும் திருவாரூர் புக்குத் தியாகராஜப் பெரு

மானைத் தரிசித்தனர். ஆங்கு அவர்தம் உள்ளம் கரைந்து கரைந்துருக இன்ப மேலீட்டால் பாற்கடல் மடையுடைந்து பாய்வதுபோலப் பைந்தமிழ்ப் பாட்டால் நான்மணிமாலை ஒன்று பாடி யருளினர். அவ்விடத்து வதிந்தகாலைத் தருமபுர வாதீனத்தில் அஞ்ஞான்று நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாசிலாமணித் தேசிக சுவாமிகளுடைய திருவருள் விலாசத்தைக் கேள்வியுற்று, அவரைக் காண்பது கருதி இடையிலுள்ள தலங்களை யெல்லாம் தரிசித்துக்கொண்டு தருமபுரத்தை அடைந்தார்.

அடைந்த குமரகுருபரர் தேசிகரைத் தரிசிக்கச் சென்றனர். அவர் பன்மீன் நடுவண் பான்பதி போலவும், தாமரை நாப்பண் நான்முகன் போலவும் அடியார் கூட்டம் ஒரு புடை சூழவும், வேதாகம பண்டிதர் குழு மற்றொரு புடை சூழவும், புலவர் சங்கம் ஒருபுடை சூழவும், சைவாசாரியர் சபை ஒருபுடை சூழவும் தென்திசை நோக்கி அமர்ந்திருந்தார். அப்போது பரிசனங்கள் தொடர்ந்து வரப் பல விருதுகளோடும் சுவாமிகளும் சென்று தேசிக சுவாமிகள் சந்நிதானத்தில் உத்தரீயத்தோடு ஆசனத்தமர்ந்தார். தேசிகனரும் அவருக்குப் பல வினாக்கள் விடுப்பச் சுவாமிகள் தடையின்றி விடை சொல்லிக்கொண்டே வந்தனர். அதன்மேல் தேசிகராயர் திருப்புன்முறுவல் செய்து திருத்தொண்டர் புராணத்திலே உள்ள,

'ஐந்துபேர் அறிவுங் கண்களே கொள்ள
அருளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்

வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலர் மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

என்னும் திருப்பாடலில் அநுபவப் பயனை வினவ, குமர குருபரர் வாக்குத் தடைப்பட்டது; சொல் எழவில்லை; நாக்குழறிற்று; உடனே அவருக்கு முருகப் பெருமான் அருளிச்செயல் நினைவிற்கு வரத் தமது இருக்கைவிட்டு எழுந்து, உள்ளங் குழம்பி, ஆசனத்தை எடுத்தெறிந்து, மேற்கோளை இடையிலே கட்டிக்கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து கைகுவித்து, "குருமணியே, அடியேன் அறியாமையால் இழைத்த பிழையனைத்தும் பொறுத்தருளி என்னை ஆட்கொள்ள வேண்டும்," என்று வேண்டிக்கொண்டு பணிந்து நின்றார்.

அப்போது மாசிலாமணித் தேசிகர் அவரைக் கடைக் கணித்து, "அப்பா, நீ காசி யாத்திரை செய்துவிட்டு வந்த பின் உனக்கு உபதேசஞ் செய்வோம்," என்றருள் செய்தார். அது செவிமடுத்த அடிகள் மீண்டும் குருராயரைப் பார்த்து, 'என் அருட்கடலே, நான் காசிக்குச் சென்று மீள்வதற்கு இடையூறுகள் பல உள; அடியேன் செல்லு மிடையிலே பசியாலும் பிணியாலும் வெப்பம் தட்பம் முதலியவற்றின் மாறுபாட்டாலும் இறந்துபடினும் படலாம்; அங்ஙனம் இறந்தால் மீண்டும் மக்கள் யாக்கையே வருமென்ற துணிவும் இல்லை. ஆதலால் அடியேற்கு இப்பொழுதே ஞானோபதேசஞ் செய்யவேண்டும்,' என்று அவரது திருவடிகளைப் பன்முறைப் பணிந்தார். அக்காலை ஆசிரியர் திருவுளம் இரங்கி, "அன்ப, நீ காசிக்குச் செல்ல இயலாதாயின் தில்லைத் திருப்பதியையேனும் தரிசித்து மீள்வாயானால் உனக்கு உபதேசஞ் செய்வோம்," என்றனர்.

அடிகளார் ஆசிரியர் கட்டளையைத் தலைமேற்கொண்டு சிவிகையூர்ந்து தமது அடிமைத் திரளுடன் புள்ளிருக்கு

வேளூருக்குப் போய் அங்கே வைத்தியநாதனைத் தையல் நாயகி அம்மையோடு தொழுது, முத்துக்குமரனையும் வணங்கி மீளும் காலை, முத்துக்குமரன் அடிகளார் எதிரே ஓர் அருச்சகர் கோலத்துடன் தோன்றி அவருக்குத் திருநீறு நல்கி, "எம்மைக் குறித்தோர் பிள்ளைக்கவி சொல்லுக," என்று கூறியருளி மறைந்தனன். இன்னணம் அருள் முகிழ்த்த வள்ளல் அறுமுகப் பெருமானே என்றறிந்த சுவாமிகள் நிலத்தில் தலை தோய விழுந்து வணங்கி மறைந்தருளிய இடம் நோக்கி மெய்ம்மயிர் சிலிர்த்து விம்மி அழுது நாத்தழுதழுத்து, "எளியேனை ஆட்கொண்டருளிய கருணைப் பிரவாகமே, தேவரீர் அளப்பருங்கவினை எங்ஙனம் பாடுவேன்!" என்று திகைத்து நிற்புழி அவன் அருளால் 'பொன் பூத்த குடுமி' என்றோர் ஆகாயவாணி எழுந்தது. அதனையே அடிகள் முதலாகக்கொண்டு, தீஞ்சுவை தமிழ்க்கே உண்டு என்னும் உண்மையைச் சாதிப்பார் போலப் பாடி முடித்தார். அதனைப் பாடி வருங்கால் 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்,' 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்' என்பன போன்ற தொடர்கள் பிறர் வாயில் நிகழ, அவற்றைத் திருவருட் செயலென எண்ணித் தமது நூலகத்தே பெய்துரைத்தனர். அந்நூலை முத்துக்குமாரசுவாமி சந்நிதியிலே புலவர் குழாத்திடை அரங்கேற்றி அனைவருடைய புகழ்மாலைகளையும் சூடிக்கொண்டு ஆண்டுப் பலநாள் வைகினர்.

பின்பு குமரகுருபர அடிகள் பாலறுவாயராகிய திருஞான சம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த திப்பிய திருப்பதியாம் சீர்காழியைக் கண்டு வணங்கி, தில்லை மூதூர் எல்லையைக் குறுகி, ஆனந்த நடன சிகாமணியின் அருட் சேவடிகளை முப்போதும் வழுத்தி வணங்கி நெஞ்சத் தழுத்தி யிருந்தனர். அக்காலத்தில் அத்தலத்தைச் சுட்டி மும்மணிக்கோவை ஒன்றும் பாடியருளினர். அத்தலத்தி

ஹுள்ள சிவனடியாருட் சிலர், யாப்பருங்கலவுரை முதலிய நூல்களில் உள்ள உதாரணச் செய்யுட்கள் சைனமதத்தைச் சேர்ந்தனவாக இருத்தலின், சிவபெருமான் விஷயமாகச் செய்யு ளிலக்கணத்துக்கு இலக்கியமாக ஒன்று பாடித் தரும்படி கேட்டுக்கொள்ள அங்ஙனமே சிதம்பரச் செய்யுட் கோவை யென்னும் நூலைப் பாடினர். அப்பால் சின்னாட்சென்றவளவில் சிவகாமி இரட்டைமணிமாலை என்னும் தீஞ்சுவை நூலையும் செய்தருளினர். இங்ஙனம் ஒரு மண்டலம் வரை ஆசிரியர் பணித்தவாறு தில்லையம் பதியின் கண்ணே வதிந்து, பின் அவ்வணி நகரைப் பிரிய மனமின்றிப் பிரிந்து தம் தேசிகரைக் கண்டார்; பின்பு அவர்மீது பண்டார மும்மணிக் கோவை என்னும் அழகிய சித்தாந்தத் தேன் பிலிற்றும் நூலையும் இயற்றி அவர் சந்நிதியில் அரங்கேற்றினர். மாசிலாமணித் தேசிகர் மிகவும் மகிழ்ந்து, குமரகுருபரரை நோக்கி, "அப்பா, நீ இயல்பாகவே துறவி; எனினும் வான் முறைக்குக் குறைவாரா வண்ணம் கல்லாடை முதலிய அடையாளங்களைப் புனைந்து கொள்க," என்றருளிச் செய்து அவற்றை நல்கி அடிமை கொண்டார். ஞானோபதேசம் பெற்ற சுவாமிகள் அணுக்கத் தொண்டராக இலங்கி வந்தனர். அப்பொழுது பின் வரும் செய்யுளைப் பாடினர்.

பூதங் கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்தசொல்
வாதங் கடந்து மனோலயமாய் இந்து மண்டலம்போய்
நாதங் கடந்து நடுவெளித் தாண்டி நலஞ்சிறந்த
போதங் கடந்தின்பப் பூரணமாகிப் பொலிந்ததுவே.

இப்பால் சுவாமிகள் தாம் திருமலை நாய்க்கரிடத்தும் பிறரிடத்தும் பரிசாகப்பெற்ற பொருட்டிரள்களை யெல்லாம் ஞானாசாரியர் திருமுன்னர் அடியுறையாக வைத்து அவற்றை ஏற்றருள வேண்டிக்கொண்டனர். அவர் அடி

களை நோக்கி, “ நீ காசிமாநகரஞ் சென்று மடஞ் சமைத்து இவற்றைக் கொண்டு அறஞ் செய்க,” என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அப்பணி தலைமேற்கொண்ட அடிகளாற் தமது பொருள்களை யெல்லாம் ஒட்டகங்களின் மேலேற்றிக் கொண்டு, பரிசனங்களுடன் தருமபுரத்தை நீங்கி, இடையேயுள்ள சிவ நகரங்களைக் கண்டு வணங்கிக் கச்சி பம்பதியை அடைந்து மாவடியிற் பெருமானையும் வணங்கினர். பின்னர் அவர் திருக்காளத்தி மலையைச் சேர்ந்து, அன்பெலாம் ஒரு பிழம்பெனத் திரண்ட கண்ணப்பரையும் காளத்திநாதரையும் ஞானப்பூங்கோதை அம்மையாரையும் தொழுது காசியம்பதியிற் புகுந்தனர். புகுந்தவர்க்குப் புது மகிழ்ச்சி உண்டாயிற்று. கங்கை கரைபுரண்டு ஓடுவதைக் கண் குளிரக் கண்டு களிப்புற்றார். ஆனல் அக்கடவுள் மாநதியின் இருமருங்கும் காடுகள் அடர்ந்து பள்ளியும் கல்லறைகளுமே நிறைந்திருத்தலைக் கண்டு நெஞ்சம் நீராய் உருகினர். ‘இங்கே எம்பெருமானும் உளனே!” என்று ஏங்கித் துயில்கொண்ட சுவாமிகள் கனவினிடைக் கேதாரத்தில் எழுந்தருளிய சிவ பெருமான் காட்சி தந்து, “நீ எம்மைப் பூசனைப் புரிவாயாக,” என்றலர்வாய் பூத்தனர். அங்ஙனமே அடிகள் திருக்கேதாரம்புக்குக் காடுகொன்று அதன் நாப்பண் எழுந்தருளிய வள்ளலாருக்கு வழிபாடாற்றி வாழ்த்தி விசுவநாதரை விசாலாட்சியாரோடு அருச்சித் தேத்தினர். பின் சில பகலில் அந்நகரின்மேல் காசிக் கலம்பகம் என்னும் அரிய பெரிய நூலை அருளிச் செய்தனர்.

அங்கே அவர் உறையும் நாளிலே அந்நகரை அப்போது ஆண்டுவந்த முகம்மதிய மன்னனை நேரிற்கண்டு மடங்கட்ட மனை பெறவேண்டி இந்துஸ்தானி பாஷை

யைப் பயிலத் தொடங்கினர். தொடங்கினவர் தமக்கு விரைவில் அருள் செய்யுமாறு கலைமகள்மேல் முன்னிலைப் பரவலாகச் 'சகலகலாவல்லி மாலை' என்னும் சிறு நூலை இயற்றினர். சுவாமிகளும் அம்மொழியைஎளிதில்உணர்ந்து தேர்ந்தார். அதன்பின் அடிகள் மன்னனைக் காணச் சென்றனர். அவனோ சுவாமிகளின் அருமைபெருமை தெரியாத புறச் சமயத்தானதலின், அவரை நிற்கவைத்துத் தான் அரியணைமீதிருந்த வண்ணம் அவர் வரலாற்றை வினவினன். அப்பொழுது அவர், இதனால் தமக்குக் குறைவு யாதும் இன்றேனும் அரசற்கு ஏதம் விளைதல் திண்ணமாதலின் அருள் சுரந்து, அவனை நோக்கி, "அரசே, நீர் துறவியாகிய நம்மை இங்ஙனம் நிறுத்திக் கேட்டல் தகுதியன்று," என்றுரைத்தனர். அதுகேட்ட கோமான் "ஐயா, உம்மிடத்தில் ஏதேனும் தெய்விகச் செயல் காணப்பட்டால் அன்றி நான் வெறும் தோற்றத்திற்கு மட்டும் பெருமை கொடுக்க மாட்டேன்," என்று மொழிந்தான். அது செவி நுழைந்த வளவிலே அடிகள், "அரசே, நாம் நாளைக்கு உமக்குத் தெய்விகம் காட்டுவோம்" என்று பகர்ந்து தமது இருப்பிடத்தை அடைந்தார். மறுநாள் சுவாமிகள் காளிதேவியின் அருளால் ஒரு அரிமாவின்மேல் இவர்ந்து அரசவை அடைந்தார். அவையினர் அஞ்சி ஓடினர்; அரையனும் நடுங்கினன். அக்காலை சுவாமிகள், "அரசே, நீர் இருப்பது உயிரற்ற சிங்கம்; நாம் வீற்றிருப்பது உயிர் உற்ற சிங்கம்; ஆனல் இஃது உமது கண்களுக்கு மட்டும் ஆவாகத் தோன்றும்; நீர் அஞ்சவேண்டா," என்று இசைத்து அதன் மீதிருந்தே அவன் வினயவற்றிற் கெல்லாம் விடையளித்துவந்தார். அரையன் சுவாமிகள் சொல்லழகையும் அன்பின் பெருக்கையும் அறிவு நுட்பத்தையும் தெய்வத் தன்மையுங் கண்டு இறும்பூது எய்தி அவரை வணங்கி அவரோடு நண்புற்று மகிழ்ந்திருந்தான்.

வேந்தன் குமரகுருபரரை இங்ஙனம் விரும்பி அவரோடு நட்புரிமை பூண்டு வாழ்தலைக் கண்டு முகம்மதியர் பலர் அழுக்காறு கொண்டனர். மன்னனோ ஒவ்வொரு நாளும் சுவாமிகளைப் பிரசங்கஞ் செய்யச் சொல்லிக் கேட்டுக்கேட்டுப் பேரின்பக் கடலிலே மூழ்குவான். அவர் எச்சுவையைப்பற்றிக் கூறினும் அச்சுவையினை வந்திருந்த மக்களும் அடைவர். அவர் வீரச்சுவையைப் பற்றிப் பிரசங்கித்தால் கிழவரும் மீசை துடிப்ப, தாடியை உருவிக்கொண்டு வீராவேசத்தைப் பெறுவர்; அவலச்சுவையைப் பற்றிப் பிரசங்கித்தால் அனைவரும் கண்ணீர் விட்டழுவர்; நகைச்சுவையைப் பற்றிக் கூறின் எல்லாரும் விலாவிற நகைப்பர்; பக்திச்சுவையைப் பற்றிச் சொல்வாராயின் யாவரும் அன்பினுல் விழுங்கப்பட்டு, மெய்ம்மறந்து, அன்புக் கண்ணீர் வடிப்பர். இங்ஙனம் நடைபெற்று வருங்கால் ஒரு நாள் அரசனிடத்தே அணுக்கராகவுள்ள முகம்மதியர் சிலர் அவனை நோக்கி, "மன்னரேறே, குமரகுருபரர் கல்வியறிவும் நுண்ணறிவும் சிறந்த பண்பும்வாய்ந்தவர் என்பதில் சிறிதும் ஐயமின்று; ஆனல் அவர் கைக்கொண்ட கடவுளோ பொய்," என்றனர். இவற்றைக் கேட்ட வேந்தன் சுவாமிகளுக்கு அதனை எடுத்துரைத்தான். அப்பொழுது சுவாமிகள் மௌனஞ் சாதித்து மறுநாள் முகம்மதியர் அனைவருக்கும் தமது சமயத்தின் பெருமையை புலப்படுத்த விரும்பி எல்லாருடைய முன்பும் அவர் கூறியவாறு பழுக்கக் காய்ச்சிய இரும்பைக்கொணர்வித்து தமது கையகத்தே ஏந்தி நின்று, "வையகத்தே சைவசமயமே மெய்ச்சமயம்" என்றனர். அவ்வற்புதங் கண்டார் அனைவரும் அவருடைய தெய்வத் தன்மையினைப் பலபடப் பாராட்டினர்கள். அரசனும் குமரகுருபரர் உண்மைத் துறவியெனக் கொண்டான். ஆனல் பொறாமைப்பேயால் பிடியுண்ட முகம்மதியர் சிலர் மட்டும் "இஃதென்ன கண்

கட்டு வித்தை," என்று கொன்னே மொழிந்து, முகம் புலர்ந்து தலை கவிழ்ந்து நின்றனர்.

பின்பு ஒருநாள் அரசனிடம் சிலர் சென்று, "அரசே, துறவிகட்குச் சாதிபேதம் இன்மையாமல் குமரகுருபர சுவாமிகளுக்கு அரண்மனையிலே விருந்து செய்விக்கவேண்டும்" என்று கூறினர். அவர்கள் அவ்வாறு கூறியதன் கருத்து யாதெனின், சுவாமிகள் விருந்தைத் தடுப்பார்; அப்பொழுது அரசனுக்கு அவர்பால் வெறுப்புப் பிறக்கும் என்பதாம். ஆனல், மன்னவன் விருந்து செய்யவேண்டுமென அடிகளிடத்துக் கூறினவுடன் அவர் ஒன்றுங்கூருது ஒப்புக்கொண்டனர். அரசனும் திடுக்கிட்டான். பின் குறித்த நாளிலே சுவாமிகள் தமது அடியான் ஒருவனை ஒரு பொற்றட்டிலே சில செவ்வரத்த மலரை வைத்து வெண்பரி வட்டத்தால் மறைத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். சுவாமிகள் முற்போந்து அரசனுடன் ஆண்டுள்ள கறிவகைகளை யெல்லாம் தமது கண்களால் நோக்கி, அவை ஒவ்வொன்றின் பெயரையும் புன்னகையுடன் கேட்டுக்கொண்டே வந்து இறுதியில் வேந்தனை நோக்கி, "எல்லா இறைச்சிகளும் இருக்கின்றன; ஒரே விலங்கின் இறைச்சி மட்டும் விலங்கி இருக்கிறது. அதனை நான் நிறப்புவேன்," என்றுரைத்துத் தமது அடியானைக் கடைக்கணித்தார். உடனே அவன் தான் கொணர்ந்த தட்டைத் திறந்தான்; அதிலுள்ள செவ்வரத்தம் பூக்கள் பன்றி இறைச்சியைப்போல இருந்தன. அவை அன்னவாதலைக் கண்ட அரையன் நாணி முகம் கவிழ்ந்தான்; முகம்மதியர்களுள் இச் சூழ்ச்சி செய்தோர் சுவாமிகள் தம்மை அவமதித்ததாக எண்ணினர். ஆனல் உடனே அடிகளார் அக் கறிகள் அனைத்தையும் மறுமுறை திருக்கண் மலர்ந்து நோக்கலும் அவையெல்லாம் ஒவ்வொரு செழுநறுங் கனியாய், அடிகள் அன்புபோலத் திப்பிய மணமும் கண்களைக்

கவரும் திறமும் உடையவாய்த் திகழ்ந்தன. பொருமை கொண்ட முகம்மதியரும் மனமலர்ந்து அவரைக் கொண்டாடினர். அரசன் குமாரகுருபரரைப் பணிந்து, தமக்கு வேண்டிய குறை யாதென வினவினன். அவர் தாம் அறக் கோட்டம் அமைப்பதற்குக் காசிமா நகரிலே ஓரிடம் வேண்டும் என்று கேட்டனர். அரசன் அவர் விரும்பிய எவ்விடத்தையும் தருவதாக உறுதிமொழி தந்தான். அடிகள் மறுநாள் தமக்கு வேண்டும் இடத்தைக் கூறுவதாகச் செப்பி அவனிடம் விடைபெற்றுத் தமது இருப்பிடத்தை அடைந்தார். அன்றிரவு அவருடைய கனவிலே, " உபய கருடன் வட்டமிடும் இடத்தைக்கேட்டுப் பெறுவாயாக," என்று கேதாரநாதர் சாதித்தருளினர். மறு பகல் நாட்கடன் முடித்து அடிகளார், திருவருளை வழுத்தி வெளிப்போதலும் கேதார கட்டத்தின் அருகே அரசன் பள்ளி வாயிலில் இரண்டு புட்கள் வட்ட மிடுதலை நோக்கி, உளமகிழ்ந்து அவ்விடத்தைக் குறிப்பிட்டு அரசனைக் கேட்டார். அவன் யாதொரு தடையுங் கூறுது கொடுத்து அவருக்கு மடம் சமைத்தற்கு வேண்டிய பல உதவிகளையும் புரிந்து சிறப்புக்களும் செய்தான். சுவாமிகள் மடம் கட்டி முடித்து, எல்லாச் சிறப்புக்களும் பொருந்த அறம் வளர்த்து வந்தனர். அதற்குக் குமாரசுவாமி மடம் எனப் பெயர் இன்றும் வழங்குகிறது. சுவாமிகள் அத்திருமடத்திலே தங்கி வாழும் காலத்தே திருமலை நாயக்கர் தந்த பொருளைக்கொண்டு அவர் பெயரால் ஒரு சத்திரம் கட்டுவித்தார்; அன்றியும் கேதாரநாதருக்குத் திருக்கோயில் எடுப்பித்து, அதற்கு வேண்டிய நித்திய நைமித்தியங்களை ஏற்படுத்தி நடத்தினர். பின்னர் தம் ஞானசாரியரைத் தரிசிக்க விழைந்து, காசியை அரிதின் அகன்று தருமபுரத்தை அடைந்து ஆசிரியரைப் பணிந்து சில திங்கள் அவருடன் உறைந்து, பின் அவர் கட்டளைப்படி காசிக்குச்

சென்றனர். இங்ஙனம் சுவாமிகள் மும்முறை தருமபுரம் வந்து மீண்டு, நான்காமுறை தமக்கு ஆசிரியரை விட்டுப் பிரிய விருப்ப மின்மையைத் தெரிவிக்க, அவர் சுவாமிகளைக் கருணை ததும்ப நோக்கி,

'காட்டிருந் தாலும் மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலும் நமக்கென்ன காணல்ல தோர்கவலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே.'

என்ற பாட்டை அருளிச் செய்து, அருணோக்கம் பாலித்துத் தேற்றி அனுப்பினர். அடிகளாரும் காசியை மீண்டும் அடைந்து அறங்களைக் குறைவற நடத்திச் சிவானுபூதிச் செல்வராய் வீற்றிருந்து, வைகாசித் திங்கள் தேய்பிறையில் திருதியையிலே சிவபெருமான் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தனர்.

வேதம் என்னும் பாதபம் வளர்த்தனை ;
பாதபம் அதனிற் படுபயன் பலவே ;
அவற்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே ; இலைஒரீ இத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிர்ஒரீஇ
அரும்பொடும் மலர்பிஞ் சருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே ;
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமெ றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே.

—பண்டார மும்மணிக் கோவை.

---

5. சிவப்பிரகாசர்

தொண்டை நாட்டின்கண்ணே சிறந்து திகழும் கச்சியம்பதியென வழங்கும் காஞ்சிபுரம் என்னும் நகரத்திலே ஏறக்குறைய இருநூற்றெண்பது ஆண்டுகட்கு முன்னர்க் குமாரசுவாமி தேசிகர் எனப் பெயரிய சான்றோர் ஒருவர் இருந்தனர். அவர் வேளாளருக்குத் தீக்ஷாகுருவாய் அனைவரானும் நன்கு மதிக்கப்பட்டு வந்தனர்; அவருக்குச் சமயாசாரமும் வைதிக ஞானமும் சம்பிரதாய அறிவும் கிரியாபத்தி விவேகமும் நிரம்பவும் உண்டு. அவர் ஒருகால் தீபதரிசனம் செய்யும் பொருட்டுத் திருவண்ணாமலையை நோக்கிப் புறப்பட்டார். அங்ஙனம் புறப்பட்டவர் வழியிலே ஒரு நந்தவனத்தில் சிறிதுநேரம் வைகிச் சிவபூசை முடித்து, அன்றைநாள் மாலையிலேயே அண்ணாமலையை அடைந்தார்; அடைந்ததும் ஈசானிய தீர்த்தத்திலே அநுட்டானஞ் செய்துகொண்டு, பூசைப் பெட்டகம் காணாராய் அருகிலுள்ளவரை நோக்கி, "பூசைப் பேடகம் எங்கே?" என்று வினவினர். அவர்கள் அங்குமிங்கும் துருவிப் பார்த்தும் பேழை அகப்படாமையால், அது தாம் பகலிலே தங்கியிருந்த சோலையிலே மறந்து வைத்துவிடப் பட்டதெனக் கொண்டு அதனைச் சொல்வதற்கு அஞ்சி வாய்குழறக் கூறினர். அது கேட்ட தேசிகர் பெரிதும் வருந்திப் பரிசனங்களை ஆண்டுச் சென்று பார்த்து வரும்படி கட்டளையிட்டு, "அந்தோ! என் உயிருக்கு உறுதி பயக்க வல்ல உடையவரை விட்டுப் பிரிய நேர்ந்ததே!" என்று பேரஞர் எய்தி அன்றிரவு முழுதும் துயிலின்றி இறைவன் அருளை வழுத்திக் கொண்டிருந்தனர். அப்போது அண்ணாமலையார் அவர் உண்மையன்புக்கு இரங்கி ஒரு சங்கமத் திருவுருத் தாங்கி அவரை அடைந்தார். அத்தகைய சிவவேடத்தைக் கண்ட மாத்திரத்தே

காந்தத்தைக் கண்ட இருப்பைப் போலத் தேசிகர் எதிர் சென்று வணங்கித் தமக்கு நேரிட்ட இடரைத் தெரிவித்தார். சிவபெருமான் அவர்பால் அருணோக்கம் வைத்து, "நீர் அங்கம் வேறு இலிங்கம் வேறாக இருந்தமையானன்றோ இவ்விடர் விளைந்தது. இலிங்காங்க சம்பந்தியாய் இருப்பின் இங்ஙனம் நேரிடாதன்றோ; உமது பூசைப் பேடகம் நாலைக் காலை உம்மிடம் வந்து சேரும்; நீர் இன்று தொடங்கி இலிங்கதாரணம் செய்துகொள்வீராக," என்று அருள் செய்தனர். அதற்குத் தேசிகர் அங்ஙனம் செய்யின் தமது மாணவரும் உறவினரும் அதனை ஒப்புக்கொள்ளவேண்டுமே எனக் கூறினர். அதற்குப் பெருமான், "மாணாக்கராலும் சுற்றத்தாராலும் உமக்கு வரும் பயன் யாதும் இல்லை; நீர் நமது ஆணைவழியே சிவலிங்கதாரணஞ் செய்து கொள்வீராக; இக்கோயிலுக்குத் தென்பாலுள்ள மடத்திலிருக்கும் குருதேவரிடத்தில் தாரண தீக்கை செய்துகொள்க," என்று வற்புறுத்திக் கூறி அங்ஙனமே குருதேவருக்கும் கட்டளையிட்டு மறைந்தருளினர்.

மறுநாட் காலையில் தேசிகனார் சிவபெருமான் அருள் செய்தாங்குப் பூசைப் பெட்டகம் வரப்பெற்று மகிழ்ந்திருக்கும் அளவிலே ஸ்ரீ குருதேவரால் செலுத்தப்பெற்ற அடியார்களோடு அப்புண்ணிய சீலர் மடாலயத்தை அடைந்து, அவரால் தாரண தீக்கை செய்யப்பட்டனர். பின் கார்த்திகை விளக்கைக் கண்டு களிப்பென்னுங் கடலுள் மூழ்கி, ஆரியரிடம் விடைபெற்றுச் சென்று கச்சிமாநகரத்தைச் சார்ந்தார். சில நாட்களிலெல்லாம் அவருக்கு அம்மையப்பன் அருள் செய்த வண்ணம் அரும்புதல்வர் மூவரும் புதல்வி ஒருத்தியும் பிறந்தனர். அவர்கட்கு முறையே தேசிகராயர் சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பிகை எனத் திருநாமஞ் சூட்டி

வர். இந்நால்வரும் வளர்பிறை யென வளர்ந்து, கல்வி பயின்று வருங்காலத்தில் தேசிகர் சிவலிங்கவைக்கியமாயினர். இளம்பருவத்திலேயே பெற்ற அரிய தந்தையை இழந்த மக்கள் பட்ட துயருக்கு ஓரளவில்லை. பின்னர், மூத்தவராகிய சிவப்பிரகாசர் தமக்கு இனிய உடன் பிறப்பாளரோடு அருணகிரிக்குச் சென்று குருதேவரை வழிபட்டுக்கொண்டும் செந்தமிழ் இலக்கியங்களைப் பயின்றும் வந்தனர்; சிவப்பிரகாசர் தாம் கற்கும் நூல்களை ஆழ்ந்து கற்று வருவார் ; அவற்றிலுள்ள நுணுக்கங்களை மனத்திலே பதித்துக்கொண்டு அவற்றின் சுவைகளை எண்ணி யெண்ணிச் சுவைப்பார். இலக்கிய அறிவு மேன்மேலும் மிகப் பெற்ற சிவப்பிரகாசர் இதுபோழ்து யாப்பியலும் அறிந்து செய்யுள் செய்து வருவாராயினர். இங்ஙனம் இருக்கும் நாட்களில் ஒருநாள் சோணசைலத்தைத் திருவலம்செய்து வருகையில் அம்மலை தமது அறிவை மயக்கி அன்பெனும் அமுதைச் சொரிந்து விட்டமையால் அதனைச் சுட்டி சோணசைலமாலை என்னும் வருணனையும் அழகும் அன்புச் சுவையும் ஒருங்கே அமைந்த ஒரு பிரபந்தத்தைப் பாடினார். அதன்கண்ணுள்ள ஒரு செய்யுளைக் கீழ்க் குறிப்பிடுவோம் :

தவக்கற அறிந்து பிறக்கும்ஆ ரூருந்
          துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்
உவப்புடன் நினைத்து மரிக்கும்ஓர் பதியும்
          ஒக்குமோ நினைக்கும்நின் நகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
          படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கல நடத்த உயர்ந்தெழும் சோண
          சைலனே ! கைலநா யகனே !

இந்நூலைப் பாடியபின் சிவப்பிரகாசருக்குச் சீர்த்தி மிகுவதாயிற்று. அதன்மேல் அவர் பேரிலக்கணமாகிய

தொல்காப்பியம் முதலியவற்றை மரபுநிலை திரியா ஆசிரியரிடம் கற்க விரும்பித் தம் தம்பிமார்களோடு தென்னாட்டிற்குச் செல்லத் தொடங்கித் துறைமங்கலம் என்னும் பதிக்கண்ணுள்ள ஓர் இள மாக்காவிலே சிவபூசனை செய்து கொண்டிருந்தார். அக்காலை அக் கிராமாதிகாரியாகிய அண்ணாமலை ரெட்டியார் என்பவர் அவரைக் கண்டு வணங்கிப் பேரன்புடன் அவ்விடத்திலே உறைந்தருள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளச் சிவப்பிரகாசர் அதற்கு உடன்பட்டனர். அதன்மேல் அண்ணாமலை ரெட்டியார் தம் குருமணியாராகிய சென்ன விசுவையர் மடத்திற்கு மேற்கே ஒரு திருமடங் கட்டுவித்து, அவரை எழுந்தருள்வித்து அவருக்கு அணுக்கத் தொண்டராய் அமைந்திருந்தார். சிவப்பிரகாசரும் அவருக்குப் பொருளுரை மொழிந்து கொண்டு ஈராண்டு ஆண்டுறைந்தனர்.

அப்புறம் சிவப்பிரகாசர் தமது கருத்தை அவருக்குக் குறிப்பிட்டுத் திருநெல்வேலியைச்சேர்ந்து நெல்லையப்பரை வடிவம்மையோடு வணங்கித் தாமிரபரணி நதி தீரத்திலே உள்ள சிந்து பூந்துறையில் தருமபுர வாதீனத்து வெள்ளியம்பல சுவாமிகள் இலக்கண இலக்கியங்களைக் கரை கண்டவர் என்பதைக் கேள்வியுற்று அவரிடம் சென்று வணங்கித் தமது உட்கோளைப் புலப்படுத்தினர். அவ்வடிகள் சிவப்பிரகாசருடைய இலக்கியப் பயிற்சி இத் துணைத்தென அறியக் கருதி அவரை நோக்கி, "கு எனத் தொடங்கி, ஊருடையான் என இடைப்பெய்து கு என ஒரு வெண்பா முடிக்க," எனப் பணிப்பச் சிவப்பிரகாசர்,

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னம்அணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

என்னும் பாவைத் தாழ்த்தாது கூறினர். சுவாமிகள் "வடக்கோடு தேருடையான்" எனச் சிவப்பிரகாசர் அமைத்த நுண்மையை வியந்து அவரைத் தழீஇக்கொண்டு அவருக்கும் அவர் இளவல்கள் இருவருக்கும் ஐந்திலக்கணங்களையும் தெளிவாகச் சில நாட்களிலே கற்பித்தனர். அப்போது சிவப்பிரகாசர் கழிபேருவகை பூத்துத் தமக்கு அண்ணாமலை ரெட்டியார் வழிச் செலவிற்காக வழங்கிய முந்நூறு பொன்னையும் குரு காணிக்கையாக வைத்து வணங்கினர். சுவாமிகள், "இது நமக்கு விருப்பின்று; பிறரைப் பழித்தலையே தொழிலாகக் கொண்டு செந்திலம் பதியிலே உறையும் தமிழ்ப் புலவனை வென்று என் முன்னிலையிலே நிறுத்துக; இதுவே நாம் வேண்டும் குரு காணிக்கை," என்றுரைத்துப் பொன்னை மறுத்தனர்.

ஆசிரியர் உள்ளக் கிடக்கையை உணர்ந்த சிவப்பிரகாசர் அங்ஙனமே செய்ய ஒருப்பட்டுத் திருச்செந்தூருக்குச் சென்று, அங்கே அலையெறிவாயிலில் கன்மனத்தையும் கரைக்கும் வண்ணம் அருங்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருட்கடலாகிய அறுமுக அமுதை ஆர்வமிக்க கண்களால் வாரியுண்டு அளப்பரும் இன்ப வாரியில் திளைத்தார். அங்கே சிவப்பிரகாசரைச் சூழ மாணவர் இருத்தலாலும் அவர்தம் கைகளில் ஏடுகள் பொருந்தியிருத்தலாலும் மற்றுமுள்ள சில அடையாளங்களாலும் அவரைப் புலவரென அறிந்த பழி தூற்றும் புலவர், சிவப்பிரகாசர் வெள்ளியம்பலவாண அடிகளிடத்தே பாடங் கேட்டவரெனத் தெரிந்துகொண்டு, திருக்கோயிலை விட்டு வெளிப்போந்த அவர் முன்னிலையில் வெள்ளியம்பல வாணரைத் தூற்றுவான் புகுந்தார். அதனைச் செவியிற் பழுக்கக் காய்ச்சிய நாராசம்போலக் கொண்ட சிவப்பிரகாசர் அவர் இழிதரு செயலைக் கண்டித்துவெறுத்துரைக்க, புலவர் ஒரு புதிய வகையால் சிவப்பிரகாசரைப் புறங்காண விழைந்து,

"அரும் பெரும் புலவீர், நாம் இருவரும் 'நிரோட்டக யமகம்' பாடுவோம்; அங்ஙனம் பாடுவதற்கு முடியாதார் யாவரோ அவரே இருவருள் தோற்றவர் ஆவோம்; அங்ஙனம் தோற்றவர் வென்றவருக்கு அடிமையாதல் வேண்டும்," எனச் சூளுறவு கூறினர். அதைக் கேட்ட சிவப்பிரகாசர், "நன்று! நன்று! நமது எண்ணம் நிறைவேறுவதற்கு இதுவே சிறந்த வாயில்; இவர் தாமே வலையில் அகப்பட்டுக் கொண்டார்," என்றுவகை கூர்ந்து அவர் சூளுறவிற் கிணங்கி உடனே அத்தெய்வத் திருநகரைச் சுட்டி நிரோட்டகயமக அந்தாதித் தொடையாக முப்பது கட்டளைக் கலித்துறைகளைப் பாடினர். அவற்றுள் ஒரு செய்யுளை அடியிலே காண்க.

> தினகர னந்த னனியிலங் காநின்ற செய்யாநற்செந்
> தினகர னந்த நிதியா யினனடற் சீரயிலேந்
> தினகர னந்த கனைசெற்ற தாளர் திகழ்கனகா
> தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே.

அவ்வழுக்காற்றுப் புலவருக்கோ ஒரு பாட்டுக் கூட ஓடவில்லை; மருந்துக்கும், ஒருபாவும் உதடு படாமல் யமகமாகப் பாட முடியாது போன வாய்மதப் புலவர் வெட்கித் தமது சிறுமையினை உணர்ந்து, சிவப்பிரகாசரைத் தொழுது தாம் அடிமையாயினமையினை எடுத்துரைத்தனர். சிவப்பிரகாசர் அவரை ஆதீனத்திற்கு அழைத்து வந்து, வெள்ளியம்பலவாண சுவாமிகளுக்கு அகம்படிமைத் தொழில் பூணச் செய்தனர். புலவரும் அடங்கி ஒடுங்கி அம்பலவாணர் பெருமையை உணர்ந்து இனிது வாழ்ந்து வந்தனர். பின்னர்ச் சுவாமிகள் சிவப்பிரகாசரைப் பார்த்து, "மைந்தனே, நீ முதன் முதல் சொற்பப் பாவிலே சிவபெருமானுக்குரிய திப்பியபதி தில்லையெனக் குறித்திருத்தலால் அங்குச் சென்று சிறிது காலம் உறைந்து பின் வருவாயாக," என்று விடை தந்தனுப்பினர்.

சிவப்பிரகாசர் அருந்தவ அந்தணர் இட்ட கட்டளை யினைச் சிரமேற்கொண்டு அப்பதியை விட்டகன்று ஆங்குள்ள பல திருப்பதிகளையும் தரிசித்துக்கொண்டு, துறைமங்கலத்தைச் சார்ந்து அண்ணாமலை ரெட்டியாரோடு அளவளாவி யிருந்து அவருக்குத் தண்ணருள் சுரந்து அவர் வேண்டுகோளுக் கிணங்கி அவரது ஆட்சியில் அடங்கிய திருவெங்கைமா நகரத்திலே தம் பொருட்டு அவரால் அமைக்கப்பட்ட திருமடத்திலே வீற்றிருந்தனர். அங்கே எழுந்தருளியுள்ள பழமலைநாதர்மீது கோவை, கலம்பகம், அலங்காரம் என்னும் நூல்களையும் இயற்றியருளினர். அவை சிலவற்றுள் தாலிபுலாக நியாயம் பற்றி ஒவ்வொரு செய்யுள் எடுத்துக் காட்டுதும்.

கோவை

எனையா டியபதத் தாளவோன் திருவெங்கை ஏந்திழை நீ
சுனையா டியமணிப் பொன்னூச லாடிச் செழுங்குவளைச்
சுனையாடி வண்டல் விளையாடி முத்தந் துவன்றியஅம்
மனையாடி வந்தனை யோ? திரு மேனி வருந்தியதே!

கலம்பகம்

புண்ணியன்நம் வெங்கைப் புனிதன் அயன் மாலெதிரே
அண்ணலரும் பேரொளியாய் அன்றெழுந்தான் அம்மானை;
அண்ணலரும் பேரொளியாய் அன்றெழுந்தான் ஆமாகிற்
கண்ணில்அவர் எளிதிற் காணாரோ அம்மானை;
கண்ணின்றிக் காணுங் கதிரொளிகாண் அம்மானை.

அங்ஙனம் இருக்கும் நாட்களிலே ஒருநாள் அவ்வூர் பிடாரிக்குத் திருவிழா வரத் தேர்விழாவன்று, அது மோதியதனால் தமது மடத்தே இருந்து அடியார் பலர்க்கும் பயன்பட்டு வந்த முருங்கை மரம் அழிந்தமை கண்டு,

திருந்துதமிழ் இலக்கண ஐந் திணைக்கோவை
திருவெங்கைச் செல்வற் கோதும்

பெருந்தகைமை உடையம்யாம் விடும்ஓலை
வெங்கைநகர்ப் பிடாரி காண்க;
இரும்புவியில் ஒருமுருங்கைக் கொம்பொடியா
மற்காத்திங் கிருக்கும் நீநம்
முருங்கைதனை வேரொடுங் களைந்தனைஎன்
ருல்உனக்கு முறையு தாமோ?

என்னும் அழகிய யாப்பை அருளிச் செய்தமட்டில் அத் தேர் அழிந்தொழிந்தது. பின்பு சிலகாலஞ் சென்றதும் அவ்வூரினின்றும் நீங்கித் துறைமங்கலத்தை எய்தினர். அக்காலத்தே அண்ணுமலை ரெட்டியார் சிவப்பிரகாசரை அணுகி மணம் புரிந்துகொண்டு மனையறத்தைக் கைக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளச் சிவப்பிரகாச சுவாமி கள் பின்வரும் பாடல்களைக் கூறித் தமது மனக்கோளைத் தெள்ளிதின் உணர்த்தி யருளினர்.

சேய்கொண்டா ருங்கமலர் செம்மலுட னேஅரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டிச் சுரத்தானே!
நோய்கொண்டா லுங்கொளலாம்; நூறுவயதளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம்; பெண்கொள்ளல்
ஆகாதே.

நிட்டையிலே இருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகம் கிடைக்கும்; காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே?

அண்ணுமலை ரெட்டியார் அடிகள் கருத்தறிந்து கொண்டு அப்புறம் அவர் இளவல் இருவருக்கும் மணம் புரிவிக்க, அவ்விருவரையும் அடிகள் இல்வாழ்க்கையிலே

புகுத்தித் தாம் மட்டும் துறவறத்தைக் கைக்கொண்டு நின்ருர். அவர்கள் மணவினை நிகழ்ந்தஞான்று விநோதமாகச் சில கவிகளைப் பாடி அவர்கட்கு வாழ்த்துரை மொழிந்தனர். அவற்றுள் ஒன்று வருமாறு:

அரன்அவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
'ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினன்,' என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே, அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினனென
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து,'நீ அப்படி
விகடம்ஏன் செய்தாய்?'என
'மருவும்என கைந்நீளம் முழம்அளந் தான்,'என
மயிலவன் நகைத்து நிற்க,
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி,'நின்
மைந்தரைப் பாராய்,'என
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாய் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக்கவே.

பின்னர்ச் சுவாமிகள் தமக்கு இன்னுயிர் அடியாராகிய அண்ணாமலை ரெட்டியாரோடு சிதம்பரத்தை அடைந்து, திருச்சிற்றம்பலத்தே நடனசிகாமணியை ஒன்றியிருந்து நினைந்து, கசிந்துருகி ஆனந்த சாகரத்தில் அழுந்திஞர். அப்பால் அவ் வரும்பதிக்கண் திருமடம் ஒன்று சமைப்பித்துக்கொண்டு அதன்கண் எழுந்தருளிச் சமயகுரவர் நால்வர் அருட்பெருஞ் செல்வத்தை உன்னியுன்னி உள்ளங்குழைந்து நான்மணிமாலை என்னும் இனிய பக்தி ரசம் பொங்கிவழியும் நூலை அருளிச் செய்தார். அப்பாட்டுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணிபோலத்

திகழும்; அவற்றுள் வடமொழி மறைக்கும் தமிழ் மறைக்கும் பேதங்காட்டியுள்ள அநுபவப்பாடல் என்பை உருக்கி இன்பைப் பெருக்குவது;

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரணமொழியோ,
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்த தென்குவி ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவா சகமிங் கொருகால் ஓதில்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே.

அத்தலத்தின் கண்ணேயே சுவாமிகள் சிவப்பிரகாசம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை முதலிய நூல்களையும் அருளிச் செய்தனர். பின் அடிகளாற் அப்பதியை அரிதிற் பிரிந்து, பிறதலங்களை வணங்கிக்கொண்டு திருக்காட்டுப் பள்ளியைச் சேர்ந்து சிவதரிசனம் செய்துகொண்டு சில பகல் தங்கியிருந்தனர். அக்காலை கல்வி மிக்க கட்டழகி ஒருத்தி வீதிக்கண்ணே உப்புப் பகர்ந்து செல்லுதலைக் கண்டு இரங்கித் திருக்கண்சாத்தி அவளது ஆகூழையும் பரிபக்குவ காலத்தையும் உணர்ந்து அவற்றைப் பிறரும் தெரிந்து கொள்ளவேண்டி,

நிறைய உளதோ எளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான்—உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய்! நீயிங்
கிருக்காட்டும் பள்ளி எமக்கு.

என்னும் வெள்ளைக் கவி இசைத்தலும் அப்பெண்ணலங் கனிந்த பாவை

> 'தென்னுங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
> பொன்னுங்கு சேவடியைப் போற்றினேம்.—அன்னேன்
> திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டவிட்டோம்; திராக்
> கருக்கூட்டம் போக்கினேம் காண்.'

என்னும் பாடலைப் பாடித் தரிசன வேதியின் எதிர்ப்பட்ட கரும் பொன்னென நெஞ்சங் குழைந்து, விழுந்து வணங்கி எழுந்து, மலர்க்கரங் கூப்பி நின்ருள். அத்தையலுக்கு அடிகள் உண்மை ஞானம் வருமாறு அருட்பார்வை செலுத்தி ஆட்கொண்டனர்.

அப்பால் காஞ்சிநகரைக் கண்ணுறக் கருதி அண்ணாமலை ரெட்டியாருடன் புறப்பட்டு வரும்போது வழியிலே சாந்தலிங்க சுவாமிகள் என்னும் ஞானசிகாமணியைக் கண்டு கலந்துறவாடி அளவளாவினர். அவர் தாம் பேரூரினின்றும் புறப்பட்டுச் சிவஞானப்பாலைய தேசிகரைக் காணும் பொருட்டுப் பொம்மைய பாளையத்துக்குச் செல்வதாகக் கூறச் சிவப்பிரகாசரும் பெருமகிழ்வுடன் தாமும் தேசிகா மணியைக்காண விரும்பி அவருடன் சென்ருர். இருவரும் பொம்மைய பாளையத்துக்கு அணித்தாயுள்ள புத்துப்பட்டு என்னும் ஊரிற் புக்கதும் சாந்தலிங்க சுவாமிகள் தேசிக சுவாமிகளைக் குறித்துச் சில வாழ்த்துப் பாடல்கள் பாட வேண்டுமெனச் சிவப்பிரகாசரைக் கேட்டுக்கொள்ள அடிகளார் தாம் நர கவனம் செய்வதில்லையென மறுத்துவிட்டனர். இருவரும் அன்றிரவு ஐயனர் கோவிலின் புறம்பில் துயில் கொண்டனர். அப்பொழுது சிவப்பிரகாசர் முருகப் பெருமானர் மயிலிலேறித் தம்பால் எழுந்தருளி ஒரு பாத்திரத்திலே விடு மலர்களை வைத்து அவற்றைத் தொடுத்துத் தமக்குச் சாத்தும்படி கூறியருளியதாகக் கனவு கண்டதனைச் சாந்தலிங்கருக்கு அறிவித்தனர். அவர்

"சிவஞானபாலைய தேசிகர் செவ்வேளிடத்துச் சிறந்த தலையன்புடையவராதலின் அவனே தன் அடியவர் அன்பின் திறத்தைப் புலப்படுத்தத் திருவுளங்கொண்டு இங்ஙனம் அருள் செய்தா னாகற்பாலது இஃது," என்றுரைத்தனர். அப்பொழுது சிவப்பிரகாசர் அவர்மீது தாலாட்டு, நெஞ்சு விடுதூது என்னும் நூல்களைப் பாடிச் சாந்தலிங்கரை மகிழ் வித்து ஞானதேசிகரைக் கண்டனர்; அவர் திருமுன்னர் இரண்டு நூல்களையும் அரங்கேற்றி அடியவர் எல்லாருக் கும் இன்பவமுதை ஈந்தனர். பின் அவ்வாசிரியருடைய அருமை பெருமைகளை அறிந்து அவருக்கு அடியவரானர். அப்பெரியோர் பணித்த வண்ணம் தம் இனிய தங்கையா ராகிய அறிவும் அழகும் மிக்க ஞானம்பிகை என்னும் மாதரசியைச் சாந்தலிங்க சுவாமிகட்கு மணம் புரிவித்து, அவருடன் அனுப்பிவிட்டுத் தம்மை நிழல்போல விட்டுப் பிரியாதிருக்கும் அண்ணாமலை ரெட்டியாரைத் துறைமங்க லத்துக்கு வற்புறுத்திச் செலுத்தித் தாம் ஒருவர் மட்டும் ஞான தேசிகரைத் தொழுதுகொண்டு பல வைகல் வதிந் தனர்.

சுவாமிகள் சிறிது காலங்கழிந்த பிறகு ஆசிரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு காஞ்சிமா நகரத்தை அடைந்து வாழ்ந்து வந்தனர்; அக்காலத்தே வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களை அருளிச் செய்தார். அன்றியும் பிரபு தேவர் சரித்திரமாகிய பிரபுலிங்கலீலை என்னும் மதுரம் கனிந்தொழுகும் நூலைக் கற்பனைக் களஞ் சியமாக இயற்றியருளினர். அதன்மேல் ஞானதேசிகனைக் காணவேண்டு மென்னும் பேரவாப் பிடர் பிடித்துந்த அவர் திருவுருவத்தை உள்ளக் கிழியிற் பொறித்து, நினைந் துருகி அவர்மீது திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத் தமிழ் என் னும் இரண்டு இனிய நூல்களையும் பாடி முடித்தனர். அதன்மேல் திருக்கூவம் என்னுந் தலத்தை அடைந்து

ஆண்டு வாழும் செல்வமும் கல்வியும் மிக்குத் திகழ் காரா ளர் வேண்டுகோளுக்கு இசைந்து, திருக்கூவப்புராணம் செய்து அரங்கேற்றினர்.

அந்நூல்களின் பாக்கள் இரண்டொன்று வருமாறு:

திருப்பள்ளியெழுச்சி

தாதவிடு நம்பிவரு கிலன்; சிலையால் எறிந்த
 தொண்டன் இலை; விசயனும்வில் லோடும்வந்தான்
 இல்லை;
ஏதம்அறும் இயற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தார்
 இல்லை;நினை மண்சுமஎன் றொருபிரம்பால் அடித்
 தோன்
போதிலன்நின் திருவடியிற் போதுகள்தூய்ப் பரவிப்
 போற்றலுறும் அடியவரே பொருந்தினர்எம் மருங்கும்;
சேமதி தறந்தமுடி மகுவுசிவ ஞான
 தேசிகனே! அருண்மலையே! பள்ளிஎழுந் தருளே.

பிரபுலிங்கலீலை

உயிர்த்த பொழுதே நின்குரல்கே ளாமுன் ஓடிற் றீன்றதாய்
நயத்தின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத்
 துறந்ததால்
பயத்த மலர்ப்பூங் காவகத்தில் இருந்து பல்காற் கூவினால்
செயிர்த்து நின்னைக் குயிலே! நான் வெறுத்தல் செப்ப
 வேண்டுமோ?

பின்னர் முனிவர் ஞானசாரியரை அடைந்து, அவர் சந்நிதானத்திலே எல்லா நூல்களையும் அரங்கேற்றி அனை வரையும் உவகைக் கடலில் திளைக்கச் செய்தனர். அங்ங னம் முனிவர் தம் ஆசிரியரோடு உடனுறைந்து பல நுண் ணிய பொருள்களை ஆராய்ந்துகொண்டிருக்கும் நாட்களிலே ஒருநாள் திங்கள் தோற்றஞ் செய்யக் கண்டு,

 கடன்முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றுல் ஏறி
 அடைமதி விண்கழைநின் றூடக்—கொடைமருவும்

எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்

என்னும் வெண்பாவை அருளிச் செய்தனர்.

பின்னர் முனிவர் ஆசிரியர் பணித்தவாறே விருத்த கிரியை அடைந்து, பழமலை அப்பரையும் பெரிய நாயகி அம்மையாரையும் தரிசித்துத் தொழுது அவண் அவருக்கு ஒரு மடம் அமைத்துக்கொடுத்த சிதம்பர பூபதியின் அடிமைத்திறனைச் சிறப்பித்து,

வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கும்
எங்கட் கினிய சிவஞான தேவன் இசைவுகொடு
திங்கட் பவனி இருகான் முதுகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கும் மடமிதுவே.

என்னும் கவியை யாத்து, அதன்கண் வீற்றிருந்து பழமலையந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை முதலிய நூல்களைத் திருவாய் மலர்ந்தனர்.

சுவாமிகள் ஒருநாள் மணிமுத்த நதியிலே நீராடி முடித்து வெளியேறும் வேளையில் அதன் அண்மைக்கண்ணுள்ள மாஞ்சோலையின் புறத்தே விழுந்து கிடந்த மாங்கனி ஒன்றைச் சிவலிங்கப் பெருமான் நைவேத்தியத்தின் பொருட்டு எடுத்து மடியிலே வைத்தனர். அஃதறிந்த அச்சோலைக் காவலாளன் சிறிதும் அஞ்சாது அவரை அணுகிப் பலவாறு வைது மடிபிடித்திழுத்துத் துன்புறுத்தினன். அது பொறாத சுவாமிகள் சினந்து,

அடுத்துவரும் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவுஞ் சத்தியமே ஆனால்,—எடுத்ததொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.

என்றொரு தூக்கைச் சொல்ல அவன் செங்கதிர் கன்னிகா லக்கினத்திலே புக்கதும் இறந்துபட்டான்.

சில வைகல் கழிந்ததும் சிவஞான தேசிகர் இட்ட லிங்க பாசிவத்திலே கலந்தருளியது கேள்வியுற்றுப் பொம்மபுரத்தைக் குறுகி, அவர் பிரிவாற்ருமைக்குப் பெரிதும் வருந்தித் தாயைப் பிரிந்த சேய்போலத் தளர்வாயினர்; பின்பு அவர் நன்னெறி நாற்பது என்னும் சிறு நூலை மாணவர் பொருட்டு இயற்றித் தலங்கடோறுஞ்சென்று திருப்பாடல்களால் வாழ்த்தி நல்லாற்றூரை நண்ணினர். இச் சமயத்தில் தம் கட்டளைப்படி வெங்கைமா நகரத்திலே வைகி யிருந்த சிறிய தம்பியாராகிய கருணைப் பிரகாசர் இட்டலிங்கவகவல் பாடி முடித்துத் திருக்காளத்திப் புராணம் பாடத் தொடங்கி அது முற்றுப்பெறுமுன் பதினெட்டாம் ஆண்டிலே சிவலிங்க வைக்கிய மாயினர் என்னுந் துன்பமான செய்தியைக்கேட்டு மன முளைந்து ஆங்குச் சென்று,

முன்னமொரு தமிழ்ப்புலவன் தனையுண்டு
கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதும்உரைத் தமையாமுன்
நினைக்கவர்ந்து தடங்கா ளத்தி
மன்னவன்உண் டான்எனது மாதவத்தின்
வலிதிர மண்ணின் மீதே
என்னுடன்வந் தவதரித்த இளங்கருணைப்
பிரகாசன் என்னுங் கோவே!

என்னும் விருத்தத்தை வருத்தத்தோடு பாடினர். அப்பொழுது ஆண்டு வந்திருந்த சுவாமிகள் முன்னிளவலாகிய வேலைய சுவாமிகள்,

'ஆண்டதனுல் எனை ஒவ்வாய் வித்தையினில்
தமையனினும் அதிகம் என்றே
பூண்டஉல கதனின் உள்ளோர் புகல்வதுகேட்
டிந்துமென்ன புதுமை தானே

காண்டகுகன் மணியே!நல் இளங்கருணைப்
பிரகாசக் காளாய்! நீதான்
மாண்டனை என் றறிந்திருந்தும் உயிர்தரித்தேன்
யானும்மிக வன்னெஞ் சேனே!

என்னும் பாட்டைப் பாடிச் சுவாமிகளைப் பிரிய மனமின்றி நிற்ப, சுவாமிகள் அவருக்கு ஒருவாறு தேற்றாவு கூறி நிறுத்தி, நல்லாற்றூரை எய்திப் பல சிறு நூல்களையும் திருக்காளத்திப் புராணத்தில் கண்ணப்பச் சருக்கத்தையும் நக்கீரச் சருக்கத்தையும் செய்து மேலதனை முடிப்பதற்குள் தமது முப்பத்திரண்டாம் அகவையில் இட்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினர். அப்பொழுது வேலைய சுவாமிகள்,

'அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்—முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்'

என்று பாடி அளப்பருந் துன்பத் தளக்கரின் மூழ்கினர்.

முப்பத்திரண்டு ஆண்டுகள் முற்றுப்பெருமுன் பற்பல நூல்களைக் கல்வி மணமும் கற்பனை அழகும் அலங்கார அமைதியும் சொற்சுவையும் சாத்திரப் பொருண்மையும் பொருந்தவும், அன்புச்சுவை ததும்பவும் செய்தருளித் துறவொழுக்கம் பூண்டு தமிழகத்துக்குப் பெருநலம் புரிந்த இச்செந்தமிழ்ச் செல்வச் சிந்தாமணிக்குத் தமிழுலகு புரியுங் கைம்மாறும் உளதோ?

'கோலம் போலக் குணமுஞ் சிறந்து
பாலுந் தேனும் பாகுங் கைப்பச்
சொற்சுவை தோயத் தொன்னலம் பொலியக்
கற்பனைச் செந்தேன் காண்டொறும் பொழியப்
பொருட்சுவை பூரித் திருகரை புரள
முப்பான் மேலும் முதுதமிழ் நூல்களைத்

தப்பா துரைத்த தமிழ்க்கட லோரின்
அறிவைக் கல்வி யாற்றலை நிறைவைச்
செறிவைத் திறவின் செம்மையைச் சொல்லின்
வன்மையை வளனை வகுத்துரை மதுகை
இன்மையை நோக்கி இரங்குமென் மனனே.'

மணி. திருநாவுக்கரசு முதலியார்.
